நிதியாதாரங்கள் கண்டறியப்பட்டு, 2014-2015 ஆம் ஆண்டில் இப்பணிகளை எடுத்துக்கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள்.

**திரு. கடம்பூர் ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் மக்களுக்கு நிதிநிலை அறிக்கையை சமர்ப்பிக்கின்ற இந்திய தமிழகமே, இதே ஆண்டில், விரைவில் இந்தியத் துணைக் கண்டத்திற்கு நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்க இருக்கின்ற நாளைய பாரதமே, (மேசையைத் தட்டும் ஒலி) புகாரில் சிக்கி, திஹாருக்குச் சென்று தமிழனுக்குத் தலைகுனிவை ஏற்படுத்திய அவலத்தைப் போக்கி, உலக அரங்கில் தமிழனை தலைநிமிரச் செய்த உலகத் தமிழர்களின் உன்னதக் காவலரே, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் வணங்குகின்றேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லரசு, கோரிக்கை வைத்தவுடன், வினா வருகின்ற நேரத்திலேயே அது பரிசீலனை செய்யப்படுமென்று சொல்லி, ரூ.5 கோடி மதிப்பீட்டில் கோவில்பட்டி நகராட்சியின் பொன்விழா ஆண்டில் புதிய அலுவலகக் கட்டடம் கட்டித் தர ஆவன செய்யப்படுமென்று உறுதியளித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைக் கூறி, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

**திரு. இரா. அண்ணாதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை, தெப்பக்குளம் காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்காக மதுரை மாநகராட்சி நிருவாகத்திடம் இடம் வேண்டுமெனக் கோரப்பட்டது. அதற்கான இடமும் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளது. எனவே, அதை விரைந்து வழங்கி, காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.



2014 ஜனவரி 31]

முற்பகல் 10-20

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உள்ளாட்சி அமைப்புகளான, பேரூராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும், மாநகராட்சிகளுக்கும் கட்டடங்கள் தேவை எனக் கேட்பார் என்று கருதினேன். ஆனால், காவல் துறைக்குக் கேட்டிருக்கின்றார். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, எப்போதுமே சட்டம்-ஒழுங்கைப் பாதுகாத்துக் கொண்டிருக்கின்ற காவல் துறைக்கு முன்னுரிமை கொடுத்து, எல்லாவிதமான வாய்ப்புகளையும், வசதிகளையும் செய்து கொண்டிருக்கிறது. அதனையொட்டி, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கை உடனடியாக நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

**திரு. மு.வீ. கருப்பையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட சோழவந்தான் பேரூராட்சி மற்றும் வாடிப்பட்டி பேரூராட்சி அலுவலகங்களில் போதுமான இட வசதி இல்லாத காரணத்தினால், அதை விரிவாக்கம் செய்து தரும் வகையில், புதிய இடத்தைக் கண்டறிந்து, புதியதாக கட்டடம் கட்டிக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பையேற்றபிறகு, அரசு அலுவலகங்கள் செயல்பட்டுவரும் பழமையான கட்டடங்கள் அனைத்துக்கும் புதிய கட்டடங்கள் கட்ட வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். அதனடிப்படையிலே, எல்லாத் துறைகளிலும் கட்டடங்கள்

*கட்டப்பட்டு வருகின்றன. உதாரணத்திற்கு எடுத்துச் சொல்லவேண்டுமானால், நீதித் துறையை எடுத்துக் கொண்டால், 915 நீதிமன்றங்கள் இருக்கின்றன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, அவற்றில் கிட்டத்தட்ட 88 விழுக்காடு அளவிற்குப் புதிய கட்டடங்களை, அதுவும் சொந்தக் கட்டடங்களை கட்டித் தருவதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள்.*

*அதனடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கைகளை ஏற்று, அந்தப் பேரூராட்சியில் நிலம் இருக்கின்றபட்சத்தில், ஏனென்று சொன்னால், பேரூராட்சிப் பகுதிகள் இன்றைக்கு வளர்ந்து வருகின்ற காரணத்தினால், மையப் பகுதிகளில் உரிய இடங்களில் நிலம் இல்லாமல் இருக்கின்றது. எனவே, நிலத்தைக் கண்டறிந்து, அதைக் கையகப்படுத்தி, பின்னர் புதிய கட்டடங்கள் கட்டித் தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.*

**திரு. கே. உலகநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி நகராட்சியில், 2009 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட புதிய கட்டடப் பணிகள், என்ன காரணமோ தெரியவில்லை; அவை அப்படியே நின்றுவிட்டன. அதற்கான காரணத்தைக் கண்டறிந்து, உடனடியாக அந்தக் கட்டடப் பணிகளைச் செய்து முடிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கை பரிசீலனை செய்யப்பட்டு, உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 3, மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**3—**

## வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகள்

***5735—திரு. ந. நஞ்சப்பன்:**

*மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலமாகக் குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் குடியிருப்புகள் கட்டும் திட்டம் ஏதும் இல்லை.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.*

**திரு. ந. நஞ்சப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், 3 பேரூராட்சிகளை உள்ளடக்கிய ஒரு ஒன்றியம். மாவட்டத்திலேயே வீட்டு வசதி வாரியத்தின்மூலமாக வீடுகள் கட்டப்படாத ஒரே வட்டம் பெண்ணாகரம் வட்டம்தான். பல்வேறு அரசுத் துறை அலுவலர்கள்கூட அங்கே தங்குவதற்கு வாய்ப்பில்லாமல், தருமபுரியை நோக்கிச் செல்கிறார்கள். எனவே, இவற்றையெல்லாம் அரசு கவனத்திலேகொண்டு, மறுபரிசீலனை செய்து, அதை நிறைவேற்றிட ஆவன செய்யுமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

[2014 ஜனவரி 31

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அலுவலர்களுக்கான வாடகைக் குடியிருப்புகள் மாவட்டத் தலைமையிடம் மற்றும் வருவாய்க் கோட்டத் தலைமையிடங்களில்தான் கட்டப்பட்டிருக்கின்றன. பெண்ணாகரம் வட்டாட்சியர் தலைமையிடம் ஆகும். தமிழ்நாட்டில் வட்டாட்சியர் தலைமையிடங்களில் வீட்டு வசதி வாரியத்தின்மூலமாகக் குடியிருப்புகள் கட்டப்படவில்லை. மேலும், பெண்ணாகரத்தில் 350 அரசு அலுவலர்கள்தான் பணிபுரிகிறார்கள். தருமபுரியில் கட்டப்பட்ட அரசு அலுவலர்களுக்கான வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளே காலியாக இருக்கின்றன. பெரும்பாலும், அரசு ஊழியர்கள் மாவட்டத் தலைநகரங்களில் இருக்கவே விரும்புகிறார்கள். அதனால் பெண்ணாகரத்தில் அக்குடியிருப்புகள் கட்டக்கூடிய வாய்ப்பு இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.*

**திரு. ந. நஞ்சப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்ணாகரம் பின்தங்கிய பகுதி என்பதை அரசு நன்கு அறியும்; மாண்புமிகு அமைச்சர் அவர்களும் நன்கு அறிவார்கள். சாதாரண மக்கள் குடியிருப்பதற்குக்கூட அங்கு குடியிருப்புகள் கட்டப்படவில்லை. அனைத்து வட்டங்களிலும் கட்டப்பட்ட நிலையில், பெண்ணாகரம் மட்டும் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்ற குறைபாட்டினைப் போக்கிடும் வகையில், அதைக் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பரிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.*



2014 ஜனவரி 31]

**திரு. மு. திராவிடமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட கூடலூர் வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகள் மிகவும் பழுதடைந்துள்ளன என்றும், அங்கு அரசு ஊழியர்கள் குடியிருக்க முடியாத சூழ்நிலை உள்ளது என்றும், கடந்த கூட்டத் தொடரிலே மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். அமைச்சர் அவர்களும் அதை சரிசெய்து கொடுப்போம் என்று உறுதியளித்தார். ஆனால், இதுநாள் வரையில் எந்தப் பணிகளும் தொடங்கப்படவில்லை. இனிமேலாவது அந்தப் பணிகளைச் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விழைகின்றேன்.*

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளைப் பழுதுபார்க்கும் பணிக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசில் 40 கோடி ரூபாய்க்கும் மேல் இந்த ஆண்டு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று இந்த ஆண்டே அக்கட்டடங்களில் பழுது நீக்கம் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.*

**திரு. க. பாண்டியராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்திற்கு அருகில் அரசு ஊழியர்களுக்காக கட்டப்பட்ட 742* Flats *அடங்கிய வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான கட்டடங்கள் தற்போது பழுதடைந்து, ஐந்து வருடங்களாக பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளன. எனவே, இவற்றை இடித்துவிட்டு புதிய கட்டடங்கள் கட்டித் தருவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

[2014 ஜனவரி 31

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய யோசனையை ஆய்வு செய்து, வாய்ப்புகள் இருப்பின் நிறைவேற்றித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 4, மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**4—**

### பட்டு நூற்பு நிலையம்

***14352—திரு. ர.ம. பாபு முருகவேல்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, ஆரணியில் பட்டு நூற்பு நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி உட்பட தமிழகத்தில் பட்டு நூற்பு விரிவாக்கம் செய்ய வாய்ப்புள்ள அனைத்துப் பகுதிகளிலும் தனியார் பட்டு நூற்பு நிலையங்கள் துவக்கி செயல்படுத்திட மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள் இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

**திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதிக்குட்பட்ட சேடப்பட்டி பகுதியில் ஏற்கெனவே மாண்புமிகு முதல்வர் அவர்களால் தொழிற்பேட்டைகள் அமைப்பதற்கான நிலம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த இடத்தில் தொழிற்பேட்டை



2014 ஜனவரி 31]

அமைப்பதற்குத் தேவையான கட்டடம் கட்டும் பணி எப்போது நடைபெறும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய கோரிக்கை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு கனிவுடன் பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 5, மாண்புமிகு உறுப்பினர் திரு.கே.பி. பரமசிவம், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**5—**

### அங்கன்வாடி மையக் கட்டடம்

***29895—திரு. கே.பி. பரமசிவம்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், வே. கள்ளிப்பாளையம் ஊராட்சியிலுள்ள வலையபாளையம் மற்றும் அகிலாண்டபுரத்தில் அங்கன்வாடி மையக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், வே. கள்ளிப்பாளையம் கிராம ஊராட்சியில் வலையபாளையம் அங்கன்வாடி மையக் கட்டடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால், அந்த மையம் தற்போது சமுதாய நலக் கூடத்தில் செயல்பட்டு வருகின்றது. அந்தக் கட்டடத்தை இடித்துவிட்டு, புதியதாக கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும்,

[2014 ஜனவரி 31

அகிலாண்டபுரத்தில் முதன்மை அங்கன்வாடி மையம் மற்றும் குறு அங்கன்வாடி மையம் என இரண்டு மையங்கள் இயங்கி வருகின்றன. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் இவ்விரு மையங்களுக்கும் கட்டடம் கட்ட நிலம் தேர்வு செய்யப்பட்டு, புதிய கட்டடங்கள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம் அவர்கள்.

**திரு. கே.பி. பரமசிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லாமை தீர்க்கின்ற இதய தெய்வமாய், இமயமே எதிர்நோக்கும் நாளைய பாரதமாய், 66 ஆவது பிறந்த நாள் காணும் வீரத்தின் விளை நிலமாய், (மேசையைத் தட்டும் ஒலி) வெற்றியின் பிறப்பிடமாய் வாழும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகின்றேன். ஆலயங்கள்தோறும் அன்னதானத் திட்டம் தந்த அட்சயபாத்திரமே, அங்கன்வாடியில் கற்போருக்கு கலவை சாதம் வழங்கிய கலைமகளே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் பல்லடம் தொகுதியில் 214 அங்கன்வாடி மையங்கள் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. இதில், 151 மையங்கள் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. மீதமுள்ள 63 மையங்கள் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. இவற்றிற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்,

முற்பகல் 10-30

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிஞ்சுக் குழந்தைகள் கொஞ்சமும் சிரமப்படக்கூடாது என்று, அங்கன்வாடி மையங்களில் உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த, ரூ.96.31 கோடி செலவில் அரசுக் கட்டடங்களில் இயங்கும் 9,873 அங்கன்வாடி



2014 ஜனவரி 31]

மையங்களிலுள்ள சிறிய அளவிலான பழுதுகளையும் மற்றும் பெரிய அளவிலான பழுதுகளையும் நீக்க மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 63 அங்கன்வாடி மையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர வேண்டுமென்ற கோரிக்கையை இங்கே வைத்திருக்கிறார்கள். இந்த அங்கன்வாடி மையங்களைக் கட்டுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் விருப்புரிமை நிதியிலிருந்தும், சட்டமன்றப் பேரவை உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்தும் கட்டிக்கொள்ளலாம் என்று அரசாணை இருக்கின்றது. ஆகவே, இந்த ஆண்டில் தரப்படக்கூடிய மேம்பாட்டு நிதி முழுவதனையும் பொங்கலூர் வட்டாரத்தில் அங்கன்வாடி மையக் கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பயன்படுத்திக்கொள்வதற்கு அவருக்கு விருப்பம் இருந்தால், பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம் அவர்கள்.

**திரு. கே.பி. பரமசிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து இரண்டு அங்கன்வாடி மையங்களைத்தான் கட்டுகின்ற வாய்ப்பு இருக்கின்றது. 63 அங்கன்வாடி மையங்களைக் கட்டுவதற்கு வாய்ப்பில்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு இதனைக் கொண்டுசென்று, பரிசீலனை செய்து, அங்கன்வாடி மையத்திற்குச் சொந்தக் கட்டடம் அமைத்துத் தருமாறு பணிவுடன் கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றவாறு, எந்தெந்தப் பகுதிகளில் அவசரமாக அங்கன்வாடி மையங்களுக்குக் கட்டடங்கள் தேவைப்படுகின்றதோ, அந்தப் பகுதிகளில் எல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவர்

தலைமையிலே நியமிக்கப்பட்டிருக்கக்கூடிய குழுவின்மூலம் அதனை ஆய்வு செய்து, அது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**6—**

## புதிய வகுப்பறைகள்

***32230—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அரசு கலைக் கல்லூரிக்குப் புதிய வகுப்பறைகள் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கல்லூரி அரசுக் கல்லூரியல்ல. அது மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரியாகும். 2012-2013 ஆம் ஆண்டில் அந்தக் கல்லூரியைத் தோற்றுவித்த பெருமை மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். இக்கல்லூரிக்கு நிரந்தரக் கட்டடம் கட்டித் தருவதற்கான பணிகள் அரசின் செயற்குறிப்பில் உள்ளன. அவற்றில் புதிய வகுப்பறைகளும் நிச்சயமாகக் கட்டித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் மூலமாக ஆரம்பிக்கப்பட்ட அந்த உறுப்புக் கல்லூரியில் மாணவர்கள் அமர்ந்து கல்வி பயில்வதற்கு சரியான இடவசதியோ, அடிப்படை வசதிகளோ இல்லாத அவல நிலை இருக்கிறது என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும்.





அடிப்படை வசதிகள் இல்லாமல் இருக்கும் அந்த உறுப்புக் கல்லூரியை அரசுக் கல்லூரியாக மாற்ற வேண்டிய பொறுப்பு அரசுக்கு உண்டு. கல்வி கற்றோர் அதிகமாகவுள்ள கன்னியாகுமரி மாவட்டத்தில் கல்வி வளர்ச்சிக்காக உடனடியாக தேவைப்படுகின்ற வகுப்பறைகளைக் கட்டித் தருவதற்கு அரசு முன்வர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் 19 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. மேலும், 25-க்கும் அதிகமான சமுதாயக் கல்லூரிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மக்களின் கல்வி வளர்ச்சிக்காக, ஒரு பல்கலைக்கழகம் அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிக்கு வகுப்பறைகள் கட்டிக் கொடுக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா என்ற கருத்தைத்தான் கேட்டிருந்தார். அதன் அடிப்படையில் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அக்கல்லூரிக்கு நிரந்தரக் கட்டடங்களைக் கட்டித் தரவும், கன்னியாகுமரி மாவட்டம் அகதீஸ்வரம் வட்டம், அழகாபுரம் கிராமத்தில் புல எண் 1,140-ல் அமைந்துள்ள 5 ஏக்கர் நிலப்பரப்பில், அதாவது உப்பளம் நிலப்பரப்பில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்குக் கட்டடம் கட்டுவதற்காக மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் 5 ஏக்கர் நிலத்தினை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இக்கட்டடம் கட்டுவதற்காக மாண்புமிகு முதல்வர் அம்மாவினுடைய அரசு 7 கோடியே 25 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கூடிய விரைவில் ஒப்பந்தப்புள்ளி கோரும் பணிகள் துவங்கப்பட்டு, மாணவர்களின் நலன் கருதி அங்கு வகுப்பறையும் நல்ல முறையில் கட்டித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2014 ஜனவரி 31

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு பல்கலைக்கழகம் அமைக்க வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறார். எதிர்காலத்தில் அங்கே ஒரு பல்கலைக்கழகம் அமைக்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் மேல்நிலை பட்ட மேற்படிப்பு மையம் தொடங்கப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்கிறேன். ஆனால், நீங்கள் எதிர்காலத்தில் புதிய பல்கலைக்கழகம் ஆரம்பிக்க வாய்ப்பிருக்கிறது என்று சொன்னீர்கள். நன்றி. ஆனால், அந்தப் புதிய பல்கலைக்கழகம் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய வகையிலே எந்த ஆண்டில் ஆரம்பிக்கப்படும் என்ற தகவலை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பல்கலைக்கழகத்தை உருவாக்குகிறபோது அதற்குக் குறைந்தது 100 ஏக்கர் அளவுக்கு நிலம் தேவைப்படுகிறது. ஒரு கல்லூரி துவங்க வேண்டுமென்று சொன்னால்கூட 10 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. இரண்டு ஆண்டுகளாக ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருக்கக்கூடிய கல்லூரிக்கு நிலம் கிடைப்பதிலே சிரமப்பட்டு, அங்கே உப்பளம் பகுதியிலிருந்து அதற்கான அரசாணை பெற்று நேற்றைக்குத்தான் அதற்கு நிலம் வந்திருக்கிறது. ஆக, அந்தப் பணி இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. எதிர்காலத்தில் மாணவர்களுடைய எண்ணிக்கையைக் கருதி, பல்கலைக்கழகத்தின் தேவை அறிந்து, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் அரசு எதிர்காலத்தில் பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2014 ஜனவரி 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் அரசு மகளிர் கல்லூரி 1963-லே தொடங்கப்பட்டு 50 ஆண்டுகள் கடந்து பொன்விழா கொண்டாடுகிறது. இத்தகைய சிறப்பு பெற்ற இக்கல்லூரியில் 3,700 மாணவர்கள் பயிலுகிறார்கள். 50 நிரந்தர விரிவுரையாளர்கள், 89 கௌரவ விரிவுரையாளர்கள் பணியாற்றுகிறார்கள். 30 இளங்கலை, முதுநிலை ஆராய்ச்சிப் பிரிவுகள், 67 வகுப்பறைகளுடன் இயங்கி வருகின்றன. தற்போது பொன்விழாவைக் குறிக்கும்வகையில் மதில் சுவர், திறந்தவெளி அரங்கம், சாலைகள் அமைக்க ஒன்றேகால் கோடி நிதி ஒதுக்கீடு செய்யக் கோரி அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பொன் விழா கொண்டாடும் மகளிர் கல்லூரிக்குக் கூடுதலாகத் தேவைப்படும் 15 வகுப்பறைகளைக் கட்டவும், 89 நிரந்தர விரிவுரையாளர்கள் நியமிக்கவும் முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ள ஒன்றேகால் கோடி ரூபாயை வழங்கவும் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இதுவரையில் இல்லாத அளவிற்கு அரசியல் ரீதியாகவோ, அரசு ரீதியாகவோ 36 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை உருவாக்கிய பெருமை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) அங்கே கல்லூரியை ஏற்படுத்தி மாணவர்கள் படிக்கும் இந்த நல்ல வேளையில், மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதுவரையில் இல்லாத அளவிற்கு ஆயிரம் கோடி ரூபாயை இந்தக் கல்லூரிகளுக்காக ஒதுக்கி இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களால் தொடங்கப்பட்டிருக்கிற 36 கல்லூரிகளுக்கும் இதுவரையில் ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேலே ஒதுக்கீடு செய்யப்பட்டு, tender விடப்பட்டு, அங்கு கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

[2014 ஜனவரி 31

இந்த வேளையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 50 ஆண்டுகளுக்கு மேலே இருக்கக்கூடிய அந்தக் கல்லூரிக்குப் பொன் விழா வருகிறது என்பதை மையமாக வைத்து, அங்கே கட்டடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை அரசுக்குப் பரிந்துரை செய்து அனுப்பினால், அந்தக் கோரிக்கையை மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய பார்வைக்கு எடுத்துச் சென்று அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 20 ஆண்டுக் காலமாக தவறான சிந்தனையில் தேவைக்கு அதிகமாக பொறியியல் கல்லூரிகள் வளர்ந்து அதன்மீது மோகம் ஏற்பட்டிருந்த நேரத்தில், தமிழகத்தில் சரியான கல்வித் திட்டத்தைக் கொடுத்து, ஆய்வுக்கும் ஆராய்ச்சிக்கும் உதவக்கூடிய கலைக் கல்லூரிகளை சரியான திசையில் கொண்டு செல்லும் நோக்கத்தோடு, நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக வரலாற்றில் என்றைக்கும் இல்லாத அளவிற்கு 36 கலைக் கல்லூரிகளைத் தொடங்கியதோடு மட்டுமல்லாமல், ஏற்கெனவே இயங்கிக்கொண்டிருந்த கல்லூரிகளுக்கெல்லாம் இங்கே இருக்கிற சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் கேட்ட அத்தனை பாடத் திட்டங்களையும் வாரி வழங்கியுள்ளார்கள். சாதாரண கல்லூரிகளில்கூட ஆராய்ச்சிப் படிப்புகளைப் (Ph.D.) படிக்கக்கூடிய அளவிற்குக் கொடுத்திருப்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் நாங்கள் மீண்டும் வரவேற்கிறோம். ஆனால், அவ்வாறு கொடுக்கப்பட்டாலும், சிவகங்கை மாவட்டத்தில் இருக்கக்கூடிய மன்னர் அரசு துரைசிங்கம் கல்லூரி, அரசு மகளிர் கலைக் கல்லூரி போன்ற கல்லூரிகளுக்கு தேவைக்கேற்ப அடிப்படை வசதிகளான கட்டடங்கள், ஆய்வுக் கூடங்கள், ஆடிட்டோரியம் இல்லாமல் இருக்கின்றன. எனவே, இந்த ஆண்டாவது அதற்கான நிதியை ஒதுக்கீடு செய்து, மாண்புமிகு தமிழக முதல்வருடைய நோக்கம் முழுமை பெறுவதற்கு மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் உதவி செய்வார்களா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.



2014 ஜனவரி 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே செயல்பட்டுக்கொண்டிருக்கும் அரசுக் கல்லூரிகளுக்கு இதுவரையில் இல்லாத அளவிற்கு ஒட்டுமொத்தமாக ஆய்வுக் கூடங்கள், வகுப்பறைகள், மேசைகள், நாற்காலிகள் போன்ற பொருட்களுக்கு 100 கோடி ரூபாயை மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி). அந்த 100 கோடி ரூபாயில் ஏற்கெனவே செயல்பட்டுக்கொண்டிருக்கும் அரசுக் கல்லூரிகளுக்குத் தேவையான ஆய்வுக் கூடங்கள், புத்தகங்கள், மேசைகள், நாற்காலிகள், கணினிகள், கழிப்பிட வசதிகள் போன்ற வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துக்கொண்டு வருகிறோம். மேலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, இதுவரையில் இல்லாத அளவிற்கு, பேராசிரியர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்றும், சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கோரிக்கையை ஏற்றும், அந்தப் பகுதி கல்லூரியினுடைய ஏழையெளிய மாணவர்களின் கோரிக்கையை ஏற்றும், புதியதாக கல்லூரியை உருவாக்கினால், அதிகமான நிதி தேவைப்படும் என்ற எண்ணத்தைக் கருத்தில் கொண்டுதான் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் புதுப்புதுப் பாடத் திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், காலத்திற்கேற்ற பாடத் திட்டங்களை அறிவித்து, அங்கே அதற்கான ஒரு வாய்ப்பையும் உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். மேலும் அந்த எண்ணிக்கையின் அடிப்படையில், புதிய கட்டடம் தேவைப்படுவது உண்மைதான். இவற்றை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரத்திலுள்ள அரசினர் மகளிர்

[2014 ஜனவரி 31

கல்லூரியில் கலையரங்கம் (Auditorium) இல்லாத குறை இருக்கிறது. அந்தக் குறையை நிவர்த்தி செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ஒரு கலையரங்கம் ஏற்படுத்திக் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் அவரவர் பகுதிகளில் புதிய பாடத் திட்டங்கள் உருவாக்கிக் கொடுத்திருக்கின்ற காரணத்தினால், புதிய வகுப்பறைக் கட்டடங்கள் எல்லாம் வேண்டுமென்று பல கோரிக்கைகளையெல்லாம் வைத்திருக்கிறார்கள். ஆகவே இதுபோன்ற தேவைகளை அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து சட்டமன்ற உறுப்பினர் ஒதுக்கிக் கொடுத்தால், உயர் கல்வி வளர்வதற்கும், மாணவர்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் வசதியாக இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.

**திரு டி.ஆர்.பி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடி அரசு கலைக் கல்லூரி அடிப்படை வசதிகள் இல்லாமல் மிகவும் மோசமான நிலையில் உள்ளது. ஏறத்தாழ 20 வகுப்பறைகளும், நான்கு ஆய்வுக் கூடங்களும் தேவைப்படுகின்றன. அத்தியாவசியத் தேவையான நூலகம்கூட அங்கு இல்லாத நிலை நிலவி வருகிறது. கணினி, பிரிண்டர் இல்லாமல் ஆசிரியர்களும், மாணவர்களும் சிரமப்படுகின்றார்கள். சிற்றுண்டி விடுதியும், மிதிவண்டி நிறுத்துமிடமும் அங்கே இல்லாமல் மாணவர்கள் மிகவும் பாதிப்பிற்குள்ளாகியிருக்கிறார்கள். To top it all, Hon'ble Speaker, the College doesn't even have a clean toilet facility. So, it is hugely humiliating to the girl students there. So, I hope the Honourable Minister will take note of this. The faculties also face the same problem.



2014 ஜனவரி 31]

ஏற்கெனவே நான் அங்கே ஏறத்தாழ 11 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பல திட்டங்களுக்குத் தொகையை ஒதுக்கியுள்ளேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைந்து, அதற்கான A.S.-ஐ வழங்கவேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உத்தரவு பிறப்பிப்பார்கள் என்று நம்புகிறேன். இதுபோன்ற பல வசதிகள் அங்கே இல்லாமல் மாணவர்கள் மிகவும் சிரமப்படுகின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக ஆய்வு செய்து, அவர்களுக்குத் தேவைப்படும் அனைத்து வசதிகளையும் பூர்த்தி செய்து தரவேண்டுமென்று மாணவர்கள் சார்பாகவும், பெற்றோர்கள் சார்பாகவும், தொகுதி மக்கள் சார்பாகவும் கேட்டு அமருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கல்லூரியில் அடிப்படை வசதிகள் இல்லையென்ற ஒரு செய்தியை இங்கே சொல்லியிருக்கிறார்கள். அது முற்றிலும் தவறான செய்தி. அடிப்படை வசதிகளான நூலக வசதி, கழிப்பிட வசதிகள், மேசைகள், நாற்காலிகள், கம்ப்யூட்டர்கள் தேவையென்கிற கோரிக்கை வந்ததன் அடிப்படையில்தான், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் இதுவரைக்கும் எந்த அரசும் ஒதுக்காத அளவிற்கு, ஒட்டுமொத்தத் தொகையான ரூ.100 கோடியை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நிதியிலிருந்து தற்போது மாணவர்களுக்குத் தேவையான மேசைகள், நாற்காலிகள், கணினிகள், போன்றவையெல்லாம் போய்க் கொண்டிருக்கின்றன. ஆகவே, அவர் சொன்னது தவறான செய்தி. மேலும் அங்கே நூலக வசதி இல்லையென்று சொல்லியிருக்கிறார். தமிழ்நாட்டிலே நூலக வசதி இல்லாத கல்லூரியே கிடையாது. அனைத்துக் கல்லூரிகளிலும் நூலகம் கண்டிப்பாக இருக்கிறது. அதற்கடுத்தபடியாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேராசிரியர் இல்லையென்ற ஒரு குறையைச் சொன்னார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, தமிழகத்திலே இருக்கக்கூடிய அரசுக் கல்லூரிகளில் பேராசிரியர் பணிக்காக 1,093 ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்று எண்ணி, அதற்கான கருத்துரு ஆசிரியர் தேர்வாணையத்திற்கு அனுப்பப்பட்டு, தற்போது ஆசிரியர்கள் நியமிக்கப்படும் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது

[2014 ஜனவரி 31

என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். ஏதோ சொல்லவேண்டும் என்பதற்காக இந்தக் கருத்தைச் சொல்லக் கூடாது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யாரும் உட்கார்ந்து கொண்டு பேசக்கூடாது.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** ஆகவே, நீங்கள் செய்யாததை, மக்கள் எதிர்பார்ப்பதை மாணவர்களினுடைய உயர் கல்வி உயரவேண்டுமென்ற நோக்கத்தோடு, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அனைத்துத் துறைகளிலும் தேவையானவற்றைச் செய்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**7—**

## நியாய விலைக் கடை கட்டடம்

***27838—திரு. அ. அஸ்லம் பாஷா:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆம்பூர் தொகுதி, மாதனூர் ஊராட்சி ஒன்றியம், தோட்டாளம் கிராமத்திலுள்ள நியாய விலைக் கடைக்குக் கட்டடம், கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஆம்பூர் தொகுதி, மாதனூர் ஒன்றியத்திலுள்ள மாதனூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தால் நடத்தப்பட்டு வரும் தோட்டாளம் முழு நேர



2014 ஜனவரி 31]

நியாய விலைக் கடை 572 குடும்ப அட்டைகளுடன் ஊராட்சி மன்றத்திற்குச் சொந்தமான கட்டடத்தில் வாடகையின்றி செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட கடை ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட கட்டடத்தில் செயல்பட்டு வந்த நிலையில், சென்னை-பெங்களூர் தேசிய நெடுஞ்சாலை, 6 வழிச்சாலையாக அகலப்படுத்தப்பட்டபோது, இடிக்கப்பட்டதன் காரணமாக, தற்போது தோட்டாளம் ஊராட்சிக்குச் சொந்தமான பழைய கால்நடை மருத்துவமனை வளாகத்தில் வாடகையின்றி செயல்பட்டு வருகிறது. தோட்டாளம் கூட்டுறவு நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்ட தோட்டாளம் ஊராட்சி மன்றம், ஊராட்சிக்குச் சொந்தமான இடத்தினை வழங்குவதற்கு சம்மதம் தெரிவித்துள்ளது. ஊராட்சி மன்றத்தால் ஒதுக்கப்பட்ட இடத்தில் கட்டடம் கட்ட ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து தரும்பட்சத்திலோ அல்லது வேலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை நிதியிலிருந்தோ நிதி ஒதுக்கீடு கிடைக்க விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதன்பின்னர் நியாய விலைக் கடைக் கட்டடம் கட்ட விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதனூர் ஊராட்சி ஒன்றியம், தோட்டாளம் கிராமத்திற்கு 2013-2014 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இப்பொழுது பணிகள் தொடங்கிய நிலையில் உள்ளன என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, இதே மாதனூர் ஒன்றியத்திலே அக்கிரஹாரம் என்ற கிராமத்திலே உள்ள கடை வாடகைக் கட்டடத்திலே இயங்கிக்கொண்டிருக்கிறது. ஆம்பூர் நகரம், பெத்லஹேம் பகுதி, கிருஷ்ணாபுரம், கஸ்பா-A, கே.எம். நகர், ஆலங்காயம் ஒன்றியம், மேலகுப்பம் இதுபோன்ற பகுதிகளிலே கடைகள் வாடகைக் கட்டடங்களிலே இயங்கிக்கொண்டிருக்கின்றன. மேற்கண்ட கடைகளின் சொந்தக்காரர்கள் கடைகளை காலி செய்யச் சொல்லி வற்புறுத்திக்கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு

[2014 ஜனவரி 31

அமைச்சர் அவர்கள் இந்தக் கடைகளுக்கெல்லாம் நிதி ஒதுக்கீடு செய்து புதிய கட்டடங்களைக் கட்டித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக நியாய விலைக் கடைக் கட்டடம் கட்டுவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தோ அல்லது சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தோ அல்லது மாவட்ட ஊராட்சி முகமை நிதியிலிருந்து நிதி பெற்றோ அல்லது மாவட்ட ஆட்சித் தலைவருடைய மேம்பாட்டு நிதியிலிருந்தோ நிதி கிடைக்கும்பட்சத்தில், அந்தக் கடை அமைந்துள்ள பகுதியின் ஊராட்சியும் முன்வந்து இடம் ஒதுக்கீடு செய்யும்பட்சத்தில், நியாய விலைக் கடைக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்பூர் தொகுதி 66 பஞ்சாயத்துகள் கொண்ட மிகப் பெரிய தொகுதி. இந்தத் தொகுதியிலே பல இடங்களிலே நியாயவிலைக் கடைகள் வாடகைக் கட்டடத்திலே இயங்கிக்கொண்டிருக்கின்றன. அனைத்துப் பகுதிகளுக்கும் என்னுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்வது என்பது மிகக் கடினமாக இருக்கின்றது. பல்வேறு பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யவேண்டி இருக்கின்றது. பொது மக்களுடைய சிரமங்களைப் போக்குகின்ற வகையிலே, அவர்களுடைய கோரிக்கைகளை ஏற்கின்ற வகையிலே, எங்களால் முடிந்த அளவிற்கு எங்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அங்கன்வாடிகளுக்கும், கூட்டுறவுக் கடைகளுக்கும் நிதியை ஒதுக்கீடு செய்திருக்கின்றோம். மீதமுள்ள கடைகளுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, தேவையான இடங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்து தர வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.



2014 ஜனவரி 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தொகுதியிலே 99 முழு நேரக் கடைகள் இருக்கின்றன. அவற்றில் 72 கடைகள் சொந்தக் கட்டடத்திலும், 26 கடைகள் வாடகைக் கட்டடத்திலும், ஒன்று இலவசக் கட்டடத்திலும் இயங்கி வருகின்றன. மேற்கண்ட கடைகளுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு சங்கத்தில் நிதி கிடையாது. சங்கத்தின்மூலமாக கடை கட்ட முடியாது. நான் சொன்ன மேற்படி திட்டத்தின் வாயிலாக, மாவட்ட ஆட்சித் தலைவருடைய மேம்பாட்டு நிதியிலிருந்தோ அல்லது ஊராட்சி முகமை நிதியிலிருந்தோ அல்லது யாராவது பொது மக்கள் அந்தக் கடைகளுக்கான கட்டடங்கள் கட்டிக் கொடுப்பதற்குத் தாமாக முன்வந்தாலோ கட்டுவதற்கான வாய்ப்புகள் உண்டு. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு எல்லாம் தெரியும் என்று நான் கருதுகிறேன். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஊராட்சிகளிலிருந்து நிதி கிடைக்கும்பட்சத்தில், உறுதியாக கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும். தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள்தான் இதுபோன்ற நியாய விலைக் கடைகளை நடத்தி வருகின்றன. எனவே, சொந்த நிதியாதாரமும் கிடையாது. பொது மக்களாக முன்வந்து கொடுக்கும்பட்சத்திலோ, பல்வேறு உதவிகளைப் பெற்றோ இதுபோன்ற கடைகள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நியாய விலைக் கடைக் கட்டடங்கள் கட்டுகின்றபோது தாய்க் கடைகளைக் கட்டுவதற்குத்தான் அனுமதி வழங்கப்படுகிறது. சில இடங்களில் பகுதி நேரக் கடைகள் கட்டுவதற்கு அனுமதி வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர்

[2014 ஜனவரி 31

அவர்கள் மறுத்து, விதியிலே இடம் இல்லை என்று சொல்கிறார்கள். தவிர்க்க முடியாத சில இடங்களில் பகுதிநேரக் கடைகளைக் கட்டித் தருவதற்கான அவசியம் இருக்கின்றது. எனவே, அவற்றைக் கட்டுவதற்கு விதியிலே சில கட்டுப்பாடுகள் இருந்தால் அதனைத் தளர்த்தி அனுமதி வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது விநியோகத் திட்டத்தைப் பற்றி, குறிப்பாக சொல்லவேண்டுமென்று சொன்னால், தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தியாவிற்கே வழிகாட்டியாக இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஆண்டுகூட மத்திய சர்க்கார் பொது விநியோகத் திட்டத்தினை நாடு முழுவதும் சிறப்பாக நடத்துவதாகச் சொல்லி ஒரு சட்டம் கொண்டு வந்தது. ஆனால், அதில் இல்லாத ஒரு சிறப்பு, தமிழகத்திலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பொது விநியோகத் திட்டத்தின்மூலமாக விலையில்லா அரிசியை குக்கிராமங்களிலே வாழ்கின்ற வறியவர்களுக்கும், நடுத்தர மக்களுக்கும் 1 கிலோ அரிசி ரூ.20/-க்கும் வழங்குகின்றது. அதுபோல், அம்மா உணவகம் என்று இப்படியெல்லாம் செய்கின்ற அம்மா அவர்களின் அரசு, நகரும் நியாய விலைக் கடையையும் நடத்துகிறது. இவையனைத்தும் அரசு மானியத்தின் மூலமாகத்தான் நடத்தப்படுகின்றன. சங்கங்கள் சொந்த நிதியிலிருந்து இவற்றை நடத்துவதில்லை. குறிப்பாக பகுதிநேரக் கடைகள் நடத்தவேண்டும் என்று சொன்னால், கிராமமாக இருந்தால் 500 குடும்பங்கள் தாய்க் கடையில் இருக்கவேண்டும். மீதிக் கடைகளை அமைக்கும்போது, எந்தப் பகுதியில் அமையவேண்டும் என்று நினைக்கின்றார்களோ, அப்பகுதி 1½ கி.மீ. தூரத்தில் இருக்கின்றது என்று சொன்னால், அவர்கள் இடத்தை இலவசமாகக் கொடுக்கவேண்டும். (குறுக்கீடு) பரிந்துரை கொடுக்க முடியாது அல்லவா? (குறுக்கீடு) இருங்கள், இருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுருக்கமாகச் சொல்லி முடியுங்கள்.



2014 ஜனவரி 31]

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக பகுதி நேரக் கடைகள் கொடுப்பதற்கு சட்டத்தில் இடம் இல்லை. எனவே, கூட்டுறவுச் சங்கங்கள் அல்லது யார் அந்தப் பகுதிநேரக் கடையை, எந்தப் பகுதியில் நடத்த வேண்டும் என்று விரும்புகிறார்களோ, அவர்கள் இடத்தை இலவசமாகக் கொடுக்கவேண்டும். நகரும் பொருட்களுக்கும் அவர்களே செலவினை ஏற்றுக் கொள்ளவேண்டும். முழுநேரக் கடையின் பணியாளரே அந்தக் கடையினையும் திறந்து வியாபாரம் செய்வார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 8, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**8—**

## தொழிலாளர் நீதிமன்றம்

***34729—திரு. சோழன் சித. பழனிச்சாமி:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடியில் தொழிலாளர் நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, காரைக்குடியில் தொழிலாளர் நல நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர்கள் உட்கார்ந்துகொண்டு பேச வேண்டாம்.

[2014 ஜனவரி 31

**திரு. சோழன் சித. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினா கேட்கும்முன்னே வாரி வழங்கும் வள்ளல்களின் வள்ளலாக எனது காரைக்குடி தொகுதி, கள்ளங்குடியில் ஒரு துணை மின் நிலையமும், சாக்கோட்டை ஒன்றியம், அமராவதியில் ஒரு துணை மின் நிலையமும் அமைத்துத் தந்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் முதலில் எனது தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியினைச் சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணன் என்னடா, தம்பி என்னடா அரசியலான உலகத்திலே, ஆளை வெட்டுவதும், கட்டடம் கட்டுவதும், புழுதி பறக்குது நாட்டினிலே என்று இருக்கின்ற இந்தக் காலக்கட்டத்தில், இதுபோன்ற மனிதர்கள் வாழும் இவ்வுலகில் 1½ கோடி தொண்டர்களின் தாயாக, 7½ கோடி தமிழர்களின் அம்மாவாகத் திகழக்கூடிய மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்காட்டில் இலைக்காட்சி, இதுவே, அம்மாவின் அரசுக்கு அத்தாட்சி, குமரி முதல் இமயம் வரை அமையப்போவது அம்மாவின் அரசாட்சி என்று சொல்லி, தொழிலாளர்கள் வியர்வை காயும்முன்னே, கூலி தரும் அம்மா, அவர்களின் துன்பங்களையும், துயரங்களையும் களைந்து வாழ்க்கைக்கு வழிகாட்டுகின்ற அம்மாவின் ஆட்சியில் மாதம் ஒரு முறை சிவகங்கை மாவட்டம், காரைக்குடிக்கு மதுரையிலிருந்து தொழிலாளர் நலத் துறை மூலமாக நீதிபதிகள் தினமும் வந்து செல்கிறார்கள். இதனால் தொழிலாளர்களின் வழக்கு அதிகமாக நிலுவையில் இருந்து வருகிறது. விரைந்து வழக்குகள் முடிக்கப்பட்டு தீர்ப்புகள் வழங்க வேண்டியது அவசியமாக உள்ளது.

முற்பகல் 10-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துணைக் கேள்வி கேளுங்கள். துணைக் கேள்வி கேட்டு சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. சோழன் சித. பழனிச்சாமி:** எனவே, அதிக வழக்குகள் உள்ள மாவட்டத்தில் தொழிலாளர் நீதிமன்றங்கள் அமைக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.



2014 ஜனவரி 31]

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டத்தின் தொழிலாளர் நல வழக்குகள் மதுரை தொழிலாளர் நீதிமன்றத்தால் மாதம் ஒரு முறை காரைக்குடியில் அமைந்துள்ள மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நடத்தப்பட்டு வருகின்றன. காரைக்குடி முகாம் தொழிலாளர் நீதிமன்றத்தில் தொழில் தகராறுகள் குறித்த வழக்குகளின் மொத்த எண்ணிக்கை 148. மிகக் குறைந்த வழக்குகளே நிலுவையில் உள்ளதால், காரைக்குடிக்கென்று தனியாக தொழிலாளர் நீதிமன்றம் ஏதும் அமைக்க வேண்டிய நிலை எழவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.

**திரு. சோழன் சித. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை நீதிமன்றத்தில் உள்ள நீதியரசர் மாதமொருமுறை காரைக்குடிக்கு வந்து செல்கிறார். இதில் இருக்கக்கூடிய வழக்குகளில் அதிக எண்ணிக்கை காரைக்குடி பகுதியைச் சார்ந்தவையாக இருக்கின்ற காரணத்தால், சிவகங்கை மாவட்டத்திற்கென நிறுவப்படுகின்ற அந்த நீதிமன்றத்தினை காரைக்குடியிலே அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய தொழிலாளர் நீதிமன்றம் அமைக்க வேண்டுமென்றால், சென்னை உயர் நீதிமன்றத்தினுடைய ஒப்புதல் பெற்றபின்தான் வழக்குகளின் அடிப்படையில் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். சட்டமன்ற உறுப்பினருடைய மேற்படி கோரிக்கை உயர் நீதிமன்றத்தின் ஒப்புதல் பெற்றபின் அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

[2014 ஜனவரி 31

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், நீலகிரி மாவட்டம், திருப்பூர் மாவட்டம் ஆகிய மூன்று மாவட்டங்களுக்கும் சேர்த்து, கோவையில் ஒரு தொழிலாளர் நீதிமன்றம் செயல்பட்டு வருகிறது. நீலகிரி மாவட்டத்திற்கென்றும், திருப்பூர் மாவட்டத்திற்கென்றும் தனியாக தொழிலாளர் நீதிமன்றம் அமைப்பதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்குமா என்பதனைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் நீதிமன்றத்தினுடைய ஒப்புதல் பெற்ற பின்பு, வழக்குகளின் அடிப்படையில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, கோரிக்கைமீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் துறையிலும், தொழிலாளர் நல வாரியங்களிலும் ஏராளமான பணிகள் இருந்தும், அதற்கேற்ப ஊழியர்கள் இல்லாத காரணத்தால் பணிகள் தாமதப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதனால் ஏழை எளிய தொழிலாளிகள் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, தொழிலாளர் துறையிலும், தொழிலாளர் நல வாரியங்களிலும் ஊழியர்களின் எண்ணிக்கையை உரிய அளவிற்கு நியமிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாரியங்களிலே தொழிலாளர்கள் எண்ணிக்கை இப்போது எந்த இடத்திலேயும் காலியாக இல்லை. அங்கே அளவுக்கு அதிகமான ஊழியர்கள் பணிபுரிந்து வருகின்றார்கள். அப்படி அதிகமாகத் தேவை ஏற்படின், அதிகமான



2014 ஜனவரி 31]

ஊழியர்களை நியமிப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியைப் பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வளர்ந்து வருகின்ற தொழில் நகரம். ஓசூரில் குண்டூசி தயாரிக்கும் தொழிற்சாலை முதற்கொண்டு ஆகாய விமானம் தயாரிக்கும் TANEJA Aero Space & Aviation Ltd., உட்பட இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் உள்ளன. அந்தத் தொழிற்சாலைகளில் சுமார் மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். அந்தத் தொழிலாளர்களுக்கு ஏற்படுகின்ற தொழில் தகராறுகளைத் தீர்க்கவேண்டுமென்றால், சேலம் நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டியிருக்கிறது. எனவே அதிகமாக தொழிலாளர்கள் உள்ள ஓசூரில் ஒரு நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் தொழிலாளர் நீதிமன்றத்திலே, சேலம், கிருஷ்ணகிரி, தருமபுரி, ஈரோடு, நாமக்கல் ஆகிய மாவட்டங்களின் வழக்குகள் நடத்தப்படுகின்றன. மொத்தம் 1,428 வழக்குகள் அங்கே இருக்கின்றன. சென்னை உயர் நீதிமன்றத்தினுடைய ஒப்புதல் பெற்றபின், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைமீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா வரிசை எண் 9, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். மனோகரன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

[2014 ஜனவரி 31

9—

## இரயில்வே மேம்பாலம்

***4794—திரு. ஆர். மனோகரன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி சந்திப்பு மற்றும் திருவானைக்காவல் இரயில்வே மேம்பாலங்களை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கின்றேன்.

(அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி சந்திப்பு மற்றும் திருவானைக்காவல் அருகிலுள்ள இரயில்வே மேம்பாலங்களை அகலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். மனோகரன் அவர்கள்.

**திரு. ஆர். மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புத்தர் உதித்த இந்தியத் திருநாட்டில், முழுமையான அமைதி நிலவ, நாட்டிலுள்ள அனைத்து நதிகளையும் இணைக்க, மதவெறி மறைந்து மனித நேயம் சிறந்து, கடன்கள் இல்லாத, கலவரம் இல்லாத, ஊழல் ஒழிந்த, ஊழியம் நிறைந்த, ஏழ்மை இல்லாத இந்தியாவை உருவாக்க, கருப்புப் பணத்தை வெளிக்கொண்டுவர, கச்சத்தீவை மீட்டுக்கொண்டுவர, மாநில சுயாட்சி காக்கப்பட, உலக அரங்கில் இந்தியா வலிமைமிக்க வல்லரசாக உருவாக, நாடாளும் தலைவியாக பாராளப்போகும் (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் அன்னை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். திருச்சி மாநகர இரயில்வே சந்திப்பு மேம்பாலம், மாண்புமிகு அம்மா



2014 ஜனவரி 31]

அவர்களுடைய ஸ்ரீரங்கம் தொகுதியில் திருவானைக்காவல் இரயில்வே மேம்பாலம் ஆகியவற்றின் பணிகள் விரைவில் தொடங்கப்படும் என்று மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தப் பணிகள் மிக முக்கியமான பணிகளாகும். திருச்சி மாநகர மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையான இரயில்வே மேம்பாலப் பணிகள் விரைவுபடுத்தப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தற்போது அந்தப் பணிகள் எந்த நிலையில் உள்ளன, எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி இரயில்வே சந்திப்பு அருகே உள்ளே வலுவிழந்த இருவழித்தட குறுகலான மேம்பாலத்தில் போக்குவரத்தை அனுமதித்து அதன் அருகிலேயே மூன்று வழிச்சாலை மேம்பாலம் கட்டும் பணியினை முதற்கட்டமாகவும், கட்டி முடிக்கப்பட்டபின் தற்போதைய பழைய மேம்பாலத்தினை இடித்து அப்புறப்படுத்திவிட்டு அவ்விடத்தில் இரண்டாம் கட்டமாக மூன்று வழிச்சாலை மேம்பாலம் கட்டும் பணியை மொத்தம் 81.40 கோடி ரூபாய் செலவில் இரயில்வே துறையுடன் கூட்டாகச் செயல்படுத்திட முடிவு செய்யப்பட்டுள்ளது.

முதற்கட்ட மேம்பாலப் பணிகளுக்கு 18-12-2013 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, அது ஆணையத்தின் பரிசீலனையில் உள்ளது. இறுதி செய்யப்பட்ட பின் பணிகள் தொடங்கப்படும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டுகிறேன். அதேபோல திருவானைக்காவல் அருகே கிலோ மீட்டர் 16/10-ல் உள்ள பழமையான, குறுகலான இருவழித்தட இரயில்வே மேம்பாலத்திற்கு மாற்றாக, நான்கு வழித்தட புதிய மேம்பாலம் ரூபாய் 47.30 கோடி செலவில் போக்குவரத்தை முற்றிலும் நிறுத்தாவண்ணம் பாலத்தை இரண்டு கட்டமாக கட்டுவதற்கு 20-1-2014 அன்று முதற்கட்டமாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, அது ஆணையத்தின் பரிசீலனையில் உள்ளது. ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டவுடன், பணிகள் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2014 ஜனவரி 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்கள்.

**திரு. ஆர். மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் மாவட்ட மக்கள் திருச்சி மாநகருக்கு வரவேண்டுமென்று சொன்னால், இந்த இரயில்வே மேம்பாலத்தைத்தான் பயன்படுத்துகிறார்கள். இப்பாலத்தை விரிவுபடுத்த வேண்டும் என்பது திருச்சி மாநகர மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையாக இருக்கிறது. அதேபோல, திருச்சியிலிருந்து சென்னை செல்கின்ற மக்களுக்குப் பயன்படக்கூடிய வகையில் உள்ள திருவானைக்காவல் மேம்பாலமும் முக்கியமானதாகும். இவை அகலப்படுத்தப்படும் என்றும், அதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதென்றும் அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், இந்த இரண்டு பணிகளையும் முடிக்க நிதி ஒதுக்கீடு செய்த தமிழகத்தினுடைய காவல் தெய்வம் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.

**திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் அனைத்து மக்களின் வாழ்வாதாரத்தைப் பெருக்கிக்கொண்டிருக்கின்ற வகையில் சிறப்பான மக்களாட்சி நடத்திக்கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வளம், அமைதி, வளர்ச்சி என்று புரட்சிகரமான திட்டத்தைக் கொடுத்து, இந்திய ஆட்சியை அலங்கரிக்கக்கூடிய நல்ல வேளையில், மதுரை மாவட்டம், திருமங்கலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, திருமங்கலம் நகரத்தில், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் சிலை முதல் பழைய விமான நிலையம் வரை செல்லக்கூடிய சாலையின் நடுவே இருக்கக்கூடிய Railway Gate-ஐக் கடப்பதற்கு பல சிரமங்கள் ஏற்படுகின்றன. நகரத்திற்கும், நகரத்தைச் சுற்றியுள்ள 25, 30 கிராமங்களுக்கும் இது மிகப்பெரிய கஷ்டமாக இருக்கின்ற காரணத்தால், திருமங்கலம் நகரத்தின் மையத்தில் அமைந்திருக்கக்கூடிய Railway Gate அருகில் உயர்மட்ட மேம்பாலம் மாண்புமிகு அம்மா அவர்களின் அனுமதியோடு அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.



2014 ஜனவரி 31]

முற்பகல் 11-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு இரயில்வே மேம்பாலம் கட்டவேண்டுமென்று சொன்னால், ஒரு இலட்சம் போக்குவரத்து அலகுகளுக்கு மேல் இருந்தால்தான், அந்தப் பகுதியிலே மேம்பாலம் கட்ட முடியும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள அந்தப் பகுதியில் வாகனங்களின் எண்ணிக்கையைக் கணக்கிட்டு, அதிலே ஒரு இலட்சம் போக்குவரத்து அலகுகளுக்கு மேல் இருப்பின், பாலம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 10, மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**10—**

## கணினிமயமாக்குதல்

***2075—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள அனைத்து நியாய விலைக் கடைகளையும் கணினிமயமாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கின்றேன்.

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டின் பொது விநியோகத் திட்ட செயல்பாடுகளைக் கணினிமூலம் கண்காணிக்க வேண்டிய அவசியம் கருதி முழுமையான கணினிமயமாக்கல் அதாவது End to End Computerisation திட்டத்தினைக் கொண்டு வருவதற்காக

[2014 ஜனவரி 31

*மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு விரிவான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. முழுமையாக கணினிமயமாக்கும் பணிகளை 2014 ஆம் ஆண்டு இறுதிக்குள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கால அவகாசம் எதற்காகத் தேவைப்படுகிறது என்று சொன்னால், தமிழ்நாட்டில் செயல்படும் 33,839 நியாய விலை அங்காடிகள், 227 பொது விநியோகத் திட்டக் கிடங்குகள், 241 வட்ட மண்டல அலுவலகங்கள் மற்றும் மாவட்ட மாநில தலைமை அலுவலகங்களையும் ஒருங்கிணைத்து, மொத்தமுள்ள 1 கோடியே 97 இலட்சம் குடும்ப அட்டைகளின் விவரங்களையும் இணைத்துச் செயல்படுத்த வேண்டியுள்ளது என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், இருக்கையில் இல்லை.*

*வினா வரிசை எண் 11, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி, மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**11—**

### பால் குளிரூட்டும் நிலையம்

***22772—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:**

*மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சங்ககிரி தொகுதியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

*சங்ககிரி தொகுதியில் நாள் ஒன்றுக்கு 30 ஆயிரம் லிட்டர் பால் கையாளும் வகையில் தலா ஐந்தாயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட ஆறு தொகுப்புப் பால் குளிர்விப்பான் நிலையங்கள் நிறுவிட கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. தற்போது, தரமான பால் கொள்முதல் செய்ய ஊக்கப்படுத்தப்பட்டு வருவதால், பால் குளிரூட்டும் நிலையங்களுக்குப் பதிலாக, தொகுப்புப் பால் குளிர்விப்பான் நிலையங்கள் அமைப்பதற்கு அரசு முன்னுரிமை கொடுத்து வருகிறது. மேலும், சங்ககிரி தொகுதியில் ஆறு புதிய பால் குளிர்விப்பான் நிலையங்கள் அமைக்கும் திட்டம் இருப்பதால், சங்ககிரி தொகுதியில் மேலும் ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கவேண்டிய தேவை தற்போது எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*



2014 ஜனவரி 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.*

**திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறுகின்றபோது, சங்ககிரி தொகுதியில் ஆறு இடங்களில் பால் குளிர்விப்பான் நிலையங்கள் அமைப்பது குறித்து அரசின் பரிசீலனையில் இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். எனவே, சங்ககிரி தொகுதியில் தாரமங்கலம் ஒன்றியத்தில் பணிக்கனூர், பவளதாதனூர் ஆகிய இடங்களிலும், மகுடஞ்சாவடி ஒன்றியத்தில், அழகனூர், கூத்தாடிபாளையம் ஆகிய இடங்களிலும் தொகுப்புப் பால் குளிர்விப்பான் நிலையங்கள் அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. வி. மூர்த்தி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்ககிரி தொகுதியில் 83 பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. அதன்மூலம், நாள் ஒன்றுக்கு சராசரியாக 21,895 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு, 2,120 லிட்டர் உள்ளூர் விற்பனை போக மீதமுள்ள 19,775 லிட்டர் பால் அருகிலுள்ள பரமத்திவேலூர் பால் குளிரூட்டும் நிலையம் மற்றும் சேலம் பால் பண்ணைக்கு*

அனுப்பப்படுகிறது. பாலின் தரத்தை உயர்த்தவும், பால் கொள்முதல் அளவினை அதிகரிக்கவும், போக்குவரத்துச் செலவினைக் குறைக்கும் நோக்கிலும், சங்ககிரி தொகுதியில் தலா ஐந்தாயிரம் லிட்டர் கொள்ளளவுள்ள ஆறு தொகுப்புப் பால் குளிர்விப்பான் நிலையங்கள், ரெட்டிபாளையம், வடுகப்பட்டி, வைகுந்தம், வளையகாரனூர், கள்ளிப்பாளையம், வருதம்பட்டி மற்றும் ஒலக்கசின்னானூர் ஆகிய சங்கங்களில் மொத்தம் முப்பதாயிரம் லிட்டர் பால் கையாளும் திறனுள்ள தொகுப்புப் பால் குளிர்விப்பான் நிலையங்கள் நிறுவிட கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

இதன்மூலம், சங்ககிரி தொகுதியில் உள்ள அனைத்துச் சங்கங்கள் மட்டுமின்றி அருகிலுள்ள பிற தொகுதிக்குட்பட்ட சங்கங்களும் பயனடையும். தற்போது, தரமான பால் கொள்முதல் ஊக்கப்படுத்தப்பட்டு வருவதால் பால் குளிரூட்டும் நிலையங்களுக்குப் பதிலாக தொகுப்புப் பால் குளிர்விப்பான் நிலையங்கள் அமைப்பதற்கு அரசு முன்னுரிமை கொடுத்து வருகிறது. மேலும், சங்ககிரி தொகுதியில் ஆறு பால் குளிர்விப்பான் நிலையங்கள் அமைக்கும் திட்டம் இருப்பதாலும், அங்கு கூடுதலாக பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கவேண்டிய தேவை தற்போது எழவில்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய அந்த ஒன்றியங்களில் பால் வரத்து அதிகமாக இருப்பின், மாண்புமிகு அம்மா அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டு, பரிசீலனை செய்து அமைத்துத் தரப்படும் என்பதை பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.

**திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நான் கேட்ட கேள்விக்கு பரிசீலித்து அமைத்துக் கொடுக்கப்படும் என்று கூறினார்கள். அதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேபோல், ஆவின் ஐபிஎல் கலப்புத் தீவனங்களுக்குத் தற்போது வழங்கப்பட்டு வரும் மானியம் மார்ச் மாதத்துடன் முடிகிறது. தற்போது வறட்சி நிலை தொடர்வதால் கலப்புத் தீவனங்களுக்கு வழங்கும் மானியத்தைத் தொடர்ந்து வழங்க தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கேட்காமலேயே கொடுக்கின்ற அரசு. அந்த வகையிலே தமிழகத்திலே வறட்சி நிலவுகின்ற காரணத்தினால், மாண்புமிகு அம்மா அவர்கள் பால் உற்பத்தியாளர்களிடமிருந்து கோரிக்கை வரப்பெறாமலேயே, விவசாயம் செய்கின்ற விவசாயிகளுக்கும், பால் உற்பத்தியாளர்களுக்கும் வறட்சியைக் கருதி மானியம் வழங்கினார்கள். தற்போது அந்த மானியம் முடியும் தருவாயில் இருந்தாலும்கூட, மாண்புமிகு அம்மா அவர்கள் மக்களுடைய நலனை, வளர்ச்சியை மனதிலே கொண்டு, பரிசீலனை செய்து, அதற்குரிய திட்டத்தை வழங்குவார்கள் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்கள்.

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய குன்னம் தொகுதியானது பால் உற்பத்தியாளர்கள் அதிகம் நிறைந்திருக்கின்ற தொகுதி. குறிப்பாக, குன்னத்திலேயே மிகப்பெரிய பால் கூட்டுறவு உற்பத்தியாளர்கள் சங்கம் இருக்கிறது. அதேபோல் அருகே இருக்கின்ற பேரளி, வயலூர் போன்ற பல கிராமங்களில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக மிக அதிக அளவிலே பால் உற்பத்தி செய்து கொண்டிருக்கின்றார்கள். எனவே, குன்னத்திலே பால் குளிரூட்டும் நிலையம் ஒன்றை அமைக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

[2014 ஜனவரி 31

**மாண்புமிகு திரு. வி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தமிழகத்திலே வெண்மைப் புரட்சியை உருவாக்குவதற்காக பல திட்டங்களைக் கொடுத்துக் கொண்டு இருக்கிறது. அந்த வகையிலே எங்கெல்லாம் பால் உற்பத்தி அதிகமாக இருக்கின்றதோ, அங்கெல்லாம் பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைப்பதற்கு அம்மா அவர்கள் திட்டம் வகுத்துத் தந்திருக்கின்றார்கள். அதன் அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய இடத்தில் பால் வரத்து அதிகமாக இருப்பின், அங்கே பால் குளிரூட்டும் நிலையம் அமைத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 12, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**12—**

## கால்நடை மருத்துவமனை

***22063—திரு. நயினார் நாகேந்திரன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி தொகுதி, மானூர் ஊராட்சி ஒன்றியம், சேதுராயன்புதூரில் கால்நடை மருத்துவமனை அல்லது கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற திருநெல்வேலி தொகுதி, சேதுராயன்புதூர் கிராமத்திலும், அதைச் சுற்றியுள்ள கிராமத்திலும், கால்நடை விதிகளுக்கு உட்பட்டு, 5 ஆயிரம் கால்நடைகளுக்கும் அதிகமாக உள்ளதால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று அங்கே ஒரு கால்நடை கிளை மருத்துவமனை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2014 ஜனவரி 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.

**திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லுக்குள் இருக்கும் தேரைக்கும் உணவு அளிக்கும் கடவுளைப் போல, உலகெங்கும் வாழும் தமிழர்களின் ஒப்பற்ற தலைவி, கால்நடைகளுக்கும் கருணை காட்டும் தாய், வள்ளலாரின் வழித் தோன்றல் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-15

“தன்னையே கொடுப்பதில் வாழைக்கு ஈடு,
சம்சாரி வாழ்வுக்கு ஒரு பசு மாடு,
பொன்னையே தந்தாலும் உனக்கு ஏது ஈடு”

என்று மறைந்த இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பாடிய பாடல் வரிகளுக்கு இணங்க, பொன்னையும் தந்து, தாலிக்கு தங்கமும் தந்து, ஆடுகளும் தந்து, கறவை மாடுகளும் தந்து, அந்த மாடுகள் கறக்கின்ற பாலுக்கு அதிக விலையும் தந்து, வெண்மைப் புரட்சிக்கு வித்திட்டவர் (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்கள். திருநெல்வேலி தொகுதி, இராமையன்பட்டியில் தென் மாவட்ட மாணவர்கள் பயன்பெறும்வகையில் சுமார் 60 கோடி ரூபாயில் கால்நடை மருத்துவக் கல்லூரியும், திருநெல்வேலி தொகுதி, பேட்டையில் ஏற்கெனவே ஒரு கால்நடை மருந்தகமும், இன்றைக்கு நம்முடைய தமிழகத்தின் கால்நடை துறை அமைச்சர் அவர்கள்மூலமாக திருநெல்வேலி தொகுதி, சேதுராயன்புதூரில் கிளை மருந்தகம் அமைத்துத் தருவேன் என்று உறுதியினையும், திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதியின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக 230 கோடி ரூபாயும் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். திருநெல்வேலி தொகுதியில் உள்ள 43 ஊராட்சிகளுக்கும் சுமார் 56 கோடி ரூபாயில் மானூர் கூட்டுக் குடிநீர் தந்தமைக்கும், வளமான இந்தியா, வல்லரசு இந்தியாவை உருவாக்க இருக்கின்ற இன்றைய தமிழகத்தின் முதலமைச்சர், நாளைய பாரதப் பிரதம அமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் சார்பாகவும், திருநெல்வேலி தொகுதி மக்கள் சார்பாகவும் கோடானுகோடி நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன். நன்றி, வணக்கம்.

[2014 ஜனவரி 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 13, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**13—**

### கனரக ரப்பர் தொழிற்சாலை

***40497—டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்மநாபபுரம் தொகுதி, பெருஞ்சாணியில் கனரக இரப்பர் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கனரக இரப்பர் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் மாநில அரசினுடைய பரிசீலனையில் இல்லை. இருந்தாலும், தொழில் முனைவோர் முன்வந்தால், டிட்கோவுடன் இணைந்து புதிய இரப்பர் தொழிற்சாலை அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முனைப்பாக நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள்.

**டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் பத்மநாபபுரம் தொகுதியில் சுமார் 15 ஆயிரம் எக்டேர் நிலப்பரப்பில் உலகத்தரம் வாய்ந்த இரப்பர் விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. அரசு இரப்பர் கழகத்தின்மூலமாகவும், தனியார் இரப்பர் தோட்டங்களின் வாயிலாகவும் தினந்தோறும் சுமார் 100 டன் கச்சா இரப்பர் உற்பத்தியாகின்றது. குமரி மாவட்டத்தில் உற்பத்தியாகும் கச்சா இரப்பர், வெளி மாநிலங்களில் இருக்கின்ற இரப்பர் தொழிற்சாலைகளுக்கு கொண்டு செல்லப்படுகிறது. இரப்பர் தொழிற்சாலை அமைக்கத் தேவையான நிலம் பெருஞ்சாணியில்



2014 ஜனவரி 31]

அரசு இரப்பர் கழகத்தின் கைவசம் இருக்கின்றது. தனியார் நிறுவனம் இரப்பர் தொழிற்சாலை நடத்த முன்வந்தால், அரசு கடனுதவி வழங்கும் என்று கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்து ஓர் ஆண்டாகியும், தனியார் நிறுவனம் யாரும் இன்னும் அதற்கு முன்வரவில்லை. ஆகவே, அரசே முன்வந்து பெருஞ்சாணியில் கனரக இரப்பர் தொழிற்சாலை அமைத்தால், படித்த இளைஞர்கள், தொழிலாளர்கள் பல ஆயிரம் பேர் வேலைவாய்ப்புப் பெறுவார்கள். எனவே, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் பத்மநாபபுரம் தொகுதி, பெருஞ்சாணியில் அரசின் சார்பாக கனரக இரப்பர் தொழிற்சாலை அமைக்க முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய அளவிலேயே கன்னியாகுமரி மாவட்டத்தில் 5 சதவிகிதம்தான் இரப்பர் உற்பத்தியாகின்றது. பக்கத்தில் இருக்கின்ற கேரள மாநிலத்தில் 90 சதவிகிதம் உற்பத்தியாகின்ற காரணத்தினால், இரப்பர் உற்பத்தி செய்கின்ற சிறிய தொழில் முனைவோர்கள் எல்லாம் கூட்டாக சேர்ந்து இரப்பர் உற்பத்தி செய்து, அதை கேரளாவிற்குக் கொண்டு சென்று விடுகின்றனர். கேரளாவில் இருந்து கன்னியாகுமரிக்கு இரப்பர் கொண்டு வருவதற்கு அங்கே இரப்பர் வாரியம் இருக்கின்ற காரணத்தினால், தடை செய்யப்பட்டிருக்கிறது, அதனால் இங்கு கொண்டு வருவதற்கு வாய்ப்பில்லாமல் இருக்கின்றது. கன்னியாகுமரி மாவட்டத்தில் 36 ஆயிரம் டன் அளவுதான் வருடத்திற்கு இரப்பர் உற்பத்தியாகின்றது. இது 5 சதவிகிதம் மட்டும்தான். இந்திய அளவில் பார்க்கும்போது, 6 இலட்சத்து 40 ஆயிரம் டன் இரப்பர் உற்பத்தியாகிக்கொண்டிருக்கிறது. அதில் 90 சதவிகிதம் கேரளாவில் உற்பத்தியாகின்றது. பக்கத்தில் உள்ள கேரளாவில் தொழிற்சாலை இருக்கின்ற காரணத்தினால், இங்கே தொழில் துவங்க யாரும் முன்வரவில்லை. கடந்த முறை மாண்புமிகு அம்மா அவர்கள் தென் தமிழகத்தில் புதிய தொழிற்சாலை துவங்க வேண்டுமென்பதற்காக, கன்னியாகுமரியில் 250 ஏக்கர் கடல்சார் வாரியம் மற்றும் இரப்பர் தொழிற்சாலை அமைப்பதற்குண்டான ஏற்பாட்டை செய்தார்கள். அதற்காக 115 ஏக்கர் நிலத்தை

[2014 ஜனவரி 31

செண்பகராமன்புதூரில் பார்த்து வைத்திருக்கிறோம், இன்னும் 100 ஏக்கர் நிலம் வந்ததற்குப் பின்னால், அங்கு தொழிற்சாலை துவங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும். அதுமட்டுமல்லாமல், ஏற்கெனவே 2003 ஆம் ஆண்டு இரப்பர் தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஓர் ஒப்பந்தம் போட்டு மத்திய அரசுக்கு அனுப்பி, 2006 ஜனவரி மாதம் மத்திய அரசும் ஒப்புதல் வழங்கியது. அதற்குப் பின்னால் வந்த கடந்த கால அரசு தேவையான இடத்தைக் கொடுக்காத காரணத்தினால், 2008 இல் உங்களுடைய அரசும், டிட்கோவும் சேர்ந்து இங்கே இரப்பர் தொழிற்சாலை கொண்டு வரமுடியாது என்று அதை கேன்சல் செய்துவிட்டார்கள். ஆக, மீண்டும் மாண்புமிகு அம்மா அவர்கள்தான் அங்கு தொழிற்சாலை அமைப்பதற்கு ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள். நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தொழிற்சாலை அமைக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள்.

**டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரல்வாய்மொழி-நெடுநல்வாடு நெடுஞ்சாலை அருகில் செண்பகராமன்புதூரில் இரப்பர் பூங்கா அமைக்க 250 ஏக்கர் நிலம் கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கைவசப்படுத்தப்பட்டது. அந்த நிலம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கையகப்படுத்தப்பட்ட காரணத்தினால், அங்கு இரப்பர் பூங்கா அமைக்கும் திட்டம் தற்போது அ.தி.மு.க. அரசால் கைவிடப்பட்டது. செண்பகராமன்புதூரில் இரப்பர் பூங்கா அமைக்காவிட்டாலும், மக்கள் நலனைக் கருத்தில்கொண்டு பெருஞ்சாணியிலாவது இரப்பர் பூங்கா அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.



2014 ஜனவரி 31]

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த அடிப்படையில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதை இரத்து செய்துவிட்டது என்று சொல்கின்றார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. அதைத் தெளிவுபடுத்தவேண்டும். இன்னொன்று, 2008 ஆம் ஆண்டு உங்களுடைய ஆட்சியிலேதான் அது இரத்து செய்யப்பட்டது என்பதை நான் ஏற்கெனவே சொல்லியிருக்கின்றேன். ஆனால், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஏதோ மாண்புமிகு அம்மா ஆட்சியில் நடந்ததைப்போல உண்மைக்குப் புறம்பாகச் சொல்கின்றார்கள். நீங்கள் அதற்கு ஆதாரம் கொடுத்தால் நிச்சயமாக நான் ஏற்றுக்கொள்கின்றேன். இருந்தாலும் நான் விவாதத்திற்குள் செல்ல விரும்பவில்லை. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு செண்பகராமன்புதூரில் 115 ஏக்கர் நிலத்தை இப்போது கண்டறிந்து இருக்கின்றது. இன்னும் 150 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தியதற்குப் பின்னால், புதிய தொழிற்சாலை, கடல்சார் வாரியம், பொறியியல் துறை மற்றும் இரப்பர் தொழிற்சாலை ஆகிய மூன்றையும் சேர்த்துக் கொண்டு வருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முயற்சி செய்து கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்துகிறேன். 2008 ஆம் ஆண்டு டிட்கோவுடன் Joint Venture இருந்ததை உங்களுடைய அரசுதான் cancel செய்தது என்பதை மீண்டும் அழுத்தந்திருத்தமாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 14, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். வேதாச்சலம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**14—**

### போக்குவரத்துப் பணிமனை

***7204—திரு. எஸ். வேதாச்சலம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பத்தூர் தொகுதி, கள்ளிக்குப்பம் பகுதியில் மாநகர போக்குவரத்துக் கழகப் பணிமனை மற்றும் பேருந்து நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 ஜனவரி 31

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாநகரப் போக்குவரத்துக் கழகத்திற்கு உட்பட்ட அம்பத்தூர் தொகுதி, கள்ளிக்குப்பம் பகுதியில் மாநகரப் போக்குவரத்துக் கழகப் பணிமனை மற்றும் பேருந்து நிலையம் அமைப்பதற்குத் தேவையான நிலத்தினைப் பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நிலம் கிடைக்கப்பெற்றபின், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். வேதாச்சலம் அவர்கள்.

**திரு. எஸ். வேதாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் குல தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். அம்பத்தூர் தொகுதி தொழிலாளர்கள் நிறைந்த பகுதியாகும். அந்தப் பகுதியிலே போக்குவரத்துப் பணிமனை வேண்டுமென்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் மூலமாக அம்மா அவர்களிடம் கோரிக்கை வைத்தேன். இதை நிறைவேற்றும்வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே இடம் தந்தால் பணிமனை அமைத்துத் தருவேன் என்று சொல்கிறார்கள். அங்கே பணிமனை அமைப்பதற்காக ஏற்கெனவே நகராட்சி மூலமாக 15 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு, தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக இந்த ஆண்டே எனது கோரிக்கையை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நேசிக்கும் தலைமை, மக்களை நேசிக்கும் தலைமை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் 23-10-2013 அன்று கொடியசைத்து துவக்கி வைக்கப்பட்ட, சென்னை மாநகர மக்களிடம் மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றுள்ள 50



2014 ஜனவரி 31]

சிற்றுந்துகளில் (Small Bus) 23-10-2013 முதல் 30-1-2014 வரையுள்ள 100 நாட்களில் 36 இலட்சத்து 96 ஆயிரத்து 639 பேர் பயணம் செய்து, மிகப் பெரிய ஒரு வரலாற்றுச் சாதனை படைக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சாதனைத் திட்டமான சிற்றுந்துகள் சென்னையில் மிகப் பெரிய ஒரு வரவேற்பைப் பெற்று, 2 கோடியே 52 இலட்சத்து 89 ஆயிரத்து 645 ரூபாய் வருவாயை ஈட்டியுள்ளது. 100 நாட்களில் 36 இலட்சத்து 96 ஆயிரத்து 639 பேர் பயணம் செய்துள்ளார்கள் என்பது ஒரு வரலாற்றுச் சாதனையாகும். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய இந்தச் சாதனைத் திட்டம் (மேசையைத் தட்டும் ஒலி) மக்களிடத்தில் மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தில் இரண்டரை ஆண்டுகளில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் எந்தெந்தப் பகுதிகளில் புதிய பணிமனைகள் கட்டவேண்டுமோ, அந்தந்தப் பகுதிகளின் தேவைக்கேற்ப 68 புதிய பணிமனைகளை அமைப்பதற்கு உத்தரவிட்டு, அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கள்ளிக்குப்பம் பகுதியில் சுட்டிக்காட்டியிருக்கின்ற அந்த நிலம் துறைக்குக் கிடைக்கப் பெற்றவுடன், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். வேதாச்சலம் அவர்கள்.

**திரு. எஸ். வேதாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் பணிமனை அமைக்கப்பட வேண்டுமென்று நான் வைத்த கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதியாக செய்து தருகிறேன் என்று உத்தரவாதம் அளித்திருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் சார்பாகவும், என்னுடைய தொகுதி மக்களின் சார்பாகவும், கோடானுகோடி நன்றிகளைக் கூறி விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.

[2014 ஜனவரி 31

*முற்பகல் 11-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 15, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ராமமூர்த்தி, மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

**15—**

**மணிமண்டபம்**

***36787—திரு. ஆர். ராமமூர்த்தி:**

*மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சியில் இராஜா தேசிங்கிற்கு மணிமண்டபம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

*(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சியில் இராஜா தேசிங்கிற்கு மணிமண்டபம் அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ராமமூர்த்தி, இருக்கையில் இல்லை. வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.*

**[குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*



2014 ஜனவரி 31]

## 3. அறிவிப்பு

**மாற்றுத் தலைவர்கள் பட்டியல்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9(1)-ன்கீழ் கீழ்க்காணும் உறுப்பினர்களைப் பேரவையின் 8-வது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக* (Panel of Chairmen) *நியமிக்கிறேன்.*

*1) திரு. அ. பாப்பா சுந்தரம்*

*2) திரு. ஓ.கே. சின்னராஜ்*

*3) திரு. கே.பி. அன்பழகன்*

*4) திரு. ஆர். சின்னசாமி*

*5) திரு. பி.ஜி. நாராயணன்*

*6) திரு. சு. குணசேகரன்*

## 4. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழிதல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.வ. மார்க்கண்டேயன் அவர்கள்.*

**திரு. கு.வ. மார்க்கண்டேயன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"2014 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 30 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு மேதகு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு@ தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்"*

*என்னும் தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *தீர்மானத்தை வழிமொழிதல். மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.எஸ்.என். நடராஜ் அவர்கள்.*

---

*@ 150 முதல் 184 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.*

[2014 ஜனவரி 31

**திரு. என்.எஸ்.என். நடராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.வ. மார்க்கண்டேயன் அவர்கள், மேதகு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு நன்றி தெரிவித்து முன்மொழிந்த தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.வ. மார்க்கண்டேயன் அவர்கள்.

**திரு. கு.வ. மார்க்கண்டேயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரையின் மீதான விவாதத்தில் முன்மொழிந்து பேசுவதற்கான வாய்ப்பினை சாதாரண, எளிய தொண்டனான எனக்கு வழங்கிய நாளைய வல்லரசாகும் பாரதத் திருநாட்டின் பார் போற்றுகின்ற தேசத் தாய், (மேசையைத் தட்டும் ஒலி) மாட்சிமை பொருந்திய தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையில் உள்ள அத்தனை செயல்பாடுகளையும் ஒருசேர ஒரு தனி மனிதரால், தங்கத் தாரகை மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களால் செய்து முடிக்க முடியும், முடிந்தது என்றால் அதுதான் புரட்சி. புரட்சி என்பது புதுமை நாற்று; புரட்சி என்பது புத்துயிர் வெள்ளம்; புரட்சி என்பது புதிரைத் தீர்த்தல்; புரட்சி என்பது போரில் பெரிது; புரட்சி என்பது புதுமை கீதம்; புரட்சி என்பது புத்துயிர் தாகம்; புரட்சி என்பது பூகம்ப வேகம்; புரட்சி என்பது பூரண மாற்றம்; புரட்சி என்பது புரட்டின் வயிரி; புரட்சி என்பது புவித் தாயின் நகைப்பு; இருப்பதை இருப்பதாகக் காட்டுவது பழமை; இல்லாத ஒன்றை இருப்பதாகக் காட்டுவது புதுமை; இயலாத ஒன்றை இயன்றதாகச் செய்வது புரட்சி; அத்தகைய புரட்சிகளை நித்தம், நித்தம் செய்துகொண்டு இருப்பது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனுடைய வெளிப்பாடே இந்த ஆளுநர் உரை.

நேற்று, ஆளுநர் அவர்கள் உரையினுடைய சிறப்பு அம்சம் என்னவென்றால், உலக வரலாற்றில் ஓர் அரசு செய்ய முடியாத செயல்களையெல்லாம் தன்னந்தனியாகச் செய்து முடித்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சாதனைகளை (மேசையைத்



2014 ஜனவரி 31] [திரு. கு.வ. மார்க்கண்டேயன்]

தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியின் மாண்புகளை மேதகு ஆளுநர் அவர்கள் தன்னுடைய உரையில் தெரிவித்தபோது, அதை ஏற்றுக்கொள்ள முடியாத தி.மு.க.-வினர் வெளிநடப்பு செய்தார்கள். இன்றைய தினம் அவர்கள் அவைக்குள் வந்திருக்கிறார்கள். நேற்று வெளிநடப்பு செய்தபோது, அவர்கள் சொன்ன காரணம் என்னவென்றால் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியைப் பற்றி கவர்னர் உரையில் தெரிவித்தபோது, அவராக அவருடைய உரையைத் தெரிவிக்கவில்லை என்று சொல்கிறார்கள். சட்டமன்ற ஜனநாயகத்தினுடைய மாண்புகளை, பாராளுமன்ற ஜனநாயகத்தினுடைய மாண்புகளைப்பற்றி தெரியாதவர்கள் ஓர் அரசினுடைய செயல்பாடுகளை மட்டும்தான் ஆளுநர் உரையில் தெரிவிக்க முடியும் என்பதை தெரிந்துகொள்ளாதவர்கள் இன்று அவைக்கு வந்திருப்பது என்ன காரணம் என்று தெரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் ஈழத் தமிழர்களுக்கு எதிரான பிரச்சினையில் இராஜினாமா கடிதத்தைக் கொடுக்க வேண்டுமென்று சொன்னால், நாடாளுமன்ற சபாநாயகரிடம் கொடுக்காமல், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் அவர்களிடம் கொடுத்ததைப்போன்று, (மேசையைத் தட்டும் ஒலி) அவருடைய மகன் 6-00 மணிக்கு வந்து, வீட்டில் கொலை மிரட்டல் விடுகிறான் என்று சொன்னால், காவல் துறையிடம் போய் complaint கொடுக்காமல், (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) தன்னுடைய மகன். . . (குறுக்கீடுகள்)

*முற்பகல் 11-30*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. கு.வ. மார்க்கண்டேயன்:** தன்னுடைய மகன் 6-00 மணிக்கு வீட்டுக்கு வந்து, தந்தையினுடைய அறைக்குச் சென்று கொலை மிரட்டல் விடுகிறான் என்று சொன்னால், (குறுக்கீடுகள்) "கொலை மிரட்டல் விடுகிறான், கொலை மிரட்டல் விடுகிறான்" என்று பத்திரிகையில் நாடகத்தை செப்புகிற கருணாநிதி, (குறுக்கீடுகள்) நாடகத்தை சொல்லுகிற தீய சக்தி கருணாநிதி, காவல் துறையிடம் "என் மகன் கொலை மிரட்டல் விடுகிறான்" என்று சொல்லியிருந்தால், கொலை முயற்சி வழக்கைப் பதிவு செய்து,

[திரு. கு.வ. மார்க்கண்டேயன்] [2014 ஜனவரி 31

மு.க. அழகிரியை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இன்றையதினம் சிறைக்குள் தள்ளியிருக்கும் என்பதைத் தெரியப்படுத்திக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் பேரவைத் தலைவர் இருக்கைக்கு முன்பு வந்து பேச முற்பட்டனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* டாக்டர் கிருஷ்ணசாமி, நீங்கள் ஏன் எழுந்திருக்கிறீர்கள்,? உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)*

**திரு. கு.வ. மார்க்கண்டேயன்:** திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மாண்புமிகு உறுப்பினர்கள். . . *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன் பேசுவார், *(குறுக்கீடுகள்)* திரு. துரைமுருகனைப் பேசச் சொல்லியிருக்கிறேன். *(குறுக்கீடுகள்)*

**திரு. கு.வ. மார்க்கண்டேயன்:** திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களைப் பார்த்து நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது முறையல்ல. *(குறுக்கீடுகள்)* உங்கள் துணைத் தலைவரைப் பேசச் சொல்லியிருக்கிறேன். திரு. துரைமுருகனை பேசச் சொல்லியிருக்கிறேன். அவரை அனுமதித்திருக்கிறேன். அவரை அழைத்திருக்கிறேன். அவர் பதில் சொல்லட்டும். *(குறுக்கீடுகள்)* அவரைப் பேச அனுமதித்திருக்கிறேன். *(குறுக்கீடுகள்)* அவர் பதில் சொல்லட்டும். இல்லை, சபாநாயகரை நிர்ப்பந்தப்படுத்த முடியாது. *(குறுக்கீடுகள்)* சபாநாயகரை நிர்ப்பந்தப்படுத்த முடியாது. உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். *(குறுக்கீடுகள்)* உங்களுடைய துணைத் தலைவர் திரு. துரைமுருகனை நான் பேசச் சொல்லியிருக்கிறேன். நீங்களெல்லாம் இருக்கைக்குச் சென்று அமருங்கள். இதற்குமேல் நீங்கள் ஏதாவது பேசினால் நான் நடவடிக்கை எடுக்க வேண்டிவரும். *(குறுக்கீடுகள்)* அனுமதியில்லை. இந்தமாதிரி பேசுவது முறையல்ல. *(குறுக்கீடுகள்)* இது முறையல்ல. நீங்கள் சபாநாயகரை மிரட்டுகிற மாதிரிப் பேசுவது முறையல்ல. திரு. ஜெ. அன்பழகன், உங்களை நான் warn பண்ணுகிறேன். *(குறுக்கீடு)* உங்களை நான் warn பண்ணுகிறேன். திரு. அன்பழகன், இது முறையல்ல. திரு. அன்பழகன் முறையில்லாமல் சபாநாயகரை மிரட்டுவதுபோல் பேசிய காரணத்தினால், திரு. அன்பழகனை வெளியேற்றும்படி அவைக் காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன்.



2014 ஜனவரி 31] [மாண்புமிகு பேரவைத் தலைவர்]

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டார்.)*

இது முறையல்ல. சபையின் நடுவே வந்து நின்று கொண்டு சபாநாயகரை மிரட்டுவது நியாயமா? *(குறுக்கீடுகள்)* அவையை நான் எப்படி நடத்துவது? *(குறுக்கீடுகள்)* நீங்கள் ஒரு மூத்த உறுப்பினர், உங்களைப் பேசுவதற்கு அனுமதித்திருக்கிறேன். சொல்லுங்கள் உங்களைப் பேசுவதற்கு அனுமதித்த பிறகு, அவர்கள் இந்தமாதிரி வந்து நின்றுகொண்டு சபாநாயகரை மிரட்டுவது முறையல்ல. அவையை நான் எப்படி நடத்த முடியும்? *(குறுக்கீடுகள்)* திரு. துரைமுருகன் நான் உங்களைப் பேச அனுமதித்துள்ளேன். உங்களை நான் அனுமதித்த பிறகு இந்தமாதிரி வந்து முறையில்லாமல் நடந்து கொண்டால் நான் எப்படி சபையை நடத்துவது? இதெல்லாம் முறையல்ல. *(குறுக்கீடுகள்)*

**திரு. கு.வ. மார்க்கண்டேயன்:** நான் ஒன்றும் இந்த அவை மரபுக்கு மாறான கருத்துகளைத் தெரிவிக்கவில்லை. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். திரு. துரைமுருகன், என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கவர்னர் உரைக்குச் சம்பந்தம் இல்லாமல் எங்களுடைய கட்சித் தலைவருடைய மகனை இழுத்து பேசியிருப்பது இந்த மன்றத்திற்கு ஏற்புடையதல்ல. எனவே, அவையினுடைய கண்ணியத்தைக் கருதி, அருள்கூர்ந்து தாங்கள் அவர் பேசிய பேச்சுக்களை சபை நடவடிக்கைகளில் இருந்து எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அதை பார்த்துவிட்டு முடிவு சொல்கிறேன். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

*முற்பகல் 11-35*

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர். . . *(குறுக்கீடுகள்)*

[2014 ஜனவரி 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், இல்லை, இல்லை. மாற்றுக் கருத்து ஏதாவது இருந்தால் உங்களை சொல்லச் சொன்னேன். (குறுக்கீடுகள்) அவை முன்னவர் பேசுவதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) போய் இருக்கையில் உட்காருங்கள்.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேரவைத் தலைவரின் இருக்கைக்கு அருகில் வந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாற்றுக் கருத்து இருந்தால் சொல்லச் சொல்லித்தான் அவரை அனுமதித்தேன். (குறுக்கீடுகள்) அவர் பேசியதில் மாற்றுக் கருத்து ஏதாவது இருந்தால் சொல்லச் சொல்லித்தான் திரு. துரைமுருகனுக்கு பேசுவதற்கு அனுமதி கொடுத்தேன். (குறுக்கீடுகள்) திரு. சக்கரபாணி, உங்கள் இடத்திற்குப் போய் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் இடத்திற்குப் போய் உட்காருங்கள். திரு. டி.ஆர்.பி. ராஜா, உங்கள் இடத்திற்குப் போய் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இது முறையல்ல. முதலில் உங்கள் இடத்திற்குப் போய் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் (குறுக்கீடுகள்) திரு. கு.வ. மார்க்கண்டேயன் அவர்கள் பேசுகிறபோது தவறான வார்த்தை எதையும் அவர் பிரயோகிக்கவில்லை. (குறுக்கீடுகள்) பேசி முடித்துவிடுகிறேன். உங்களுடைய தலைவர் சொன்னதை அப்படியேதான் சொன்னார். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அதிலே மாறுபட்டதாகவோ, விதிக்குப் புறம்பாக, மாற்றி, வேறு பொருள் படும்படியானதாகவோ ஏதாவது பேசியிருந்தால் சொல்லுங்கள். அதை விடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பழகன் அவர்கள் மாண்புமிகு பேரவைத் தலைவர் முன்னால் வந்து, அவர்களைக் கையைக் காட்டி மிரட்டுகின்ற பாணியில் பேசுகிறாரென்றால், அது ஏற்கக்கூடியதா? (குறுக்கீடுகள்) முதலில் இதற்கு கடுமையான நடவடிக்கையை மாண்புமிகு பேரவைத் தலைவர் எடுக்க வேண்டும். இந்தப் பொருள் குறித்து மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் முடிவு சொல்லிவிட்டார்கள். அதற்குப் பிறகு நான் இங்கு கருத்துச் சொல்வது ஏற்புடையதாக இருக்காது.



2014 ஜனவரி 31] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

(குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்கள் ஆய்வு செய்யப்படும் என்று சொல்லியிருக்கின்றார்கள். பொறுமையாக இருந்து திரு. கு.வ. மார்க்கண்டேயன் அவர்கள் மேற்கொண்டு பேசுவதை நீங்கள் கேட்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், நீங்கள் அவர் சொன்ன கருத்துக்கு மாற்றுக் கருத்து ஏதாவது இருந்தால், சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகையில் பேட்டி கொடுத்திருக்கின்ற. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கோபாவேசத்தோடு கருத்துகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். திரு. மார்க்கண்டேயன் அவர்கள் பேசியது அவை நடவடிக்கையில் பதியக்கூடாது, எடுக்க வேண்டுமென்று கூறுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்கிறேன், அவர்களுடைய கட்சித் தலைவர் செய்திகள் வெளியிட்டு, உலகம் முழுவதும் தொலைக்காட்சிகளிலும், பத்திரிகைகளிலும் வெளிவந்து (மேசையைத் தட்டும் ஒலி) உலக மக்கள், தமிழ் பேசக்கூடிய அத்தனை மனிதர்களுடைய மனதிலும் ஆழமாகப் பதிந்த ஒரு கருத்தை சட்டமன்றத்திலே பதிவதில் என்ன தவறு என்று நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களிடம் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன். (குறுக்கீடுகள்) இருங்கள், இருங்கள். (குறுக்கீடுகள்) இந்த மாதிரி முறையில்லாமல் பேசுவது தவறு. நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். அவரைப் பேசுவதற்கு அனுமதித்திருக்கிறேன். உங்கள் உறுப்பினரைத்தான் பேசுவதற்கு அனுமதித்திருக்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்களிடத்திலிருந்து நான் அத்தகைய பதிலை எதிர்பார்க்கவில்லை. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், “பேசுவதிலே என்ன தவறு” என்று கேட்கிறார். நான் சொன்னது இதுதான், ஆளுநர் உரைக்கும், அந்தச்

[2014 ஜனவரி 31

செய்திக்கும் சம்பந்தம் இல்லை; ** ஆனால் நாங்கள். . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பேசுவார்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவர்களுடைய பிரச்சினையை, இவர்கள் தலைவர் வெளியிட்ட அறிக்கையைப் பார்த்து, இன்று நாடே சந்தி சிரித்துக் கொண்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) ஆகவே, திரு. துரைமுருகன் அவர்கள் சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். (குறுக்கீடுகள்)

*முற்பகல் 11-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவசங்கர், இதெல்லாம் சரியில்லை. (குறுக்கீடுகள்) ஆளுநர் உரையைப் பற்றி நீங்கள் தவறாகப் பேசாதீர்கள். (குறுக்கீடுகள்) மாற்றுக் கருத்து இருந்தால் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அவர் சொன்ன கருத்துக்கு மாற்றுக் கருத்து இருந்தால் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவருடைய கருத்தைச் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் (குறுக்கீடுகள்)

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேரவைத் தலைவரின் இருக்கைக்கு அருகில் நின்றுகொண்டு தொடர்ந்து பேச முற்பட்டனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகிறார்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2014 ஜனவரி 31]

தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் ஏதோ ஒரு கருத்தைச் சொன்னார். ** என்று சொல்லியிருக்கிறார். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்தது அவருடைய தலைவர் கையாலாகாமல், பத்திரிகைகளுக்குப் பேட்டி கொடுத்துவிட்டு, ஒரு மகனை இன்னொரு மகன் கொலை செய்வதாகச் சொல்கிறான் என்று சொல்லி, அதற்கு வழக்குப் பதிவு செய்யாமல் அதை அரசியலாக்கிக் கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) இப்படிப்பட்டவர்களால் எந்தவகையில் எப்படி ** (குறுக்கீடுகள்) இவர்களுக்கு அந்த தைரியம் இருக்கிறதா? (குறுக்கீடு) குடும்பத்தைச் சரி செய்ய முடியாத இந்தத் தலைவர்களால் நாட்டை எப்படிச் சரி செய்ய முடியும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் மாண்புமிகு பேரவைத் தலைவர் இருக்கைக்கு அருகில் நின்றுகொண்டு கோஷமிட்டனர். திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்கள் ஆளுநர் உரைப் பிரதியைக் கிழித்தார்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் பேசிய கருத்து அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் அவைக்கு ஒவ்வாத வகையிலே ஆளுநர் அவர்கள் உரை பிரதிகளைக் கிழித்ததனால் (குறுக்கீடுகள்) அவையில் ஒழுங்கீனமாக நடந்துகொண்டதனால் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை அவையிலேயிருந்து வெளியேற்றும்படி அவைக் காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன். (குறுக்கீடுகள்)

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.)*

திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பிலே ஏறாது. (குறுக்கீடுகள்) திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை உடனடியாக வெளியேற்றும்படி அவைக் காவலர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) அவர்களை அப்புறப்படுத்தக் கேட்டுக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து கோஷமிட்டுக்கொண்டு சென்றனர்.)*

திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை அவையிலிருந்து சீக்கிரம் வெளியேற்றும்படி அவைக் காவலர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.வ. மார்க்கண்டேயன், நீங்கள் தொடர்ந்து பேசுங்கள்.

**திரு. கு.வ. மார்க்கண்டேயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைக்குக் குந்தகம் விளைவிக்கக்கூடிய அளவிற்கு செயல்பட்டவர்கள், மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** லாபியில் கோஷமிட்டுக் கொண்டிருக்கும் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை அங்கிருந்து வெளியேற்றும்படி அவைக் காவலர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கு.வ. மார்க்கண்டேயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் தெரிவித்ததைப்போன்று, தன்னுடைய மகன் காலை 6.00 மணிக்கு தனது வீட்டிற்கு வந்து கொலை முயற்சி விடுக்கிறான் என்ற செய்தியை, அவர்கள் குடும்ப தொலைக்காட்சி மற்றும் பத்திரிகைகளில் வெளியிட்டதைப் போன்று, காவல் துறைக்கும் சொல்லியிருந்தால் நடவடிக்கை எடுத்திருப்பார்கள் என்ற செய்தியைத்தான் நான் இந்தச் சட்டமன்றத்திலே பதிவு செய்ய விரும்பினேன் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசின் மாட்சிகளை மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தனது உரையில் குறிப்பிட்டிருந்தார்கள். மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் இருந்த இருண்ட தமிழகத்தை இரண்டரை ஆண்டுக்குள் ஒளிமயமாக்கியது புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) வானம் பொய்த்துவிட்டபோதிலும், 1.86 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையில்லாத அரசி கொடுத்ததும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுதான். (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் பள்ளியில் படிக்கும்போது நடுத்தரக் குடும்பங்களில் தீபாவளிக்கும், ஊர்கூடி பொங்கல் திருவிழாவிற்கும்





என வருடத்திற்கு இரண்டு ஜோடி புத்தாடைகளே கிடைக்கும். அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் படிக்கின்ற அத்துணை மாணவ, மாணாக்கியர்களுக்கும் 4 ஜோடி விலையில்லா சீருடைகள் கொடுத்ததும் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில்தான். தூக்குச் சட்டியில் சாப்பாடு கொண்டுவர வேண்டாம் என்று சொல்லி, தினமும் முட்டையுடன்கூடிய கலவை சாதம் வழங்கியதும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான். பஸ்சுக்கு காசு கொடுக்க முடியல, பக்கத்து தோட்டத்திற்கு வேலைக்கு போய்யா என்று அப்பா சொல்லிவிடக்கூடாது என்று விலையில்லா பஸ் பாஸ் கொடுத்ததும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான்.

*முற்பகல் 11-45*

அப்பா சைக்கிள் வாங்கித் தரமாட்டாரா என்று ஏங்கித் தவித்த எங்கள் மாணவப் பருவம் ஏமாற்றத்தில் முடிந்துவிட, 11-வது வகுப்பு, 12-வது வகுப்பு படிக்கும் அத்தனை மாணாக்கர்களுக்கும் சைக்கிள் வாங்கிக் கொடுத்தவரும் மாண்புமிகு அம்மா அவர்கள்தான். உலக நாட்டு மாணவர்களோடு போட்டிப் போட மடிக்கணினி வாங்கிக் கொடுத்தவரும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். கவுன்சிலிங்குக்கு போவதற்கு 5,000 ரூபாய் பணம் வேண்டுமே என்று கண்கலங்கி நிற்கும் மாணவ சமுதாயத்தினரைத் தேற்றிவிட, 10-வது வகுப்பில் 1,500 ரூபாய், 11-வது வகுப்பில் 1,500 ரூபாய், 12-வது வகுப்பில் 2,000 ரூபாய் என மொத்தம் 5,000 ரூபாய் வைப்புத் தொகையை மாணவ சமுதாயத்தினருக்கு அள்ளிக் கொடுத்ததும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான். கலர் பென்சில் விலையில்லாமல் கொடுத்தார்கள்; புத்தகம் விலையில்லாமல் கொடுத்தார்கள்; நோட்டுப் புத்தகம் விலையில்லாமல் கொடுத்தார்கள்; பாதங்கள் தேய்ந்துவிடக் கூடாது என்பதற்காக காலணிகளும் விலையில்லாமல் கொடுத்தார்கள்; புத்தகப் பையும் விலையில்லாமல் கொடுத்தார்கள். பெண்களின் உயர் கல்வியை ஊக்குவிப்பதற்காக, பட்டப்படிப்பு, பட்டயப்படிப்பு படித்திருக்கிற பெண்களுக்கு 50,000 ரூபாய் ரொக்கப் பணமும், தாலிக்கு 4 கிராம் தங்கத்தையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொடுத்தார்கள்.

[திரு. கு.வ. மார்க்கண்டேயன்] [2014 ஜனவரி 31

பேறுகால உதவி பெறுவதற்கு முதல் மூன்று மாதத்தில் 4,000 ரூபாயும், அடுத்த மூன்று மாத காலத்தில் 4,000 ரூபாயும், குழந்தையைப் பெற்று கணவன் வீட்டில்போய், பெற்றதாய் பிள்ளையைக் கொண்டுபோய் விடும்போது, அவர்கள் பணமில்லாமல் கஷ்டப்படக்கூடாது என்பதற்காக, நாட்டிலுள்ள பிள்ளைகள் அனைவருக்கும் பெற்ற தாயாக,

"ஈன்ற பொழுதின் பெரிதுஉவக்கும் தம்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்"

என்பதுபோன்று, அந்தக் குழந்தைக்கும் 4,000 ரூபாய் சீர் கொடுத்து, வழியனுப்பி வைப்பவரும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள்தான்.

மருத்துவ உதவி, இரத்தப் பரிசோதனை, ஸ்கேன் வசதி, 1.29 கோடி பேர் பயன் பெறக்கூடிய காப்பீட்டு வசதி, 1,255.85 கோடி செலவு செய்து சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை, இதய நோய் சிகிச்சைகள், எலும்பு மஜ்ஜை நோய் சிகிச்சைகள் என்று பல்வேறு சிகிச்சைகளுக்கு மருத்துக் காப்பீட்டு வசதி மூலம் அள்ளிக் கொடுத்ததும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான்.

4,000 கோடி ரூபாய் பணத்தை ஒதுக்கீடு செய்து, 37 இலட்சம் பயனாளிகளுக்கு 1,000 ரூபாய் மாத ஓய்வூதியம் கொடுத்ததும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான். வெற்றிலை வாங்குவதற்கு, பாக்கு வாங்குவதற்கு, ஒரு டீ குடிப்பதற்கு பேரப்பிள்ளை எப்பொழுது வருவான், பெத்த மகன் எப்பொழுது வருவான் என்று காத்திருந்த வயோதிகம் மிக்க தாய்-தந்தையர்களை, தாத்தாமார்களை, பாட்டிமார்களை காப்பற்றுவதற்கு 4,000 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்ததும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

சாலை வசதிகள் மேம்பட 2,500 கோடி ரூபாய் ஒதுக்கீடு, பசுமை வீடுகள் திட்டத்தில் 1.80 இலட்சம் ஒதுக்கீடு, பயனாளிகளுக்கு கட்டுப்படி ஆகவில்லை என்று சொல்லி, 2.10 இலட்சம் மதிப்பீட்டில் 3 இலட்சம் பசுமை வீடுகள் கொடுத்ததும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான். தாய் திட்டங்கள்மூலம் கிராமங்கள் முழுவதும் சிறப்பான மேம்பாடு, நகரப்புற மேம்பாட்டிற்கு ஆண்டிற்கு 500



2014 ஜனவரி 31] [திரு. கு.வ. மார்க்கண்டேயன்]

கோடி ரூபாய், சென்னை நகர்ப்புற மேம்பாட்டிற்கு 750 கோடி ரூபாய் ஒதுக்கீடு, மொத்தம் 21,750 குடியிருப்புகளை அமைத்து 7,253 குடும்பங்களை குடியமர்த்தியது, மெட்ரோ ரயில் திட்டத்திற்கு 3,060.74 கோடி, ஜப்பான் சர்வதேச கூட்டுறவு கடன் சங்கத்தின் மூலம் 3,864.83 கோடி என்று பல்வேறு திட்டங்களை நிறைவேற்றிக் கொடுத்ததும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுதான்.

வீரப்பனை விரட்டிப் பிடித்து, இந்த நாட்டை விட்டு அழித்ததும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தலைமையிலான காவல் துறைதான். போலீஸ் பக்ருதினைப் பிடித்ததும், பிலால் மாலிக்கை பிடித்ததும், இந்த நாட்டிலே வன்முறைகளில் யாரும் ஈடுபடக்கூடாது என்பதற்காக, சட்டம்-ஒழுங்கை சிறப்பாக்கியதும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மிகவும் மோசமாக இருந்த சட்டம்-ஒழுங்கை சீர்செய்து, 'சரித்திரத்தில் புகழ்மிக்க ஆட்சியை பிடித்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான்' என்று பெருமைப்படுகிற அளவிற்கு சட்டம்-ஒழுங்கை கொடுத்ததும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

மரபுசாரா வழிமுறைகளைப் பின்பற்றி கடல் நீரைக் குடிநீராக்குவது, தேர்வாய்க் கண்டிகை கிராமத்தில் புதிய நீர்த் தேக்கம் அமைத்தது, விவசாயிகளுக்கு சொட்டுநீர்ப் பாசனம் கொடுத்தது, liquid fertilizer திரவ உரங்களைக் கொடுத்து, மண்புழு உரக் கிடங்கு, பண்ணைக் குட்டைகளை உருவாக்குதல், பசுமைக் குடில், Polyhouse மூலம் காய்கறி விளைச்சலைப் பெருக்குவது போன்ற பல்வேறு திட்டங்களைக் கொடுத்ததும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான். கச்சத்தீவை மீட்டெடுக்கும் தீர்மானம், மீனவர் உரிமை காத்திட தீர்மானம், இலங்கையில் மீண்டும் தமிழ் உரிமை காத்திட தீர்மானம் ராஜபக்சே கொலைக் குற்றவாளி எனத் தீர்மானம்; இலங்கையின்மீது பொருளாதாரத் தடை விதிக்கும் தீர்மானம்; 10 கோடி தமிழ் மக்களின் உரிமை காக்க, இலங்கையில் நடைபெறும் காமன் வெல்த் மாநாட்டுக்கு இந்தியாவிலிருந்து யாரும் செல்லக் கூடாது எனத் தீர்மானம். இப்படி பல்வேறு தீர்மானங்களை இந்த நாட்டு மக்களுக்காக, தமிழ் மக்களுக்காக இந்தச் சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றிய உலகத் தமிழ் மக்களின் உன்னதமான

தலைவர், நாளைய பாரத தேசத்தை பாராளுகின்ற தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி தான் சிறப்பாக இருக்கிறதென்று இந்த ஆளுநர் உரையில், தெரிவித்திருப்பது மிகவும் சிறப்பு மிகுந்தது. (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11-50*

காவேரிப் பிரச்சினையைத் தீர்த்துவிட்டவர்; முல்லைப் பெரியாறு பிரச்சினையைத் தீர்த்துவிட்டவர்; பென்னிகுயிக் முதல் சுதந்திரப் போராட்டத் தியாகிகள், வீரபாண்டிய கட்டபொம்மன் வரை சிலை அமைத்துக் கொடுத்தவர்: ஓடாநிலையில் சுதந்திரப் போராட்ட தியாகிக்குச் சிலை; வீரத் தாய் குயிலிக்குச் சிலை; வேலுநாச்சியாருக்குச் சிலை என்று பல்வேறு சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கு எல்லாம் சிலை அமைத்துக் கொடுத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். மைனாரிட்டி கருணாநிதி அரசினுடைய கபட நாடகத்தை முடிவுக்குக் கொண்டுவந்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் திருந்தமாட்டார்கள் என்பதற்காக, இந்த நாட்டில் கூட்டணி தர்மத்தையே நாட்டை விட்டு வெளியேற்றி, சிறப்பான முறையில் ஆட்சி செய்திருக்கிறவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

பறவைகள் கிளைகளை நம்பி அமர்வதில்லை. சிறகுகளை நம்பியே அமர்கின்றன. அதுதான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். All birds find shelter during a rain, but the eagle avoids rain by flying above the clouds. அதுதான் எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். If you win you can lead, if you lose you can guide - என்ற விவேகானந்தரின் வரிகளையும், முயலும் வெல்லும், ஆமையும் வெல்லும். முயலாமை வெல்லாது என்ற வரிகளை எங்களுக்கெல்லாம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கற்றுக்கொடுத்திருக்கிறார்கள். அதனால்தான் அடிமை விலங்கை உடைத்தெறிய பாடுபட்ட ஆப்ரகாம் லிங்கன் அவர்கள்; கருப்பின மக்களுக்காகப் போராடிய மார்ட்டின் லூதர் கிங் அவர்கள்; புரட்சிகளின்மூலம் கியூபாவைப் பெற்ற ஃபிடல் காஸ்ட்ரோ மற்றும் சேகுவாரா அவர்கள்; செஞ்சீன மக்களை நல்வழிப்படுத்திய மாவோ அவர்கள்; உலகத் தொழிலாளர்களின் ஆட்சியை உருவாக்கிய லெனின் அவர்கள்; மூலதனத் தத்துவத்தின்மூலம்





உலகின் கவனத்தைப் புரட்டிப் போட்ட கார்ல் மார்க்ஸ் அவர்கள்; இரண்டாம் உலக யுத்தத்தில் சூரியனே மறையாத பிரிட்டிஷ் நாட்டு மக்களை அடிமை சாசனத்திலிருந்து காப்பாற்றிய சர்ச்சில் அவர்கள்; ஆப்பிரிக்க மக்கள்நாயகன் மண்டேலா அவர்கள்; தொடர் முயற்சியால் வெற்றி பெற்ற ராபர்ட் புரூஸ் அவர்கள்; முடியாதது என்பது என் அகராதியில் இல்லை என்ற நெப்போலியன் போனாபார்டேவினுடைய வரிகளை நினைவுக்கு கொண்டுவரக்கூடிய சரித்திர தலைவர், 32 வயதிற்குள்ளே உலகை வென்ற மகா அலெச்சாண்டர். (மேசையைத் தட்டும் ஒலி) உண்ணா நோன்பினையும், சத்யாகிரகத்தையும், அகிம்சையையும் உலகிற்குச் சொல்லிக்கொடுத்த மகாத்மா அவர்கள்; ஏழை மக்களுக்காகவே வாழ்ந்திட்ட அன்னை தெரசா அவர்கள்; 8-வது வள்ளல் புரட்சித் தலைவர் அவர்கள் ஆகிய இவர்கள் அனைவரின் மொத்த உருவமாய் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியத் திருநாட்டையே நாளை ஆளப்போகும் எங்கள் தமிழ்த் தாய்; இல்லை, இல்லை இனி இந்தியத் தாய் எனச் சொல்லி, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் இத்தீர்மானத்தினை முன்மொழிந்து உரையாற்றுவதில் பெருமைகொள்கிறேன். பல்வேறு அரசியல் கட்சிகள் இருந்தாலும், எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒன்றரை கோடி தொண்டர்களை நம்பி 'நாங்கள் 40-ஐயும் வெல்வோம், நாளை பாரதத்தையும் ஆள்வோம்' என்று சூளுரை கொடுத்திருக்கிறார்கள்.

ஒருமுறை ஒரு நாடோடி நடந்து போய் கொண்டிருந்தபோது அவனுக்குக் களைப்பாக இருந்தது. அதனால் ஒரு மரத்தடியிலே அவன் அமர்ந்தான். அங்கு இனிமையான காற்று வீசுவதை அவன் அதை ரசித்தான். காற்று வீசுகிறதே, சற்று படுப்பதற்கு படுக்கை கிடைத்தால் நன்றாக இருக்குமே என்று நினைத்தான். உடனே அவனுக்கு ஒரு படுக்கை கிடைத்தது. அந்தப் படுக்கையில் அமர்ந்திருக்கும்போது நல்ல அறுசுவை உணவு கிடைத்தால் நன்றாக இருக்கும் என்று நினைத்தான். அறுசுவை உணவும் கிடைத்தது. இப்படி நினைக்கிறதெல்லாம் கிடைக்கிறதே என்று எண்ணிக்கொண்டிருந்த வேளையில், இரவு ஆக, ஆக அவனுக்கு சற்று பயம் வந்தது. புலி வந்துவிடுமோ என்று நினைத்தான். புலியும் வந்தது. அது அவனை கடித்துக் குதறிவிட்டது. அந்த மரம் போன்றவர்தான் புரட்சித் தலைவி அம்மா என்ற கற்பகத் தரு. அந்த கற்பகத் தரு இருக்கிற இடத்தில் தன்னந்தனியாக இருந்த ஒருவரை சேர்த்துக்கொண்டு, 29 சட்டமன்ற உறுப்பினர்கள் ஆக்கி,

எதிர்க்கட்சித் தலைவராக்கி, காரில் தேசிய கொடியையும் கொடுத்து அவர்களை வலம் வரச் செய்து, எதிர்க்கட்சித் தலைவர் என்ற பதவியையும் கொடுத்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இந்த கற்பகத் தருவைவிட்டு, அவர்கள் வெளியே போய், பின்னர் டெல்லிக்குப் போகிறபோது single digit இடத்துடன்தான் தமிழகத்திற்குத் திரும்பி வந்திருக்கிறார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நாளைய பாரதத்தை ஆள்வதற்கு தலைசிறந்த தலைவராக விளங்குகிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

ஆளுநர் உரையில் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொடுத்திருக்கிற திட்டத்தைப்பற்றி சொல்ல வேண்டுமானால், இந்த நாட்டில் மகாபலி சக்கரவர்த்தி ஒருவர் இருந்தார். ஒருமுறை கிருஷ்ண பரமாத்மா மகாபலி சக்கரவர்த்தியினுடைய ஆட்சியைப் பார்க்க வேண்டுமென்று தருமரை அழைத்துப் போகிறார். தருமர் கிருஷ்ண பரமாத்மாவுடன் போகிறபோது, எனக்கு தாகமாக இருக்கிறது, தண்ணீர் வேண்டுமென்று கேட்க, பூபாள நாட்டிலே ஒரு வீட்டிலே இருக்கக்கூடிய பெண்ணை அழைத்து தருமருக்குத் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று கிருஷ்ண பரமாத்மா கேட்க, அவரும் ஒரு தங்கக் குவளையிலே தருமருக்குத் தண்ணீர் கொடுக்கிறார். தங்கக் குவளையிலே உள்ள தண்ணீரைக் குடித்துவிட்டு தருமர் அந்தக் குவளையை அந்தப் பெண்ணிடமே திருப்பிக் கொடுக்கிறார். அவ்வாறு கொடுக்கின்றபோது, அந்தப் பெண், 'எங்கள் நாட்டில் நாங்கள் கொடுத்தது எதையும் திரும்பப் பெறுவதில்லை' என்று சொல்லிவிடுகிறார். பின்னர் மகாபலி சக்கரவர்த்தியிடம் போகிறார்கள்; போகின்றபோது, தருமரை கிருஷ்ண பரமாத்மா அறிமுகம் செய்து வைக்கிறார். 'இவர்தான் இந்த நாட்டில், தொடர்ந்து தருமங்களை செய்து கொண்டிருக்கின்ற தரும சக்கரவர்த்தி' என்று சொல்கிறார். மகாபலி சக்கரவர்த்தி, 'எங்கள் நாட்டில், யாருமே, எதையுமே கேட்கமாட்டேன் என்கிறார்கள்' 'யாரும், எதையும் என்னிடம் கேட்டு வருவதில்லை' என்று சொல்கிறார்.

*முற்பகல் 11-55*

அதைப்போலத்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி, மகாபலி சக்கரவர்த்தியினுடைய ஆட்சி. *(மேசையைத் தட்டும் ஒலி)* 'இந்த நாட்டில் 'இல்லை' என்று ஏங்குகின்ற சூழ்நிலை என்றைக்கு மாறுகிறதோ, அன்றுதான் என்னுடைய நோக்கம் மனநிறைவோடு முழுமை அடையும்' என்று





மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தச் சட்டமன்றப் பேரவையில் உரை நிகழ்த்தியுள்ளார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிதான், மகாபலி சக்கரவர்த்தியினுடைய ஆட்சி. இந்த ஆட்சியில்தான் 1.86 கோடி மக்களுக்கு உணவு கொடுக்கப்படுகிறது; 20 கிலோ விலையில்லா அரிசி வழங்கப்படுகிறது. இந்த நாட்டில் இருக்கக்கூடிய அத்தனை பேருக்கும், உணவுக்குப் பஞ்சம் இல்லை.

ஒரு காலத்திலே கிராமத்திலே இருக்கக்கூடியவர்கள் பிள்ளைச் சோறுக்காக ஏங்கித் தவித்தபோது, பண்ணையார் வீட்டிலும், முதலாளி வீட்டிலும் போய் பிள்ளைச் சோறு கேட்பார்கள். பசு மாடுகள் வைத்திருக்கக்கூடிய முதலாளிகள் வீட்டில் போய் பால் மோர் கேட்பார்கள். ஆனால், எங்கள் அன்னையினுடைய ஆட்சியில், அன்னைத் தமிழகத்தை ஆண்டு கொண்டிருக்கிற அட்சய பாத்திரமாம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், *(மேசையைத் தட்டும் ஒலி)* யார் வீட்டிலும் யாரும் சென்று பிள்ளைச் சோறு கேட்டதாக இந்த மூன்றாண்டு கால வரலாற்றில் கிடையாது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி அவ்வளவு சிறப்பாக இருக்கிறது. பள்ளிக் குழந்தைகளுக்குத் தேவையான அனைத்தையும் அள்ளிக் கொடுத்திருக்கிற தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் நல்ல சாலைகள் போடப்பட்டுள்ளன; நல்லமுறையில் சட்டம்-ஒழுங்கு பராமரிக்கப்பட்டு வருகிறது. நல்ல சரித்திரம் மிக்க ஆட்சி நடைபெறுகிறது. இத்தகைய ஆட்சி, நாளைய பாரத தேசம் முழுவதும் நடைபெறுவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பாரதத் தாய் ஆவார்கள் என்று சொல்லி, வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி பாராட்டி விடைபெறுகின்றேன். வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கக்கூடிய தீர்மானத்தின்மீது பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நேற்றையதினம் நம் மத்தியிலே வந்து உரையாற்றிய மேதகு தமிழக ஆளுநர் அவர்களுக்கும் இந்த நேரத்திலே நன்றியை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[செல்வி கே. பாலபாரதி] [2014 ஜனவரி 31

ஆளுநர் உரை என்பது முதல் பக்கத்திலிருந்து, கடைசிப் பக்கம் வரை திட்டங்களால் சூழப்பட்டிருக்கவேண்டும் என்று யார் விளித்தார்கள் என்பது தெரியவில்லை. பஸ் ஸ்டாண்டிலே வந்து நின்றுகொண்டு, இரயில் வரவில்லை என்று வருத்தப்படக்கூடிய ஓர் அரசியல் சூழல் தமிழகத்திலே இருப்பது கவலை அளிப்பதாக இருக்கிறது. பேருந்து நிலையத்தில் பஸ்சை எதிர்பார்ப்பதும், இரயில் நிலையத்திலே இரயிலை எதிர்பார்ப்பதும் சாதாரணமாக மனிதர்களின் இயல்பான நடைமுறை. ஆகவே, ஆளுநர் உரை என்பது இந்தத் தமிழக அரசு, எந்தப் பகுதி மக்களுக்கான திட்டங்களில் என்ன கொள்கைகளை கடந்த காலங்களில் கடை பிடித்து வந்தது; எதிர்காலத்தில் என்ன கொள்கைகளைக் கடை பிடிக்கவிருக்கிறது என்பது குறித்த கோட்பாடுகளை வலியுறுத்துவதாக கடந்த காலங்களில் நாம் பார்த்திருக்கின்றோம்.

அந்த வகையிலே, ‘சர்வதேசப் பொருளாதாரச் சரிவினால் இந்திய அளவில் ஏற்பட்ட பொருளாதார பாதிப்பு, மத்திய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கைகளினால் அதிகமாகி, தமிழகத்தின் வளர்ச்சியையும் பெரிதும் பாதித்துள்ளது. இதை சரிசெய்வதற்கு இந்த அரசு முயற்சி செய்து வருவதைப் பாராட்டுகிறேன்’ என்று மேதகு ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ‘இந்த சர்வதேச பொருளாதாரச் சரிவு, இந்திய அளவில் ஏற்பட்டிருக்கக்கூடிய பொருளாதார பாதிப்பு, மத்திய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கையினால்’ என்று ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டபோது, நான் நிமிர்ந்து பார்த்தேன். அவர் ஏதோ ஆளுங்கட்சிக்காரரா, கம்யூனிஸ்டு கட்சிக்காரரா, பாரதிய ஜனதா கட்சிக்காரரா என்றால், அவர் மத்திய அரசால் நியமனம் செய்யப்பட்ட ஒரு பொதுவான மாநிலத்தினுடைய ஆளுநர். அவருடைய வார்த்தைகள் எவ்வளவு ஆழமான, உண்மையான வார்த்தைகள் என்பதை இந்த ஆளுநர் உரையினை தமிழக மக்கள் ஒவ்வொருவரும் பரிசீலிக்க வேண்டுமென்பதுதான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினுடைய வேண்டுகோள்.

ஏனென்றால், உலக அளவிலே இருக்கக்கூடிய பொருளாதாரச் சரிவு, இந்திய அரசு கடந்த காலங்களிலே கடைப்பிடித்த மிகத் தவறான, மோசமான கொள்கை, தமிழக மக்களினுடைய வளர்ச்சியை, தமிழக மக்களினுடைய தொழில் வளத்தை, வேளாண்மையை அடித்து நொறுக்கிக் கொண்டிருக்கிறது என்ற ஆதங்கத்தை மேதகு ஆளுநர் அவர்கள் சொல்லியிருக்கிறார் என்று



2014 ஜனவரி 31] [செல்வி கே. பாலபாரதி]

சொல்லும்போது இதுகுறித்து ஆளுநர் உரையின்மீது பேசாமல், இதில், ‘அ’-வைக் காணோம்; ‘க’-வைக் காணோம் என்று சொல்வது பொருத்தமான ஒன்றாக இருக்கமுடியாது. ஆகவேதான், தமிழகத்தைப் பொறுத்தவரையில் எந்த மாவட்டத்திற்குச் சென்றாலும் இது நான் அடிக்கடி பார்க்கின்ற ஒன்று. தேனி மாவட்டத்தில் பிரச்சாரத்தை நடத்திக் கொண்டிருந்தபொழுது, சிறிது தூரத்தில் மக்கள் வரிசையாக நின்றுகொண்டிருந்தார்கள். மக்கள் வரிசையாக நிற்கும் இடத்தை விட்டுவிட்டு, தனியாக, ஒருவருமே இல்லாத இடத்திற்கு பிரச்சாரம் செய்ய ஏன் வந்தோம் என்று கேட்கும்போது, அது ரேஷன் கடை என்று சொன்னார்கள். தமிழ்நாட்டில் மட்டும்தான் ரேஷன் கடைகளுக்கு முன்னால் ஏழை, எளிய மக்கள் வரிசையாக, க்யூவில் நின்று கூட்டம், கூட்டமாக பொருட்கள் வாங்கக்கூடிய நடைமுறை இருக்கிறது என்பது தமிழகத்திற்குப் பெருமை சேர்க்கின்ற ஒரு விஷயமாகவே நான் கருதுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நிலைமை எல்லா ஊர்களிலும் இருக்கிறது.

*நண்பகல் 12-00*

நான் எந்த மாவட்டத்திற்குச் சென்றாலும், சாதாரணமாக பெண்களைப் பார்க்கும்போது, பொங்கல் பொருட்கள் வந்துவிட்டதா என்று கேட்கும்போது, பொங்கலுக்கான பச்சரிசி வாங்கிவிட்டோம், 100 ரூபாயும் வாங்கிவிட்டோம், இலவச வேட்டி, சேலை மட்டும் இன்னும் வரவில்லை, தாமதமாகின்றது, அதை உரியவர்களிடம் சொல்லுங்கள் என்று சொல்வார்கள். அப்படி என்றால், உறவு என்பது, பொது விநியோக முறையோடு, அடித்தட்டு மக்களுக்கும், நடுத்தர மக்களுக்கும் இருக்கக்கூடிய உறவு என்பது தொப்புள் கொடி உறவாக நாங்கள் பார்க்கிறோம். இது சாதாரண மனிதனுடைய வாங்கும் உரிமை.

இந்தப் பொது விநியோக முறையை சீரழிப்பதற்கு மத்திய அரசாங்கம் கடந்த காலங்களில் எப்படி திட்டமிட்டது என்று பார்க்கும்போது, உணவுப் பாதுகாப்புச் சட்டம் என்று ஒன்றைக் கொண்டுவந்தார்கள். அதைக்கூட ஆளுநர் அவர்கள் மத்திய அரசால் நிறைவேற்றப்பட்டுள்ள தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கத்தை முழுமையாக எட்டாது என்று தனது உரையில் மிகத் தெளிவாக, மிக அழகாக குறிப்பிட்டிருக்கின்றார்கள். நேற்றுகூட இப்பேரவையில் உரையாற்றும்போது, எதிர்காலத்தில், உணவு

தானிய விலையை நிர்ணயிப்பதில் எந்த உறுதிமொழியையும் மத்திய அரசின் சட்டத்தில் வழங்கப்படவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

இப்பொழுது நகர்ப்புறத்தில் இருக்கக்கூடிய மக்களில் அதிகமானோர் ரேஷன் கடைகளுக்குச் சென்று பொருட்கள் வாங்குகிறார்கள். எதிர்காலத்தில் இந்தச் சட்டத்தின்படி நகர்ப்புற மக்களுக்கு ரேஷன் பொருட்களே கிடைக்காது, தகுதியுள்ள குடும்பங்களைக் கண்டறிவதிலேகூட எந்தவொரு தெளிவான திட்டமும் இல்லை என்று நமது மேதகு ஆளுநர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதைத்தான் அவர் கடந்த ஆண்டும் தனது உரையில் குறிப்பிட்டார்.

2013 ஆம் ஆண்டு ஆளுநர் தனது உரையில் 'உங்கள் கையில் உங்கள் பணம்' என்ற திட்டம் தமிழ்நாட்டு மக்களுக்கு உகந்ததாக இல்லை என்று தெரிவித்தார். இதை நான் பல கூட்டங்களிலே, கட்சி வேறுபாடற்ற முறையில் தமிழகத்தில் பல இடங்களில், தமிழக ஆளுநர் அவர்களே குறிப்பிட்டிருக்கிறார் என்று சொன்னபோது, அது எந்த அளவிற்கு மக்களுக்கு விரோதமான திட்டம் என்று எல்லோரும் யோசித்தார்கள். ஆகவே, இப்படிப்பட்ட ஒரு அபாயம் நம் முன்னே சூழ்ந்திருக்கிறது. இந்த அபாயத்தை எதிர்த்து, மாநில அரசு என்ற முறையில் தமிழக முதலமைச்சர் அவர்கள் நிகழ்த்தியிருக்கக்கூடிய போராட்டத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி வரவேற்கிறது.

இங்கே நான் இதைச் சொல்லும்போது, நாடாளுமன்றத் தேர்தல் கூட்டணிக்காக சொல்கிறேன் என்று நினைக்கக்கூடும். ஆனால், நாடாளுமன்றத் தேர்தல் கூட்டணி என்பதைக் காட்டிலும், இது ஒரு வலுவான போர்க்களம், பன்னாட்டு கார்ப்பரேட் கம்பெனிகள் இந்திய நாட்டின் பெரிய கட்சிகளான காங்கிரசுக்கும், பா.ஜ.க.-வுக்கும் பல இலட்சம் கோடி ரூபாய்களைக் கொடுத்திருக்கின்றன என்று ஆதாரபூர்வமாக பல செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, இந்தப் போர்க்களத்தில் கடந்த காலங்களில் பொது விநியோக முறையைப் பாதுகாப்பதற்கும், விலை உயர்வைக் கட்டுப்படுத்தவேண்டும் என்பதற்காகவும் போராடிய கட்சிகள் என்ற முறையிலே அதை இந்தச் சட்டமன்றத்திலே சொல்ல வேண்டும் என்ற கடமை உணர்வு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சிக்கு இருக்கிறது. ஆகவே, இப்பேரவையில் இருக்கக்கூடிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த



நண்பர்கள், அவர்களுடைய கொள்கையை நான் இங்கு சொல்வதாகக் கருதக் கூடாது. மத்திய அரசு கடைபிடித்த இந்தக் கொள்கைகள் மாநில மக்களை கடுமையாக பாதிக்கிறது.

மக்களுக்கு வழங்கப்படும் எல்.பி.ஜி. சிலிண்டர்கள் வருடத்திற்கு 9 சிலிண்டர்கள் என்ற எண்ணிக்கையிலிருந்து நேற்றுதான் 12 சிலிண்டர் என்ற எண்ணிக்கைக்கு உருண்டு ஓடியிருக்கிறது. அப்படியென்றால், எனக்கு எப்பொழுது சிலிண்டர் காலியாகின்றதோ அப்போது அதை மாற்றிக் கொள்வதற்கான எனது உரிமையைப் பறிப்பதற்கு மத்தியில் ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசுக்கு யார் அந்த அதிகாரத்தைக் கொடுத்தார்கள்? 9 சிலிண்டர்கள் என்று குறைத்து, இப்பொழுது 12 சிலிண்டர்கள் என்று கூறுகிறார்கள், அதுவும் யாருக்காக, ராகுல் காந்தி அவர்கள் கேட்டுக்கொண்டதற்காக 12 சிலிண்டர்கள் வழங்குவதாகக் கூறுகிறார்கள். ராகுல் காந்திதான் அடுப்பைப் பற்ற வைக்க சிலிண்டரைப் பயன்படுத்துகிறாரா? (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய நாட்டில் இருக்கக்கூடிய ஏழை, எளிய மக்கள், நடுத்தர மக்கள் பயன்படுத்துவதேயில்லையா? அப்படியானால், பொது விநியோக முறையில் சாதாரண மக்களுக்கு இருக்கக்கூடிய அடிப்படை உரிமையை, வாங்கும் உரிமையை, உயிர் வாழக்கூடிய உரிமையை மத்திய அரசு பறித்துக் கொண்டிருக்கிறது. அதை எதிர்க்கும் போராட்டத்தை கடந்த காலங்களில் எங்களுடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி நடத்தியிருக்கிறது. முன்பெல்லாம் இரயில்வே ஸ்டேஷனில் இரயிலின் முன்பு நின்று மறியல் செய்வோம். அப்போதும் காவல் துறையினர் அதை நடத்தவிடாமல், வந்து விடுங்கள் என்று சொல்வார்கள். இப்போது வருகின்ற இரயிலையாவது மறித்து போராடிப் பார்க்கலாம் என்றால், போலீசும் வருவதில்லை, இரயிலும் நிற்பதில்லை. அது Gas Cylinder-க்காக நடத்திய போராட்டம். இதுபோன்ற மறியலை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினர் நடத்தியிருக்கிறோம். ஆளும் கட்சி என்ற முறையில் அ.தி.மு.க. கட்சியினரும் நடத்தியிருக்கிறார்கள். மாநிலத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு முறையும் கியாஸ் சிலிண்டரின் விலையை உயர்த்தியபோதும், அதன் எண்ணிக்கையை குறைத்தபோதும், டீசல் விலையை ஏற்றியபோதும், கடுமையான கண்டன அறிக்கைகளை தொடர்ந்து தேசிய அளவில் அளித்து, நமக்காகக் குரல் கொடுத்தவர்கள் வலிமையான உறுதிமிக்க போராட்டத்தை நடத்தியவர் தமிழகத்தினுடைய முதலமைச்சர். (மேசையைத் தட்டும்

ஒலி) இந்த நடவடிக்கையை பாராட்டுவது மட்டுமல்ல, அந்தப் போராட்டத்தினை வலுப்படுத்த நாமும் கைகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-05*

இப்போது இன்னொருவர் வந்திருக்கிறார். குஜராத் மாநிலத்தில்தான் வளர்ச்சியை கண்டு பிடித்தார்களாம். வளர்ச்சி என்ற வார்த்தையே குஜராத் மாநிலத்தில்தான் உருவாகியது என்கிறார்கள். அவரைப் பார்த்தால் வாஜ்பாய் மாதிரி தெரிகிறது, அத்வானி மாதிரி தெரிகிறார் என்கிறார் ஒருவர். சொல்வது குஜராத் மாநிலத்துக்காரர் அல்ல, தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்தான் அவ்வாறு சொல்கிறார். இல்லையே, அவர் மோடியைப்போல்தான் தெரிகிறார் என்கிறார் இன்னொருவர்.

நீங்கள் குஜராத் மாநிலத்தினுடைய வளர்ச்சியை தமிழ்நாட்டு மாநிலத்திலோடு ஒப்பிட்டுப் பாருங்கள். இந்த ஆளுநர் உரையில் தெரிவித்தவாறு, அரசு காப்பீட்டுத் திட்டத்தின்படி, தமிழகத்தில் அரசு மருத்துவமனைகள் மூலமாக சிகிச்சை அளிக்கப்பட்டு, ரூ.1,250 கோடிக்கு மேல் வருவாய் வந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஆட்சியில் இந்த காப்பீட்டுத் திட்டம் தனியார் மருத்துவமனைகளின்வசம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அரசு மருத்துவமனைகளிடம் காப்பீட்டுத் திட்டம் வழங்கப்பட்டிருப்பதால், திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள சாதாரண அரசு மருத்துவமனைகளில், ஓர் ஆண்டில், காப்பீட்டுத் திட்டத்தின்படி சிகிச்சை அளிக்கப்பட்ட வகையில் ரூ.2 கோடிக்கு மேல் வருமானம் வந்துள்ளது. சிகிச்சைக்காக மருத்துவக் கருவிகளையெல்லாம் வாங்கி வைத்திருக்கிறார்கள். மருத்துவர்கள்தான் போதிய அளவில் இல்லை. மருத்துவர்கள் வேண்டும் என்று நாங்கள் கோரி வருகிறோம்.

ஆரம்ப சுகாதார நிலையங்களில், வேறு எந்த தனியார் மருத்துவமனைகளில் அல்ல, ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஒரு வருடத்தில் 250 பேருக்கு மேல் பிரசவம் பார்க்கப்பட்ட காரணத்தினால், விஜய் டீ.வி. அவர்களைக் கூப்பிட்டு அவார்டு வழங்கியுள்ளது. இதனை குஜராத் மாநிலத்தோடு ஒப்பிட்டுப் பாருங்கள். அங்கு எந்த மருத்துவமனை இப்படி செயல்பட்டிருக்கிறது?



கல்வி நிலையங்களை எடுத்துக்கொண்டால், கல்வியைப் பொறுத்தவரையில் அதனை தனியார்வசம் ஒப்படைக்க வேண்டுமென்பதுதான் மத்திய அரசின் கொள்கை. ஒரு மருத்துவ படிப்பிற்கு 50 இலட்சம் ரூபாய், 60 இலட்சம் ரூபாய் என தனியார் கல்லூரிகளில் வசூலிக்கின்ற நிலைமை உள்ளது. சிதம்பரத்தில் உள்ள அண்ணாமலை பல்கலைக்கழகத்தை ஒரு நயா பைசாக்கூட வாங்காமல் அரசுடைமையாக்கியது சாதாரணமான விஷயமா? அதற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியும், அங்கு இருக்கக்கூடிய ஊழியர்களும் பல வருடங்களாக போராடி வந்தோம். ஆனால், அ.தி.மு.க. அரசுதான் அந்தப் பல்கலைக்கழகம் அரசுடைமையாக்கப்பட்டு மருத்துவப் படிப்பை இலவசமாக தகுதியானவர்களுக்கு கொடுக்கக்கூடிய நடவடிக்கையை எடுத்திருக்கிறது.

குஜராத்தில் வளர்ச்சி என்கிறார்கள், பாரத நாட்டிற்கே அவர்தான் வழிகாட்டுபவர் என்று இங்கே கூறிக்கொண்டு இருக்கிறார்கள். 2002 ஆம் ஆண்டு கோத்ரா சம்பவத்திலிருந்து இன்று வரைக்கும், பசு வதை தடைச் சட்டம் குஜராத்தில் இருக்கிறது. கிறிஸ்த்துவர், இஸ்லாமிய மக்கள் இருக்கிறார்கள். இஸ்லாமிய மக்கள் வெள்ளிக்கிழமை இரவு என்றால், அந்த வீட்டில் யார் யார் இருக்கிறார்களென்ற விவரத்தை காவல் நிலையத்தில் தெரிவிக்க வேண்டுமென்று இருக்கிறது. மனித நேய மக்கள் கட்சியினருக்கு இது தெரியும். இதனை வெளிப்படுத்த முடியாத நடைமுறை இருக்கின்றது. விவசாயி தனது வீட்டில் bore போட வேண்டுமென்றால், அங்கு நீர் தடுப்புச் சட்டம் ஒன்று இருக்கிறது. இப்படி பல சட்டங்களைச் சொல்ல முடியும். ஆனால், தமிழகத்தில் மதச்சார்பற்ற அரசியல் என்பது இன்றைக்கும் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அவர் ஐயப்பன் மலைக்குப் போவார்,(மேசையைத் தட்டும் ஒலி) இறங்கி வந்து குல தெய்வ கோயிலுக்கு ஆட்டையும் வெட்டுவார். வேளாங்கண்ணி கோயிலுக்குச் சென்று மொட்டையும் அடிப்பார். பக்கத்தில் உள்ள நாகை அம்மன் கோயிலுக்கும் போவார். மேட்டுப்பட்டி கிராமத்தில் நடக்கும் பாஸ்கா திருவிழாவில் எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும் கலந்துகொள்வார்கள். எல்லா சாமியையும் கும்பிடுவார்கள். பெரியாருக்கு நான்தான் பக்தர் என்பார். அதுதான் தமிழகத்தினுடைய பன்முக, அரசியல் மத நல்லிணக்க கலாச்சார

பண்பாடு. அது மக்கள் மத்தியில் இருக்கிறது. அதை வளர்க்கக்கூடிய அரசாங்கமாக, ஒரு முதலமைச்சராக தமிழக முதல்வர் இருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவேதான், இவ்வளவு அழகான மத நல்லிணக்கம், மதச் சார்பற்ற அரசியல். அதைப் பின்பற்றக்கூடிய மக்கள் இருக்கக்கூடிய மாநிலம் இந்தியாவிற்கு வழிகாட்டியாக இருக்கிறது. குஜராத் மாநிலத்தில், மதவெறி அரசியலோடு இருக்கக்கூடிய, எந்த வளர்ச்சியும் இல்லாத குஜராத் மாநில முதலமைச்சர்தான் வழிகாட்டியாக இருப்பார் என்று ஒரு கதை சொல்லப்படுகிறதே! அந்தக் கதை தமிழகத்தில் நடந்தால், தமிழகத்தில் இருக்கக்கூடிய பன்முக கலாச்சார தன்மை பாழ்படும். மதவெறி என்பது அரசியலில் புகுந்தால் மிக மோசமாக மாறும். ஆகவேதான், இப்படிப்பட்ட மத வெறியற்ற, ஒரு மதச் சார்பற்ற, மத நல்லிணக்க அரசியலோடு சேர்ந்துள்ளோம். மக்கள் விரோத கொள்கைகளை கடைபிடித்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் இடம்பெற்ற காங்கிரஸ், அதோடு உறவு வைத்த தி.மு.க. பாவம். ஐக்கிய முற்போக்குக் கூட்டணி எல்லா கதவுகளையும் திறந்து வைத்திருக்கிறது. இவையெல்லாம் ஒரு நாடகம் என்று மற்றொருவர் விமர்சனம் செய்கிறார். காங்கிரஸ் கட்சியோடு சேருவதற்கு ஆளைக் காணோம், தி.மு.க.-வோடு சேருவதற்கும் ஆளைக் காணோம் (மேசையைத் தட்டும் ஒலி).

*பிற்பகல் 12-10*

மக்களுக்குக் கடுமையான பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. ஏற்கெனவே வறட்சி; மீண்டும் வறட்சி நம்மைத் தாக்கியிருக்கிறது. இதை ஆளுநர் உரையில் மிக அழகாகச் சொல்லியிருக்கிறார்கள். 33 விழுக்காடுதான் வட கிழக்குப் பருவ மழை இப்போது தமிழ்நாட்டில் பெய்திருக்கிறது. அதுமட்டுமல்ல, ஆளுநர் தனது உரையில் நீர்வளம் குறைவான மாநிலங்களில் தமிழகமும் ஒன்று என்று சொல்லியிருக்கிறார். நீர்வளம் இல்லை, இப்போது நமக்குப் பருவ மழையும் இல்லை, இயற்கையும் நம்மைப் பழி வாங்குகிறது. மத்திய அரசின் 14-வது நிதிக் குழு வந்தது. அய்யா, பணம் கொடுக்கிறதைக் கொடுக்கிறீர்கள், நியாயமான முறையில் கொடுங்கள் என்று மாநில அரசு கருத்து சொல்லியிருக்கிறது. நிதிப் பங்கீடு வெளிப்படையான முறையில் இல்லை. இப்படி பொருளாதார நெருக்கடியாக இருக்கின்ற ஒரு சூழ்நிலையில், இயற்கை சீற்றங்களின் மத்தியில், 1,600 கோடி ரூபாய் வறட்சி நிவாரணமாக தமிழகத்தினுடைய விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதென்று சொன்னால் (மேசையைத் தட்டும் ஒலி) இதைப் பாராட்டுவதற்காக நான் சொல்லவில்லை. விவசாயிகளுக்கு இன்றைக்கு ஒரு பைசாகூட கொடுக்காத மத்திய அரசு, அதனுடைய கொள்கை என்னவாக இருக்கிறது என்ற கேள்வி இருக்கிறதா, இல்லையா? ஒரு மாநில அரசு இவ்வளவு பெரிய சுமைகளையும் சுமக்க முடியுமா? இரண்டாம் முறை வறட்சிக்குண்டான எல்லா மாவட்டங்களும் சேர்ந்து தீர்மானத்தைப் போட்டு மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் மழை பெய்யவில்லை என்று சொன்னால், அவர் இல்லையே, மழை பெய்திருக்கிறதே என்கிறார். இல்லை சார், அறிக்கை கொடுங்கள் என்று சொன்னபிறகு சரி அனுப்புகிறேன் என்று அவர் சொல்கிறார். நமது மாநிலத்தில் இந்த வறட்சியின் காரணமாக குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. சென்னைப் பெருநகரத்தில் வறட்சி மக்களை நெருக்கிக் கொண்டிருக்கிறது. ஒரு அற்புதமான திட்டம் கடல் நீரை குடிநீராக்கக்கூடிய திட்டம் என்பது சாதாரண ஒரு விஷயம் அல்ல, பாராட்டக்கூடிய ஒரு விஷயம். (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் ஊரில் பக்கத்தில் இருக்கக்கூடிய குளமும், குட்டையும் தண்ணீர் இல்லாமல் வறண்டு கிடக்கிறது. ஆகவே, இதுபோன்ற மக்கள் பிரச்சினைகளில் மத்திய அரசை மாநில அரசு அணுகும்போது அவர்கள் மக்களுக்காக இதுபோன்ற நல்லபல திட்டங்களைக் கொண்டு வர வேண்டும்.





அடுத்து பட்டா: நகர்ப்புறங்களில் வீடில்லாத மக்களால் வாடகையும் கொடுக்க முடியாது. அவர்களுக்கு சொந்த வீடும் கிடையாது. இந்தப் பிரச்சினையை யார் பேசுவது? யாருமே பேசவில்லை. வரக்கூடிய வருமானத்தில் வீட்டு வாடகை இரண்டு மடங்காக இருக்கிறது. இந்த வீட்டு வாடகையை கொடுக்க முடியாத ஏழையெளிய மக்கள் பூக்களைக் கட்டி வியாபாரம் பண்ணுகிறவர்கள் பஸ் ஸ்டாண்டிலே படுத்து தூங்குகிறார்கள். கேட்டால் வீடு இல்லை என்று சொல்கிறார்கள். கிராமப்புற ஏழைகளுக்கு இன்றைக்கு பசுமை வீட்டுத் திட்டம் பயனுள்ளதாக இருக்கிறது. நகர்ப்புற ஏழைகளுக்கு ஆளுநர் உரையில் அதுபற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இது ஒரு நல்ல திட்டம். தமிழகத்திலுள்ள சிறுநகரங்கள், பெருநகரங்களில் வீடில்லாத ஏழைகளைக் கண்டறிந்து அவர்கள் குடியிருப்பதற்கான வீடுகளை கொடுக்கக்கூடிய ஒரு திட்டம்; அந்தத் திட்டத்தை பலப்படுத்த வேண்டும். தமிழக அரசின் இந்தத் திட்டம் எதிர்காலத்திலே சாதாரண அடித்தட்டு மக்களுக்கும் மிகப் பெரிய அடிப்படை உரிமையை வழங்குவதாக அமையும் என்று

நாங்கள் நம்புகிறோம். அதேமாதிரி ஏற்கெனவே குடியிருக்கின்ற வீடுகளுக்கு பட்டா வழங்குவதற்கான அரசாணையை மூன்று முறை நீங்கள் புதுப்பித்திருக்கிறீர்கள். இப்போது மீண்டும் கொடுத்துக்கொண்டிருக்கிறீர்கள். கோயில் நிலங்களில் குடியிருப்பவர்களிடம் அதேபோன்று குளத்துப் புறம்போக்கில் குளத்திற்கு சற்று தள்ளி வீடு கட்டியிருப்பவர்களிடம் டிராக்டர் வைத்து இடிக்கப்போகிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால், குளம் சற்று தள்ளி இருக்கிறது. இதுபோன்ற பிரச்சினைகளில் அந்த அடித்தட்டு மக்கள், ஏழைகள் எல்லாம் என்ன சொல்கிறார்கள் என்பதைக் கேட்டறிந்து அவர்களுக்கு பட்டா வழங்க வாய்ப்பிருந்தால், கால அவகாசத்தை நீட்டித்துக் கொடுக்கவேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

அடுத்தது செவிலியர்கள், அரசு செவிலியர்கள் சில கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அதேபோன்று தனியார் நர்சிங் கல்லூரிகளிலே படிக்கக்கூடியவர்களுக்கு வேலையே கொடுக்கக் கூடாது என்று சொல்ல முடியாது. அதேபோன்று நோயாளிகளோடு இரவும் பகலுமாக உடனிருப்பவர்கள் அரசு செவிலியர்கள். இருவருடைய பிரச்சினையும் வேலை பிரச்சினைதான். இருவருமே தமிழகத்தைச் சார்ந்தவர்கள்தான். ஆகவே, அவர்களை அழைத்து சுமுகமாகப் பேசி, பிரச்சினைகளை பெரிதாக்காமல் அவர்களுக்கு எந்தவிதத்தில் உதவ வேண்டுமென்பது குறித்து சம்பந்தப்பட்ட துறை பேசி முடிவு செய்யவேண்டும்.

அதேபோன்று ஆசிரியர் தகுதித் தேர்வு: நம்முடைய மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள், NET, SLET-ஐப் போன்றுதான் ஆசிரியர்களுக்குத் தகுதித் தேர்வு என்று சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் அதை வரவேற்கிறோம். ஆனால், அந்தத் தகுதித் தேர்வில் அரசாணை 151-ல் அடிப்படை என்று போடப்பட்டிருக்கிறது. அந்த NET, SLET-ல் இருக்கக்கூடிய இட ஒதுக்கீடு பின்பற்றப்படுகிறது. இந்த TET-ல் அது பின்பற்றப்படுவதில்லை. ஏதோ சில பிரச்சினைகள் இருக்கலாம். அதைக் கண்டறிந்து பிரச்சினையை அகற்றவேண்டும். ஆசிரியர் பணி வழங்குவதிலே தாழ்த்தப்பட்டவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்களுக்கான இட ஒதுக்கீட்டு முறையை கடைப்பிடிக்க வேண்டும். அது சிறுபான்மையினருக்கும் சென்று சேர்வதற்கு உதவி செய்யும் என்ற முறையிலேதான் அந்தக் கோரிக்கையை நாங்கள் முன்வைத்து





மீண்டும் நம்முடைய பள்ளிக் கல்வித் துறை அதைப் பரிசீலிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றோம்.

*பிற்பகல் 12-15*

நம்முடைய மாநில அரசு 295 மீனவர்களை போராடியே கரை சேர்த்திருக்கிறது. அதற்காக நமது அரசு, மத்திய அரசுக்கு எழுதாத கடிதமே இல்லை. இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலாவது மீனவர் பிரச்சினையென்றால் அதை இந்திய மீனவர்கள் பிரச்சினையென்று கூறுவார்கள். ஆனால், தமிழ்நாட்டு மீனவர்களுக்கு ஒரு பிரச்சினையென்றால் மட்டும் தமிழ்நாட்டு மீனவர்கள் என்று இந்திய ஊடகங்கள் சொல்லும். தமிழ்நாட்டு மீனவர்கள் என்றால் ஒதுங்கிப் போகிறார்கள். ஆகவே, எந்த மாநிலத்திலும் இல்லாத இந்தப் பிரச்சினையை, இவ்வளவு மீனவர்களைப் பாதுகாத்து கரை சேர்த்திருப்பது மாநிலத்தினுடைய அ.தி.மு.க. அரசு என்று சொல்வதிலே எந்தவித மாற்றுக் கருத்தும் இருக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் கருத்துகளை நாமும் முன்வைத்திருக்கிறோம். மீனவர்கள் பிரச்சினையைப் போன்று, நெய்வேலி நிலக்கரி சுரங்கப் பிரச்சினை. இதில் அனைத்துக் கட்சியைச் சார்ந்தவர்களும் ஒன்றுபட்ட போராட்டம் நடத்தினோம். மத்திய அரசு பங்குகளை விற்றேயாகவேண்டும் என்று சொன்னது. தொழிலாளிகள் விற்கக்கூடாது என்று சொன்னார்கள். பிரச்சினை வேலை நிறுத்தமாகவும், போராட்டமாகவும் மாறியது. தமிழ்நாட்டில் மின்வெட்டு இருக்கிறது. ஆனால், மத்திய அரசு 1,000 மெகா வாட் மின்சாரம் கொடுக்க மறுக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில், பங்குகளை விற்பது உங்கள் கொள்கையென்றால், அதை நாங்களே வாங்கிக்கொள்கிறோம் என்று சொல்லி, அந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவைக் கொண்டுவந்து மத்திய அரசின் பங்குகளை மாநில அரசு வாங்கியதன்விளைவாக தொழிலாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டப் பிரச்சினை ஒரு முடிவிற்கு வந்தது. தனியாருக்கு எதற்காகக் கொடுக்கவேண்டும்? தொழிலாளிகளின் உழைப்பை, இவ்வளவு சிறப்பாக செயல்படக்கூடிய ஒரு பொதுத் துறையை, அதன் பங்குகளை எதற்கு தனியாருக்குக் கொடுக்கிறீர்கள் என்று சொல்லி, இந்தியாவிலேயே அரசுப் பொதுத் துறைகளைப் பாதுகாப்பதற்காக எழுந்த குரல், எங்களுடைய குரல், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினுடைய குரல், இடதுசாரிக் கட்சியினுடைய குரல் என்ற முறையிலே தமிழக மக்கள் அதை வலியுறுத்துகிறார்கள். ஆகவே, இந்த முறையில், நாம் தமிழக மக்கள் மத்தியிலே

இருக்கக்கூடிய பல்வேறு அடிப்படைத் தேவைகளை, கோரிக்கைகளை இணைத்துச் செயல்படக்கூடிய வகையிலே நாடாளுமன்றத் தேர்தலை சந்தித்து அதில் வெற்றி பெற்றால்தான், தமிழக மக்களுக்கு நாம் செய்யக்கூடிய திட்டங்களெல்லாம் முழுமையாக அவர்களிடம் கொண்டுபோய்ச் சேர்க்க முடியும், இல்லையென்றால் முடியாது.

மத்திய அரசு, அரசுத் தேர்வாணையங்களிலே, 'சி' பிரிவு மற்றும் 'டி' பிரிவுகளையெல்லாம் close பண்ணிவிட்டது. அப்படியானால் 'ஏ' பிரிவு அதிகாரிகளைக் கொண்ட அரசுத் தேர்வாணையம் மட்டும்தான் இருக்கும். அதில் இருக்கக்கூடிய இளைஞர்களுக்கு மட்டும்தான் வேலைவாய்ப்பு இருக்கும். அதற்குக் கீழிருக்கும் 'சி' பிரிவு மற்றும் 'டி' பிரிவுகளெல்லாம் கடந்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் முழுவதுமாக தடை செய்யப்பட்டுவிட்டது. மாநில அரசுகளுக்கு பல நிபந்தனைகளைக் கொடுத்து அதிரடியாக சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்; புதிய பணி நியமனம் கூடாதென்றது. இங்குள்ள மருத்துவமனைகளுக்கு மும்பையிலிருந்து contract system-ல் ஆட்கள் வருகிறார்கள். அங்கிருக்கக்கூடிய கூர்காவிலிருந்து Ward Boy வரைக்கும் தனியார் ஏஜென்சிமூலம் நியமனம் செய்யப்படுகிறார்கள். அதனால் தொழிலாளர் பிரச்சினை வருகிறது. அங்கிருக்கக்கூடிய ஊழியர்கள், எங்களுக்கு வேலை கொடுங்கள் என்று கேட்கிறார்கள். இது போன்ற கொள்கையினால் மத்திய ஆட்சியிலிருப்பவர்களால் மாநில அரசிற்கு பல்வேறு நெருக்கடிகள் சூழ்ந்துகொண்டேயிருப்பதை ஆளுநர் உரை சுட்டிக்காட்டியிருக்கிறது. ஆகவே, ஆளுநர் அவர்கள் மிகச் சரியான உரையை நிகழ்த்தியிருக்கிறார்கள், அதில் சொல்லப்பட்டிருக்கின்ற திட்டங்களை நாம் கடைப்பிடித்து, அதை மக்களிடம் முன்னெடுத்துச் செல்வோம். விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்கு ஏற்கெனவே தமிழக அரசு சில நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. விலையில்லா அரிசி, போன்ற பல திட்டங்களை இன்றைக்கு தமிழக மக்கள் மத்தியிலே தொடரவேண்டியிருக்கிறது. அதில் அரிசி வாங்கக் கூடியவர்கள் ஏழையாக இருப்பார்கள்; அவர்களுக்கு வெள்ளை கார்டு கொடுத்து வைத்திருக்கிறார்கள். இந்த வெள்ளை கார்டுதாரர்களுக்கு அரிசியே கிடைக்காது; அதனால், வெள்ளை கார்டு, பச்சை கார்டு எல்லாவற்றையும் நீக்கவேண்டும் என்று மத்திய அரசு சொல்கிறது. அவ்வாறெல்லாம் நீக்க முடியாது. மாநில அரசு அதை எதிர்த்துப் போராட வேண்டியிருக்கிறது.





ஆகவே, பொது விநியோக முறையைப் பலப்படுத்தி மக்கள் மத்தியிலே கொண்டுபோய் சேர்க்கவேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். எங்கள் திண்டுக்கல் நகரில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஆவன செய்ய வேண்டும். அடிப்படை வசதி எதுவுமில்லாத பேருந்து நிலையத்தை மாற்றியமைக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களும் சொன்னார்கள், நானும் சொல்லிக்கொண்டேயிருக்கிறேன்; இதுபோன்ற மக்களினுடைய சில கருத்துகளையும் கோரிக்கைகளையும் எதிர்காலத்தில் தமிழக அரசு செய்து கொடுக்கவேண்டும் என்று என்னுடைய சுயநல கோரிக்கையையும் முன்வைத்து, அமருகிறேன், நன்றி. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12-20

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்றுதான் அடிமனதிலே நீண்டகாலமாக நிறுத்தி வைத்திருந்த கருத்துகளையெல்லாம் மிக அழகாக சொல்லியிருக்கிறார்கள். அதற்காக எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்வதோடு, மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திண்டுக்கல் நகரத்திற்கு தனியாக 2 திட்டங்களை அறிவித்துள்ளார்கள். ஒன்று கூட்டுக் குடிநீர்த் திட்டம். இன்னொன்று திண்டுக்கல் மாநகராட்சிக்கு என்றே தனித் திட்டத்தை ரூ.95 கோடியில் அறிவித்திருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தினுடைய நிரந்தர பொதுச் செயலாளர், ஈடுஇணையில்லாத தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அன்புச் சகோதரி அவர்கள் கேட்ட வினாவிற்கு பதில் அளிக்கக்கூடிய

[டாக்டர் சி. விஜயபாஸ்கர்] [2014 ஜனவரி 31

வாய்ப்பைக் கொடுத்த எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை மீண்டும் நன்றியோடு வணங்குகிறேன். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது மக்கள் நல்வாழ்வுத் துறையைப் பாராட்டும் விதமாக, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் திண்டுக்கல் அரசு மருத்துவமனை ஈட்டியத் தொகையைப்பற்றி சொன்னார்கள். நான் அன்போடு இந்த அவையிலே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு உருவாக்கிக் கொடுத்திருக்கக்கூடிய முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் மூலமாக திண்டுக்கல் உள்ளிட்ட தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய அனைத்து அரசு மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் ஈட்டியிருக்கின்ற மொத்தத் தொகை ரூ.447 கோடி என்ற வரலாற்றுச் சாதனையை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் படைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதில் ஒரு ஒப்பீடு என்னவென்று சொன்னால், கடந்த ஆட்சியிலும் இந்தத் திட்டம் இருந்தது. ஆனால் அவர்கள் ஆட்சியில் அரசு மருத்துவமனைகள் மொத்தமும் ஈட்டியத் தொகை வெறும் 12 கோடியே 5 இலட்சம் ரூபாய் மட்டும்தான். ஆனால், இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் மூலமாக இன்றைக்கு ஈட்டியிருக்கின்ற தொகை 447 கோடி ரூபாய். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, திண்டுக்கல்லில் அரசு மருத்துவமனை நல்லமுறையில் செயல்படுகின்றது என்றும், கூடுதலாக மருத்துவர்கள் நியமிக்கப்படவேண்டும் என்றும் இங்கே குறிப்பிட்டார்கள். கடந்த வாரம் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அன்புச் சகோதரி அவர்கள் சார்ந்திருக்கக்கூடிய திண்டுக்கல் மாவட்டம் உள்ளிட்ட 15 மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளை மருத்துவக் கல்லூரிக்கு இணையான மருத்துவமனையாக உயர்த்தி உத்தரவினைக் கொடுத்திருக்கிறார்கள் என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்தில் அன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அப்படி கொடுத்துள்ள உத்தரவின் பெயரிலே, இதற்காக 105 சிறப்பு மேல்சிகிச்சை மருத்துவர்கள், 183 சிறப்பு மருத்துவர்கள், 60 மருத்துவர்கள், 3 பல் மருத்துவர்கள்,



2014 ஜனவரி 31] [டாக்டர் சி. விஜயபாஸ்கர்]

443 செவிலியர்கள், 14 ஆய்வக ஒப்புநர்கள் மற்றும் 18 மின் கதிர் வீச்சாளர்கள் ஆகிய பணியிடங்களுக்கும் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை, இந்த நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் அறிவிப்பினை நான் இந்த நேரத்திலே கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன். அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னாலே Medical Recruitment Board என்று சொல்லக்கூடிய வரலாற்று சிறப்புமிக்க மருத்துவ தேர்வாணையத்தின் மூலமாக இதுவரை 2,334 மருத்துவர்களும், Para Medical Staff என்று சொல்லக்கூடிய 856 மருத்துவம்சாரா பணியாளர்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தியையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விலையில்லா வேஷ்டி சேலைகள் விநியோகத்தினைப் பற்றி ஒருசில கருத்துகளைத் தெரிவித்தார்கள். வருவாய்த் துறையின் சார்பிலே இந்த விளக்கத்தினை நான் அவருக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இதுவரை 64,69,122 சேலைகளும், 65,19,326 வேஷ்டிகளும் வருவாய்த் துறையின் சார்பாக தமிழகம் முழுவதும் விநியோகம் செய்யப்பட்டிருக்கின்றன. 10,40,007 சேலைகளும், 41,15,292 வேஷ்டிகளும் கையிருப்பில் இருக்கின்றன. அவை அனைத்தும் படிப்படியாக விநியோகம் செய்யப்பட்டுக்கொண்டிருக்கின்றன. மொத்தம் ஒதுக்கப்பட்டிருக்கின்ற 1 கோடியே 73 இலட்சத்து 23 ஆயிரத்து 843 சேலைகளும், 1 கோடியே 72 இலட்சத்து 5 ஆயிரத்து 561 வேஷ்டிகளும் முழுமையாக கூடிய விரைவில் கொடுத்து முடிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். ராஜலட்சுமி அவர்கள்.

*பிற்பகல் 12-25*

**திருமதி ஆர். ராஜலட்சுமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். 2014 ஆம் ஆண்டிற்கான முதல் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் அற்புத வாய்ப்பை எனக்களித்த தாயே, தமிழே, தமிழகமே, தமிழகத்தின் ஒரே முகமே, தாயகத்தின் ஒளி முகமே, தமிழர்களின் தஞ்சகமே, தூயவரின் நெஞ்சகமே, பாரதத்தின் பண்பகமே, தொண்டர்களின் தூயகமே, கோட்டையிலே வீற்றிருக்கும் கொற்றவராயும், நம் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் நற்றமிழாயும், தாய்நாட்டைக் காத்துவரும் உற்றவராயும், தரணிக்கே வழிகாட்டும் தீந்தமிழாயும், விளங்கி நிற்கும் மாண்புமிகு தமிழக முதல்வர், கண்களில் ஏற்றியதோ ஒரு கருணை தீபம், கரங்களில் ஏந்தியதோ வீரக் காண்டீபம், அவர் நாவினில் முழங்குவதோ ஒரு சங்கநாதம், அவர் வாழ்வோ என்றுமே ஒரு வெற்றிக் கீதம். அவர் சாதுர்யம், சமயோஜிதம், ராஜதந்திரம் சேர்த்துச் செய்த சாணக்யம், உண்மையையும், வாக்கில் திண்மையையும் ஒருங்கே பெற்ற ஒப்பிலாத ஒரு பெண்ணினம், கட்டுக் கரும்புடனே கற்கண்டு சேர்த்தாற்போல் இனித்திடுமே அவர் பொற்குணம், பொற்குணத்தில் புரட்சித் தலைவர் வழிவந்த பொன்மனம், போர்க்குணத்திலோ பதினாறடி பாயும் புலிஇனம், வல்லான் அவர் வகுத்துத் தந்த வாய்க்காலை இன்று எங்கள் மங்கை நல்லாள் வற்றாத ஜீவநதி ஆக்கிவிட்டார், தலைவன் தந்து சென்ற இரட்டை இலையை இன்று புல்லாடும் சோலையாய் செதுக்கி வைத்தார், குடகு காவேரியாய் தலைவர் தந்த இயக்கத்தை இன்று கொள்ளிடமாய் பெருக்கிவிட்டார், அரசியல் கட்சியாய் தந்து சென்ற இயக்கத்தை இன்று அறம் வளர்க்கும் யாகசாலையாகவே மாற்றிவிட்டார், அரசியல் கற்றுக் குட்டிகளுக்கு அரிச்சுவடி துவங்கி ஆராய்ச்சி வரை அளந்தளிக்கும் அர்த்தசாஸ்திரம், அரசியல் பிழைத்தார்க்கும் தம்மை திருத்திக்கொள்ள ஒப்பற்றதோர் வாய்ப்பளித்த அதிசயம், கல்லை மட்டுமே கண்டவர்க்கு இதோ கடவுள் நானிருக்கிறேன் என கரை சேர்த்த காவியத் தலைவி, இருண்டகால ஆட்சியிலே புழுங்கித் தவித்தவர்க்கு புத்தொளியும், தென்றலையும் தந்தவரே நம் தலைவி, எத்தனையோ ஆண்டுகளாய் பொத்தி வைத்த கற்பனையை தொட்டவிழ்த்து வரிகளால் ஏட்டில் வடிப்பவனே நிஜக்கவிஞன். பல்லாண்டு மனத்திரையில் கொட்டிவைத்த வர்ணங்களை தூரிகையில் தோய்த்தெடுத்து, வரைந்து எடுப்பவனே உண்மை ஓவியன். தன் தொண்டர்*





*மனமறிந்து தரமான முடிவுகளை எடுப்பவனே உண்மைத் தலைவன். ஆனால், தம் தலைவன் தரம் கண்டு, தலை கவிழ்ந்த தொண்டரையும், அன்புக்கரம் கொண்டு ஆட்கொண்டார் நம் தலைவி. தன் கரம் கொண்டு செதுக்கியதால், சிலையான கற்களுக்கும், வரம் தந்து வாழ்விக்கும் வள்ளல்தான் நம் தலைவி. அலங்கார வார்த்தைகள் ஆயிரம் உண்டு நம் தாய்மொழியில், ஆனால் வார்த்தைக்கே வர்ணம் சேர்க்கும் ரசவாதம் நம் தாயின்மொழியே. பொய்யாமொழி என புலவர்தனை கூறுவதுண்டு, ஆனால் புலவர்களும் பொய்யாமல் புகழும் மொழி நம் தாய் பேசும் மொழியே. கவிதைக்கு பொய்யழகு எனக் கவிஞர் கூறக் கேட்டதுண்டு. ஆனால் மெய்யான மொழியன்றி பேசுதற்கு நம் தாய் தவிர யாருண்டு? மூன்று தேவதூதர் வந்து இனம் கண்ட ஏசு உண்டு, முப்பத்து முக்கோடி தேவர்களோ வந்து வாழ்த்துகின்ற மகத்தின் பிறப்பு நம் முதல்வரே அன்றி யாருக்குண்டு? (மேசையைத் தட்டும் ஒலி) அவர் பிறர் தந்து வாழ்ந்ததாய் வரலாறில்லை, வரலாறாய் வாழ்பவர்க்கு பிறர் தருவதேதுமில்லை. அவர் அரசியல் உட்பட, அடியெடுத்த நாள் தொட்டு சுயம்புவாய் சாதித்தவர், இன்று அடுத்த கட்டம் அடைவதற்கும் தன் திறனை மட்டுமே வைத்து சோதிக்கிறார். பதவிகளை பெற்றதனால் புகழ் ஒன்றும் பெற்றதில்லை, புகழுற்ற காரணத்தால் நம் தாயை பெரும் பதவிகள் என்றுமே விட்டதில்லை. அறிவும், திறனும், அறனும், உரணும், துணிவும், தீரமும், மதி நுட்பமும், திட்பமும், உழைப்பும், உண்மையும், நேர்மையும், கூர்மையும், சக்தியும், சித்தியும், பக்தியும், யுக்தியும், மதியும், விதியும், வலிமையும், வாய்மையும், ஈகையும், உவகையும், நேரமும், காலமும் கனிந்து வரும் காரணத்தால், அவர்கள் ஆளுமைக்கு தமிழ்நாட்டுக் களம் ஒரு சிறு குளமே. பாற்கடலைக் கடைவதற்கு இன்று காலம் வந்து சேர்ந்திருக்கு, அமுத கலசம் எடுப்பதற்கு நேரம் இன்று பூத்திருக்கு, மலையளவு திறமைக்கு மாநிலம்தான் எல்லையா? தலைமகளின் திறமைக்கு தலைநகரே டெல்லிதான். எத்தனையோ பிரதமர்களை கண்டதுண்டு செங்கோட்டை, பிரதமராக, பிதாமகரே அமரப்போகிறது அக்கோட்டை. (மேசையைத் தட்டும் ஒலி) உலகிற்கே நாகரீகம் கற்றுத் தந்த நம் தேசம், இனி அரசியல் ராஜரீகம் கற்றிடுவோர் அவர் வாசம். பூக்களுக்கு வாசம் தந்தவர், தம் மக்களுக்கு நேசம் தந்தவர், பகைத்தவர்க்கு பாடம் தந்தவர், உலகிற்கே வேதம் சொல்லுவார், ஆம், அரசியலின் வேதத்தை இனி அவர் உலகிற்கே பாடம் சொல்லுவார். இறைவனின் கவிதைக்கு இலக்கணம் இல்லை இங்கே, நம் தலைவியின்*

*திறமைக்கு எல்லைதான் ஏது இங்கே? இனி ஏதும் தடையில்லை அவர் போகும் பாதையிலே, மலர் தூவி வாழ்த்திடுவார் செங்கோட்டைச் சாலையிலே.*

When our queen of hearts, our Amma goes thither at the helm, time stands still on the sand dunes, so does the spring on the field, the clouds will ring the cherry chimes, so will the waves on the coastal seas, the blossom will spread the rare fragrance, so will the trees dancing on the woods, the beauty will spread the message of splendor, so will the honey of pristine purity, our queen of hearts, the golden star of honour and dignity.

*அவர் நொடிப் பொழுதில் எரிமலையாய் பொங்கி எழும் அறிவுக்கனல், அவர் முன் கங்குபோலும் சிறுமதியார், தனை நொந்திடுவார் தலை கவிழ்ந்திடுவார், விழுப்புரத்தை புறக்கணித்தார் எனக் கூறி பழிசொன்னார் முன்பொருவர், மின்னலாக மறுத்தெழுந்து விளக்கம் தந்தார் நம் முதல்வர். விரல் நுனியில் விவரங்கள், விரைந்து சில விளக்கங்கள், அரசியலை நேசிப்போருக்குக்கூட இது சாத்தியமில்லை. அரசியலையே சுவாசிக்கும் அம்மாவிற்கே இது பாக்கியம். (மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் *12-30*

*“சின்ன” பிரச்சினை எல்லாம் சின்னப் பிரச்சினைதான். இலையில்லாமல் நிலை இலை. சட்டமன்ற நிலையில்கூட இலைதானே உள்ளது. பெரிய பிரச்சினை என்னவோ, சட்டம் ஒழுங்கு, வடக்கிலிருந்து வந்த தலைவரை பாதுகாத்து அனுப்பி வைத்தார். அவர் பின்பு சென்ற மாநிலத்தில் மயிரிழையில் உயிர் தப்பினார். முன்பு வாயைக் கிழித்தவர்கள் இன்று வாடிக்கையாய் வெளிநடப்பதை சொல்வதா? எதிரியாய் மாறியவர், இன்று எதிரில்கூட இல்லாததைச் சொல்வதா? மொத்த பேரையும் எண்ணினால்கூட தேறவில்லையே கட்சியாய்? மீதம் உள்ளவரும்கூட உண்மையாக கட்சியிலேயே இல்லையே? தலைவனும் இங்கில்லை. தொண்டனோ பெரும் தொல்லை. எல்லோரும் ஏக்கத்தோடு பார்ப்பதென்னவோ எம் தாய் வீட்டு கதவுகளை. தாம்பூலம் நம் தாய் வைக்கவில்லை. வந்தவர்கள் பெற்றவரம், தாயன்பு கண்டவிதம், வரத் துடிக்கும் மற்றவரும், இன்று ஒற்றைக் காலில் செய்கிறார் தவம். குடும்ப அரசியல் செய்தவர்களின் குடும்பம் மட்டுமே மிஞ்சியது பதவிகளில். இன்று அரசியலும் அவர்க்கு இல்லை. குடும்பமோ அரசியலிலேயே இல்லை. தலைக்கு கொள்ளி தானே வைத்தவர்களை எண்ணி இன்று நாடே நகையாடுது எள்ளி. இந்தக் குடும்ப அரசியல் குட்டிச் சுவர்களுக்கு மக்களே முன்வந்து பல விருதுகளை வாரி வழங்கி உள்ளனர்.*



*முதலாவதாக வாழ்நாள் வேதனையாளர் விருது. ஒருவர் இருக்கிறார், அவர் வேறொருவரை தனது மனசாட்சி என்றார். இதற்கு அர்த்தம் தேடி அனைவரும் மண்டை காய்ந்ததுதான் மிச்சம். அந்த மனசாட்சியும் ஒரு நாள் இறந்துவிட்டது. அதுமுதல் மனசாட்சியே இல்லாமல்தான் வாழ்கிறார். அதிலும் அவர் கடலில் தூக்கிப்போட்டாலும் கட்டுமரமாக மிதப்பாராம். இவரை கட்டுமரமாக அல்ல, பட்டமரமாகக்கூட இவர் மகனே மதிக்கவில்லை. “ஐயோ கொல்றாங்க” என்று முன்பு டப்பிங் வாய்சில் கத்தியவர், “ஐயோ கொல்றானே” என்று சென்ற வாரம் சொந்தக் குரலிலேயே கதறிவிட்டார்.*

*அடுத்து சிறந்த குடிமகனுக்கான பிரேமரத்னா விருது. ஒருவருக்கு வாக்கிலே சனி என்றால், இவருக்கு நாக்கிலே சனி. இவர் பேசக்கூட வேண்டாம். நாக்கை மடித்தாலே, சனி பகவான் அதில் கட்டிங் போட்டு உட்கார்ந்துவிடுவார். அப்படி ஒரு ராசி. எல்லோரும் பொதுவாகத் திட்டம் போட்டு கட்சி வளர்ப்பார்கள். ஆனால், இவரோ வெளிநாட்டில் ரூம்போட்டு யோசித்து மிஞ்சி இருப்பவரையும் ஓடவிடுவார். ஏற்காட்டில் தேர்தல் என்றால் இமயமலைக்குச் சென்று பிரச்சாரம் செய்து டெப்பாசிட் இழப்பது என்பது இவரது தனிச்சிறப்பு.*

*அடுத்து சிரிக்காத* singh-*ருக்கு கோல்கேட் விருது. இவர் உண்மையான மனிதரா அல்லது தாடி வைத்த ரோபோவா என அனைவரும் வியக்கும் அளவு அமைதியானவர். ஐ.நா. சபைக்கே பேச அனுப்பினாலும், சைகை பாஷையிலேதான் பேசுவார். பத்தாண்டு மவுனம் கலைத்து, இந்தப் புத்தாண்டில்தான் இரண்டு வார்த்தை பேசியதும், அதிர்ச்சியில் உறைந்த இந்தியர்கள், பிளந்த வாயை இன்னும் மூடவே இல்லை. அத்தனை ஊழல்களுக்கும் தலைமை பொறுப்பேற்று, நடுவு நிலைமை தவறாமல், குற்றத்தை மூடி மறைத்து, தலைப்பாகட்டி பிரியாணிக்குள் ஒளிப்பது இவரது யூனிக் ஸ்டைல்.*

[திருமதி ஆர். ராஜலட்சுமி] [2014 ஜனவரி 31

ஆனால், எங்கள் அம்மாவிற்கு இன்று தமிழர்கள் ஒரு விருது கொடுத்திருக்கிறார்கள். தமிழ் பிரதமர் என்று விருது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆமாம். ஏனென்றால் அவர் மக்கள் தலைவி. முதல்வராய் முகிழ்ந்த பின்பு, இமைக்கக்கூட நினைத்ததில்லை. அவர் ஊரே உறங்கினாலும், விழித்திருக்கும் கடமையின் பிள்ளை. ஆலயங்களில் அன்னதானம். பட்டினத்தார்க்கு அம்மா உணவகம். விலையில்லா அரிசியோடு, விலை குறைவு அரிசியும்கூட. மாணவர்க்கு மடிக்கணினி. மேலும் படிக்க வைப்புத் தொகை. மங்கையர்க்கு மாங்கல்யம். நலிந்தோர்க்கு உதவித்தொகை. கிராமங்களில் பசுமை வீடு. மின்வெட்டே காணாத தமிழ்நாடு. தடையில்லா போக்குவரத்து, தாகம் தீர்க்க தூய தண்ணீர். சென்னைக்கு வீராணம். காவல் துறைக்கு வீர வணக்கம். சட்டம் ஒழுங்கில் முதலிடம். சமூக நீதிக்கும் சரி இடம். "அம்மா" திட்டமோ, இதுவரை நாடு காணாத சரித்திரம். பெண்ணினம் பாதுகாக்க 13 அம்ச திட்டம். இளைஞர் வேலை வாய்ப்புக்கு பன்னாட்டு ஒப்பந்தம். தமிழ்நாட்டை முன்னெடுக்க விஷன் 2023. ஈழத்தமிழர் மானம் காக்க வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானங்கள். கர்நாடகாவின் கபடத்திற்கு சட்டப் போரால் முற்றுப்புள்ளி. காவேரியை அடைத்த கர்நாடகா. இன்று அம்மாவின் ஆற்றல்கண்டு வாயடைத்துப்போய் உள்ளது. என்.எல்.சி. பங்கு வாங்கி, மத்திய அரசின் மூக்குடைத்தது மகத்தான ராஜதந்திரம். முதன்முறையாய் ஒரு தமிழ்த்தாய் இந்தியாவையே ஆளப் போவது, அவரது அரசியல் வாழ்விற்கு கிடைக்கப்போகின்ற அபாரமான அங்கீகாரம்.

பிற்பகல் 12-35

முதல்வரின் புகழ்கண்டு மத்தியில் மலைத்தார்கள், நம்முடைய வரிப் பங்கைக் குறைத்தார்கள். வளர்ச்சியையே தடுத்தார்கள், கூட்டணியே உடைந்தபோதும் மகளுக்காக இணைந்தார்கள், மானும் உண்டு, மயிலும் உண்டு, மானம் மட்டும் என்றுதான் உண்டு. அத்தனைக் கவலைகளையும் சுமந்துகொண்டு தனி மனித இராணுவமாய் இயங்கிக் கொண்டிருக்கும் இரும்புப் பெண்மணியின் முனைப்பை இதயம் உள்ள இந்தியர்கள் உணர்ந்தேதான் உள்ளார்கள். ஆம். தமிழகத்தின் முதல்வர், இந்தியாவின் முதல்-அவர் என உணர்ந்தேதான் உள்ளார்கள்.

தத்துவத்தின் தந்தை சாக்ரடீஸின் பகுத்தறிவும், அகடாமி கண்ட plato-வின் பரிமாணமும், ஆசானாய் அறிவு தந்த அரிஸ்டாடிலின் கல்வியையும் முழுமையாக உள்வாங்கி, தன்வீரம் சேர்த்தெடுத்து உலகை வென்றான் மாவீரன் அலெக்சாண்டர்.



2014 ஜனவரி 31] [திருமதி ஆர். ராஜலட்சுமி]

பெரியாரின் பகுத்தறிவும், அண்ணாவின் பேரறிவும் எம்.ஜி.ஆர். அவர்களின் அன்பெழிலும் அள்ளி வந்ததோடுகூட, கருவில் பெற்ற தனித்துவமும், இறை, மறை, முறை இயல்பாய் தந்த கொடை அருளால், வரும் ஆகஸ்டில் அம்மாவின் கொடி டெல்லியில்தான் பறக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆம். ஒட்டுமொத்த மீடியாவும் வெற்றிக் கணிப்பைக் கூறுகிறது இங்கே.

அழகுப் புயல் ஒன்று டெல்லி பீடம் ஆள வருகிறதென்று, நாடே இன்று நம்மைப் பார்த்து கேட்கிறது. நாற்பதையும் தா, தமிழகமே உம் கடமை என்று. திடமான தலைமை வேண்டும் என்று அவர் கூறுகிறார். துணிவான தலைவர் என்றால் அம்மாதான் என்கின்றார். தேசபக்தி உள்ளவரும் அவர்தானே என்கின்றார். வாரிசு இன்றி வாழ்பவரும் அவர் ஒருவர்தானே என்கின்றார். ஊழலுக்கு இறுதி வரை எழுதுபவர் என்கின்றார், பேயாட்சி செய்துவரும் வெள்ளையரை வெளியேற்ற, பேயாட்சி செய்துவரும் இத்தாலியரை வெளியேற்ற, தாய் ஆட்சி வந்தால்தான் விடுதலையே என்கின்றார். நல்லரசாய் தமிழகத்தைத் தளிர்க்கச் செய்த தமிழ்மகள், வல்லரசாய் இந்தியாவை வளர்த்தெடுப்பார் உறுதி என்றார். வட்டமிடும் வல்லூறாய் பாகிஸ்தானும், வளைத்துச் சுருட்டும் பாம்பாய் சீனாவும், விஷத் துளியாய் வேரறுக்கும் இலங்கை நாடும், உதட்டளவில் தேனாய் உலக நாடுகளும், உரசிப் பார்க்கத் துடிக்கும் எல்லை கடந்த துன்பச் சூழலிலே உரசிப் பார்ப்பவரின் சிரசை சாய்ப்பதற்கு வீரத் தமிழரசிக்கு என்று யாருக்கு இங்கு மானமுண்டு. பெயரளவில் சிங் என்றால் ஏட்டில்தான் சர்க்கரை. சிங்கத் தலைவிக்குத்தான் உண்மையான அக்கறை. அச்சுறுத்தல், ஊடுருவல், அவசரத் தேவை, பாதுகாவல் அதை சமரசமின்றி எதிர்கொள்ள அவசியத் தேவை, ஆற்றல் மிக்க வீரத் தலைமை, இறையாண்மை காப்பதற்கு இரும்புத் திடம் வேண்டும், உலக நாடுகளில் நம் புகழ் வளரவேண்டும். இவை அத்தனையும் உறுதிசெய்ய அம்மா பிரதமராக வேண்டும். தமிழகத்தின் நிலை உயர்த்தி, தன் கடமை முடித்தவருக்கு மணிமகுடம் சூட்டுவது அவர் மக்கள் நம் கடமையாகும்.

அம்மா அவர்கள் பொதுக் குழுவில் கூறினார்கள். அவருடைய ஒரே உறவு நம் இயக்கம்தான் என்றார்கள். அவர் குடும்பம் என்று ஒன்றிருந்தால் அது கழகமின்றி இல்லையென்றார். அம்மா அவர்களுக்கு என்றும் நாங்கள் துணையாயிருப்போம், எக்கணமும் அவர் உடனிருப்போம், அவரைத் தாங்கத் துடிக்கும் தொண்டர்களே நம் கழகம். தாயாக அவரை எண்ணி ஏங்கும்

[திருமதி ஆர். ராஜலட்சுமி] [2014 ஜனவரி 31

அன்புப் பிள்ளைகளே நம் கழகம், நித்தம் நித்தம் இறைவனிடம் நாங்கள் இறைஞ்சுவது என்னவென்றால், எந்நாளும் சேர்த்தெடுத்து எம் தாய்க்குத் தந்திடுங்கள், எங்கள் நாளே அத்தனை நாளையும் சேர்த்தெடுத்து எங்கள் தாய்க்குத் தந்திடுங்கள். மூன்றாம் பிறையாய்த் தோன்றும் எங்கள் தாய், ஆயிரம் பிறை கடந்தும் வாழவேண்டும். அதுவே எம்பேறு என்றோம். முறையறிந்து அவாவை நீக்கி முனிவழி முனிந்து வெஃகும் இறையறிந்து உயிர்க்கு நல்கும் இசைகெழு வேந்தன் காக்கப் பொறை தவிர்த்து உயிர்க்கும் தெய்வப் பூதலந்த தன்னின்-பொன்னியின் நிறை பரம் சொரிந்து-வங்க நெடுமுதுகு ஆற்றும் மன்னன் என்ற கம்பனின் செங்கோல் மன்னன் ஆட்சிப் பெருமை பேசும் வரிகள்போல எங்களைக் காக்கப் பிறந்தார் எம் அம்மா. அவர்களைத் தாங்கத் தவித்தோம் நாங்கள் அம்மா. 1½ கோடி தமிழகத்தின் தங்கம் எங்கள் அம்மா. தொண்டர் தம்மைத் தாங்கும் இதயம் எங்கள் அம்மா. 7½ கோடி தமிழர்களின் சிங்கம் எங்கள் அம்மா. தமிழகமே அவருடைய அங்கமாகும் எங்கள் அம்மா. 100 கோடி இந்தியரும் ஏங்கி விரும்பும் தலைமை எங்கள் அம்மா. இந்தியாவையே வழிநடத்த இருக்கும் தலைவி எங்கள் அம்மா எனக் கூறி என்னைப் போன்ற எளிய கடைக்கோடித் தொண்டனை கரைசேர்த்த தேனனைய தலைவி மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதங்களிலே பலகோடி நன்றி மலர்களைக் குவிக்கின்றேன். வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கும் இத்தருணத்தில் நன்றிகளைக் கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12-40*

## 5. அரசினர் தீர்மானம்

### உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்களை பேரவைப் பணிகளினின்று தற்காலிகமாக நீக்கி வைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“இன்றையதினம் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்கள் பேரவைத் தலைவர் அவர்களின் இருக்கைக்கு அருகில் வந்து நடந்துகொண்ட



2014 ஜனவரி 31] [**திரு. ஓ. பன்னீர்செல்வம்**]

விதத்தை இங்கு அமர்ந்துள்ள மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், பத்திரிகையாளர்கள், பார்வையாளர்கள் நன்கு அறிவார்கள். அவை மரபுகளுக்கு மாறாக, அவை விதிகளை துச்சமாக மதித்து, பேரவையின் கண்ணியத்தைக் குறைக்கும் வகையில் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்களின் நடவடிக்கை தரம் தாழ்ந்து இருந்தது. ஓர் ஆளும் கட்சி உறுப்பினர் சட்டமன்றத்தில் தெரிவித்த கருத்திற்கு எதிர் கருத்துச் சொல்ல இயலாத காரணத்தால் அக்கருத்தினை நியாயப்படுத்த விளக்கம் அளிக்க அவரால் இயலாத காரணத்தால், ஆத்திரத்தில், பேரவைத் தலைவரை மிரட்டும் வகையில், பேரவைத் தலைவரின் இருக்கைக்கு அருகே வந்து தான்தோன்றித்தனமாக, பேரவையின் மதிப்பினையும், இறையாண்மையையும், மாண்பினையும் காக்கும் பொறுப்புள்ள சட்டமன்றப் பேரவைத் தலைவரின் எதிரில், ஆளுநர் உரை பிரதிகளைக் கிழித்தெறிந்திருப்பது, அவையில் இதுகாறும் கடைப்பிடிக்கப்பட்டு வந்த கண்ணியத்தையும், ஒழுக்கத்தையும், உரிமைகளையும் இழிவுபடுத்தும் வகையில் செய்யப்பட்ட ஒரு செயலாகும். இதுபோன்ற செயல்கள் தடுக்கப்படாவிட்டால் ஜனநாயகத்தின் முக்கியத் தூணாக விளங்கும் சட்டமன்றத்தின் தரம் பொதுமக்கள் மத்தியில் தாழ்ந்துவிடும். இதுபோன்ற செயல்கள் தடுக்கப்படவேண்டியதும், தண்டிக்கப்படவேண்டியதுமாகும். எனவே, பேரவை அலுவல்களை நடைபெறவிடாமல் இடைமறித்து, பேரவை விதிகளுக்கு மாறாக, அவைக்கு இழுக்கு விளைவிக்கும் வகையில் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் தனது உரிமையை தவறாகப் பயன்படுத்தி, இன்று பேரவையில் குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில், அவை விதிகளுக்கு மாறாக நடந்துகொண்ட உறுப்பினர் திரு. எஸ்.எஸ், சிவசங்கர் அவர்கள், சட்டமன்றப் பேரவை விதி 121, உள்விதி(2)-ன்கீழ், இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் முழுவதும் பேரவைப் பணிகளிலிருந்து தற்காலிக நீக்கம் செய்யப்படவேண்டும்” என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [2014 ஜனவரி 31

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.*
*(மேசையைத் தட்டும் ஒலி)*

*திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்கள் இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் முழுவதும் பேரவைப் பணிகளினின்று தற்காலிகமாக நீக்கம் செய்யப்படுகிறார்.*

## 4. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.*

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் ஆளுநர் உரையின் மீதான விவாதத்தில் பங்கெடுக்க அனுமதித்ததற்காக முதலில் நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நேற்றையதினம் ஆளுநர் அவர்களால் முன்வைக்கப்பட்ட அறிக்கையை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் முழு மனதோடு நாங்கள் வரவேற்கிறோம். அந்த அறிக்கையைப்பற்றி சில அரசியல் கட்சிகள் கருத்துகளைக் கூறுகிற நேரத்தில் புதிய திட்டங்கள் எதுவும் இல்லை, பழைய திட்டங்களையே அவர்கள் முன்வைத்திருக்கிறார்கள் என்று சில கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், இன்றைக்கு புதிய புதிய திட்டங்களை ஆண்டுதோறும் செயல்படுத்துவது ஓர் அரசினுடைய நிலையான கொள்கையாக இருக்க முடியாது. அதற்குப் பதிலாக அறிவித்த திட்டங்களை சிறப்பாக செயல்படுத்துவதுதான் ஒரு நல்ல அரசினுடைய லட்சணமாக இருக்கும் என்ற அடிப்படையில் கடந்த காலத்தில் அறிவித்த திட்டங்களை இன்றைக்கு சிறப்பாக இந்த அரசு நிறைவேற்றிக்கொண்டு இருக்கிறது என்பதற்கு முத்திரையாக இந்த ஆளுநர் உரை அமைந்திருக்கிறது. அதைப்போல அந்த அறிக்கையிலே நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய தொலைநோக்குத் திட்டமான *2023* அதிலே *213* கருத்துருக்களைத் தேர்ந்தெடுத்து, அவற்றை செயல்படுத்துவதற்கான நடைமுறைகளை உருவாக்குகிற இந்த அரசினுடைய எதிர்கால, கடந்த கால திட்டங்களை ஒட்டுமொத்தமாக முன்வைத்து இந்த அறிக்கை தன்னை அடையாளப்படுத்தி இருக்கிறது. அந்த அடிப்படையில்தான் இந்த அறிக்கை தமிழ்நாட்டை மேலும் ஒரு வளர்ச்சிப் பாதைக்குக் கொண்டு செல்கிற ஓர் அறிக்கையாக இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே நாங்கள் பார்க்கிறோம். எனக்கு முன்னால் பேசிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினுடைய மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள் கூறியதைப்போல இன்றைக்கு உலகமயமாக்கல் கொள்கையின் மூலமாக இந்தியாவில் ஏற்பட்டிருக்கிற பொருளாதார நெருக்கடியும், உலக பொருளாதார நெருக்கடியும், விவசாயத் துறையாக இருந்தாலும் அல்லது தொழில் துறையாக இருந்தாலும் மத்திய அரசையே கடுமையாக பாதித்திருக்கிற நிலையில் தமிழ்நாட்டை ஒரு நங்கூரம் பாய்ச்சிய கப்பலாக படிப்படியாக முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்வது, தமிழகத்தினுடைய ஆட்சித் திறனுக்கு எடுத்துக்காட்டாக விளங்கிக் கொண்டிருக்கிறது.



2014 ஜனவரி 31] [திரு. சு. குணசேகரன்]

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

குறிப்பாக சில குறிப்புகளைச் சொல்லவேண்டும் என்றால், நான் சார்ந்திருக்கிற சிவகங்கை தொகுதியினுடைய நாடாளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. ப. சிதம்பரம் அவர்கள்தான் இந்திய நாட்டினுடைய நிதி அமைச்சராக இருக்கிறார். சமீபத்தில் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கோ அல்லது விலைவாசியைக் குறைப்பதற்கோ என்னிடத்தில் மந்திரக் கோல் கிடையாது என்று சொன்னார். ஆனால், நமது தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் சந்தை விலையைக் கட்டுப்படுத்த, *100* கோடி ரூபாயை ஒதுக்கி, கொள்முதல் விலைக்கே பயனாளிகளுக்கு *(மேசையைத் தட்டும் ஒலி)* கிடைக்கும் வகையில் விவசாயிகளையும், நுகர்வோரையும் இணைத்து பண்ணைப் பசுமை காய்கறிகள் திட்டத்தைத் தொடங்கி வைத்திருக்கிறார்கள்.

பிற்பகல் *12-45*

அதைப்போல, விலைவாசி ஒருபுறம் ஏறிக்கொண்டிருந்தாலும் இந்திய சமூகத்தில் இரு கூறாக மனிதர்கள் பிரிந்திருக்கிறார்கள்.

ஒன்று மிகப் பெரிய பணக்காரர்கள், மற்றொன்று நடுத்தர மக்கள், சாதாரண ஏழையெளிய மக்கள் என்று பிரிந்து இருக்கக்கூடிய இந்தச் சமூகத்தில் விலைவாசி ஏறிக்கொண்டிருக்கிற நிலையில்கூட சாதாரண மக்கள் அதனால் பாதித்துவிடக்கூடாது என்பதற்காக விலையில்லாத அரிசி வழங்குவதில் தொடங்கி, ஓய்வூதியத்தை ஆயிரம் ரூபாயாக உயர்த்தியும் இந்தியாவிலேயே தமிழகத்தை ஏழையெளிய மக்களுக்கான ஒரு நல்லரசாக தமிழக அரசு நடத்திக்கொண்டிருக்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதைப்போல, மத்திய அரசு பன்னாட்டு நிறுவனங்களை தொழில் தொடங்க வரவேற்கிறோம் என்ற அடிப்படையில் தண்ணீர் விற்பதற்காக அனுமதி கொடுத்து ஆறுகளை பெப்சி, கோகோ-கோலா போன்ற கம்பெனிகளுக்கு விற்றுக்கொண்டிருக்கின்ற நேரத்தில் இன்றைக்கு சுகாதாரமான தண்ணீரை குறைந்த விலையில் அம்மா குடிநீர் திட்டத்தின் மூலமாக 10 ரூபாய்க்கு சாதாரண மக்களுக்கு கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* இப்படி அடுக்கடுக்காக திட்டங்களைச் சொல்லிக்கொண்டே இருக்கலாம். இன்றைக்குக்கூட இந்த ஆளுநர் உரையில் ஒரு சிறப்பான திட்டமாக, ஓர் அரசு சிறப்பாக இயங்கவேண்டுமென்று சொன்னால் அதனுடைய அடிப்படைக் கொள்கைகளாக இரண்டு இருக்கவேண்டும். ஒன்று, சமுதாய வளர்ச்சிக்கான கல்வியை மேம்படுத்துவதற்கான திட்டமாகவும், மனித வள மேம்பாட்டை உறுதி செய்வதற்கான திட்டமாகவும் இருக்கவேண்டும். அந்த அடிப்படையில்தான் 2011 ஆம் ஆண்டு கட்டாயக் கல்வி சட்டத்தை ஏற்று நடைமுறைப்படுத்தி தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய 51 ஆயிரத்து 447 குழந்தைகள் கல்வி கற்காமல் இடை நிற்றலில் இருந்தவர்களை கண்டறிந்து 43 ஆயிரத்து 838 குழந்தைகளுக்கு முறையான கல்வியை வழங்கியிருக்கிற ஒரு நல்லரசாக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதைப்போல, இன்றைக்கு தனியார் கார்ப்பரேட் மருத்துவமனைகள் பளப்பளப்பாக இருந்து மக்களை ஈர்த்துக்கொண்டு அவர்களுடைய சொத்துக்களையே விழுங்கிக்கொண்டிருக்கின்ற நேரத்தில் சாதாரண மக்களுக்கும் நடுத்தர மக்களுக்கும் நோயற்ற வாழ்வை கொடுக்கிறவிதமாக நோய் வந்தாலும், அவர்கள் கவலைப்படாமல் நோயைத் தீர்ப்பதற்கு உதவியாக தமிழக முதல்வர் அவர்களுடைய விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் மூலமாக இந்த ஆண்டு ஒரு கோடியே 29 இலட்சம் குடும்பங்கள் பயனடைந்துள்ளனர். 5 இலட்சத்து 84 ஆயிரத்து 554 பேர் 1,255.85 கோடி ரூபாய் அளவில் பயனடைந்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை மக்கள் நல்வாழ்வுத் துறை சிறப்பாகச் செயலாற்றியதற்காக மத்திய அரசு 149 கோடி ரூபாயை இன்றைக்கு கூடுதல் நிதியாக வழங்கியிருக்கிறது. எனவே, மக்கள் நல்வாழ்வுத் துறை சிறப்பாக செயலாற்றிக்கொண்டிருக்கிறது.





அதைப்போல, மத்திய அரசு நிதி நெருக்கடிகளைக் கொடுத்தால்கூட தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய நிதி ஆதாரத்தை எப்படியெல்லாம் மக்களுக்குப் பயன்படுத்தவேண்டுமென்ற அடிப்படையில் வளர்ச்சித் திட்டங்களுக்கும், உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும், அதேநேரத்தில் மக்கள் நலனைப் பேணிக் காப்பதற்காக சுமார் 42 ஆயிரம் கோடி அளவில் உணவு மானியத்திற்கு 4 ஆயிரத்து 900 ஆயிரம் கோடி, ஓய்வூதியத்திற்கு 4 ஆயிரம் கோடி என்று இந்தியாவிலேயே தமிழகம் முன்மாதிரியாக விளங்கிக்கொண்டிருக்கிறது.

அதேபோல காவேரிப் பிரச்சினைக்கு தீர்வு ஏற்படுத்தி, காவேரி மேலாண்மை ஆணையம் அமைப்பதற்காக போராடிக்கொண்டிருக்கிறார்கள். அடுத்து, இலங்கைப் பிரச்சினை. இலங்கையில் இருக்கக்கூடிய ஈழத் தமிழ் மக்களுடைய உரிமை பாதுகாக்கப்படும் என்பதையும் இந்த அறிக்கையிலே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனவே, சுருக்கமாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், மத்திய அரசு ஒரு தவறான பாதையிலே சென்றுகொண்டிருந்தாலும், அதனுடைய பாதிப்புகள் மாநிலத்தில் இருக்கக்கூடிய மக்களுக்கு ஏற்படாதவண்ணம் மாநில அரசு தன்னால் முடிந்த அளவுக்கு சாதாரண ஏழையெளிய மக்களை பாதுகாக்கின்ற ஒரு செயல் திட்டத்தோடு இன்றைக்கு தன்னுடைய ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில்தான், இன்றைக்கு நாடாளுமன்றத் தேர்தல் வருகின்ற நேரத்தில் பல கட்சிகளும் குழம்பிக்கொண்டிருக்கின்றன. அரசியல் கட்சிகளைப் பொறுத்தவரை, ஆட்சியைப் பொறுத்தவரை, குறைகளைப் பேசுவது தவறு கிடையாது. ஆனால், குறைகளைப் பேசினால்கூட கொள்கையை விட்டுக் கொடுக்கக்கூடாது. ஆனால், நம்மோடு இருந்த சிலர்கூட என்ன காரணத்தினாலோ இன்றைக்கு தங்களுடைய கொள்கை நிலைகளை மாற்றி *(மேசையைத் தட்டும் ஒலி)* நல்ல மருத்துவக் காப்பீட்டுத் திட்டங்கள் இருக்கின்ற நேரத்தில்கூட அவர்களுக்கு நிறைய குழப்பங்கள் எல்லாம் ஏற்பட்டு

இன்றைக்கு திசைமாறி தவறான ஒரு பாதைக்குச் சென்றுகொண்டிருக்கிறார்கள். கடந்த ராஜ்யசபா தேர்தலில் காங்கிரஸ் கட்சியை கடுமையாகத் தாக்கியவர்கள், ஈழத் தமிழ் மக்களுக்கு துரோகம் இழைத்தவர்கள் என்று சொன்னவர்கள், அதற்காக வெளிநாடுகளுக்கெல்லாம் சென்று பேசியவர்கள்கூட இன்றைக்கு காங்கிரஸ் கட்சி ஆதரவளித்த வேட்பாளருக்கு தாங்களும் ஓடோடிச் சென்று ஆதரவளிக்கக்கூடிய அளவுக்கு தமிழ்நாட்டினுடைய அரசியல் இன்றைக்கு திசைமாறி சென்றுகொண்டிருக்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)* மருத்துவர்கள் இப்படிச் செய்வது என்பதுதான் மிக வேதனையாக இருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த நிலையில் தமிழக அரசினுடைய இந்தக் கொள்கை நிலைப்பாட்டை இந்திய கம்யூனிஸ்டு கட்சி வலுவாக ஆதரிக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-50*

அதைப்போல, மத்திய அரசினுடைய பொருளாதாரக் கொள்கையால் இந்தியாவில் மிகவும் பாதிக்கப்பட்டது விவசாயத் துறை. மத்திய அரசினுடைய புள்ளிவிவரமே விவசாயத் துறையினுடைய வளர்ச்சி 2 சதவீதம்கூட வரவில்லை என்று கூறுகிறது. இதை எட்ட முடியவில்லை என்று பாரதப் பிரதமரே ஒப்புக்கொண்டார். ஆனால், அப்படிப்பட்ட சவாலான நேரத்தில்தான் 2011 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, முதல் ஆளுநர் உரையிலேயே தமிழ்நாட்டு மக்களுடைய வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டுமென்று சொன்னால், கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்தவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. பெரும் பகுதி மக்கள், சுமார் 5 கோடி மக்கள் ஈடுபட்டிருக்கின்ற அந்த விவசாயத் துறையை, இந்தியாவிலேயே மத்திய அரசோ மற்ற மாநில அரசுகளோ அறிவிக்காத நிலையில், முதன்மைத் தொழில் என்று அறிவித்து, அதற்காக பல ஆயிரம் கோடி ரூபாயை ஆண்டுதோறும் ஒதுக்கி, சிறு, குறு விவசாயிகளிலிருந்து, அனைத்துப் பகுதி விவசாய மக்களுடைய நலனுக்காக அந்தத் துறையை மேம்படுத்துவதற்கு பல திட்டங்களை உருவாக்கியிருக்கிறார்கள். அதன் விளைவாகத்தான் கடந்த ஆண்டு வறட்சி ஏற்பட்ட நிலையில்கூட, தமிழ்நாட்டினுடைய உணவு தானிய உற்பத்தி 100 கோடி மெட்ரிக் டன்னை எட்டும் என்ற ஒரு சாதனையை தமிழ்நாட்டு



விவசாயிகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* அப்படிப்பட்ட விவசாயத் துறைக்கு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சிறப்பான முன்னுரிமையைக் கொடுத்து செயலாற்றிக்கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் இன்றைக்கு வேளாண்மைத் துறை பல சோதனைகளை சந்திக்கவேண்டிய நிலையில் இருந்துகொண்டிருக்கிறது. இந்த ஆண்டுகூட கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும், இப்படிப்பட்ட நிலையில் விவசாயத் தொழிலை இன்னும் சிறப்பாக மேன்மைப்படுத்த இந்தியாவில் இருக்கக்கூடிய அனைத்து விவசாயச் சங்க அமைப்புகளும், அதைப்போல தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய விவசாயச் சங்க அமைப்புகளும் இன்றைக்கு வைத்திருக்கின்ற ஒரே கோரிக்கை, இந்தியாவிலும், தமிழகம் உட்பட அனைத்துப் பகுதிகளிலும் விவசாயம் மேன்மையுற வேண்டும், விவசாயம் வளர்ச்சியடைய வேண்டுமென்று சொன்னால், எப்படி மத்தியிலே நிதிநிலை அறிக்கை வைக்கின்ற நேரத்தில் இரயில்வே பட்ஜெட் தனியாக வைக்கிறார்களோ அதைப்போல பெரும் பகுதி மக்கள் பங்கெடுத்திருக்கிற வேளாண்மைத் துறைக்கு என்று தனியான நிதிநிலை அறிக்கையை முன்வைக்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்திருக்கிறார்கள். குறிப்பாக சொல்லவேண்டுமென்று சொன்னால் கடந்த ஆண்டு ஏற்பட்ட வறட்சியால், நாங்களெல்லாம் கோரிக்கை வைத்த நேரத்தில் விவசாயிகளுக்கு பல சாதனைகளை செய்து கொண்டிருக்கின்ற, பல திட்டங்களை அறிவித்துக்கொண்டிருக்கின்ற, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும், விவசாயிகள்கூட எதிர்பார்க்காத நேரத்தில், வறட்சிக்கு என்று நிவாரணத்தை அறிவித்து செயல்படுத்தியுள்ளார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* வள்ளுவர் சொன்னதுபோல,

> “உழுதுஉண்டு வாழ்வாரே வாழ்வார்மற்று எல்லாம்
> தொழுதுஉண்டு பின்செல் பவர்”

என்ற நிலைமை மாறி, விவசாயிகளே விவசாயத்தை வெறுக்கின்ற ஒரு நிலையில், விவசாயிகளுக்கு நம்பிக்கையளிக்கிற இந்தத் திட்டங்களைச் செயல்படுத்திய நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தியாவிலுள்ள மாநிலங்களுக்கு, மத்திய அரசிற்கு எடுத்துக்காட்டாக இந்த நிதிநிலை அறிக்கையிலேயே வேளாண்மைத் துறைக்கென்று ஒரு தனியான நிதிநிலை

[திரு. சு. குணசேகரன்] [2014 ஜனவரி 31

அறிக்கையை சமர்ப்பிக்கவேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே நான் வேண்டுகோளை முன்வைக்கிறேன்.

அதைப்போல, இந்த ஆண்டும் கடுமையான வறட்சி ஏற்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டில் வறட்சி நிவாரணம் வழங்கப்பட்டாலும் அவசர அவசரமாக எடுக்கப்பட்ட நிலைகளில் பல குறைபாடுகள் ஏற்பட்டன. அந்தக் குறைபாடுகளைக் களைந்து, இந்த ஆண்டு முழுமையாக வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிற விவசாயிகள், தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் பாதிக்கப்பட்டு அவர்களுடைய வாழ்வாதாரம் ஒரு நெருக்கடிக்கு ஆளாகியிருக்கிற நேரத்தில் வறட்சி நிவாரணத்தை மேலும் கூடுதலாக அறிவித்து எந்தவிதமான குறைபாடுகளும் இல்லாமல், அனைத்து விவசாயிகளுக்கும் கிடைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, தென் மாவட்டங்களில் மானாவாரி விவசாயம் என்பதுதான் மிகப் பெரிய விவசாயமாக இருக்கிறது. மானாவாரி விவசாயம் என்பது கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கின்ற நிலையில் மானாவாரி விவசாயிகளுக்கும் தனியாக நிவாரணங்களை அறிவிக்கவேண்டும். விவசாயத்தை நம்பி இருக்கக்கூடிய விவசாயத் தொழிலாளிகளுக்கும் நிவாரணம் அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, கடந்த இரண்டு ஆண்டுகால வறட்சியால் குடி தண்ணீர் பிரச்சினை மிகப் பெரிய பிரச்சினையாக மாறியிருக்கிறது. ஆனாலும் நமது தமிழக அரசைப் பொறுத்தவரை, அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதிலிருந்து அனைத்து மக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் கொடுப்பதுதான் இந்த ஆட்சியினுடைய இலட்சியம் என்று அறிவித்து, பல திட்டங்களைச் சிறப்பாக நிறைவேற்றிக்கொண்டிருக்கிறார்கள். அதில் மாறுபட்ட கருத்து கிடையாது.

பிற்பகல் 12-55

இன்றைக்கு, காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம்கூட விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. அந்த நிலையில் சிவகங்கை, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் இந்த ஆண்டு வறட்சி ஏற்பட்டு, கோரிக்கை வைப்பதற்கு முன்னாலேயே குடிதண்ணீருக்கென்று கூடுதலாக நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள்,



2014 ஜனவரி 31] [திரு. சு. குணசேகரன்]

நான் இல்லை என்று சொல்லவில்லை. கூடுதலாக நிதியை ஒதுக்கி எங்கெல்லாம் தண்ணீர் தட்டுப்பாடு இருக்கிறதோ, அங்கெல்லாம் 'சின்டெக்ஸ் டேங்குகள்' அமைக்கப்பட்டிருக்கின்றன. புதிய, புதிய, சிறிய, சிறிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, நிலத்தடி நீரை எடுத்து மக்களுக்குப் போதுமான தண்ணீர் கொடுக்கப்பட்டிருக்கிறது. தண்ணீர் பஞ்சம் என்று சொல்லவில்லை. ஆனால் எடுக்கக்கூடிய நிலத்தடி நீர், இன்றைக்கு மக்கள் பயன்படுத்த இலாயக்கற்ற நிலையில் பல காரணங்களால் பாதிக்கப்பட்டிருக்கிறது. பல இடங்களில் சுண்ணாம்புச் சத்து, மெக்னீசியம் போன்ற உப்புகள் அதிகமான அளவில் இருப்பதால், அந்தத் தண்ணீரைப் பயன்படுத்த முடியாமலும், சமைக்கப் பயன்படுத்த முடியாமலும் இருக்கிறது. மேலும் அந்தத் தண்ணீரைக் குடித்தால் சிறுநீரகத்தைப் பாதிக்கும் நோய்கள் ஏற்படுகிற ஒரு நிலையும் இருக்கிறது. எனவே தயவுசெய்து இந்தச் சூழ்நிலையைப் புரிந்துகொண்டு எங்கெல்லாம் நிலத்தடி நீர் பாதிக்கப்பட்டிருக்கிறதோ, அங்கெல்லாம் ஒரு Mini R.O. Plant அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுதுகூட, எங்களுடைய மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவருடைய நிதியிலிருந்து ஒன்றியங்களிலுள்ள ஒன்றிரண்டு இடங்களில் ரூ.8 இலட்சம் செலவில் R.O. Plant பொருத்திக் கொடுத்திருக்கிறார்கள். 20 லிட்டர் தண்ணீர் ரூ.1/- என்ற அடிப்படையில் டோக்கன் வழங்கப்பட்டு, அந்தத் தண்ணீரைப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். எனவே, அந்த அடிப்படையில் விரிவாக அந்த Mini R.O. Plant அமைக்கும் திட்டத்தை நிறைவேற்றினால், இந்த அரசு 2011 ஆம் ஆண்டு அறிவித்த தமிழக மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்கும் திட்டத்தை முழுமையாக நிறைவேற்றியதாக அமையும்.

அதைப்போல, சிவகங்கை மாவட்டத்திற்கு என்று அறிவிக்கப்பட்ட காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நீண்ட கடற்கரையிருக்கிற காரணத்தால் கடல்நீரைக் குடிநீராக மாற்றி மக்களுக்கு வினியோகிக்கக்கூடிய திட்டத்திற்கு கூடுதலான நிதி ஒதுக்கீடுகளைச் செய்து அந்தத் திட்டத்தை நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, இன்றைக்கு வறட்சியும், வெள்ளமும் மாறி, மாறி தமிழகத்தை பாதித்துக்கொண்டிருக்கின்றன. இந்த ஆண்டு வறட்சி ஏற்பட்டாலும்கூட, திடீரென்று காவேரியில் வந்த வெள்ளத்தின் காரணமாக, ஒரு மாத காலத்தில் பல இலட்சம் கன அடி

[திரு. சு. குணசேகரன்] [2014 ஜனவரி 31

தண்ணீர் கொள்ளிடத்தின் மூலமாக கடலிலே பாய்ந்து வீணாகிப் போனது. அந்தத் தண்ணீர் தேக்கி வைக்கப்பட்டிருந்தால் அல்லது தமிழகத்திலுள்ள நதிகளை இணைத்திருந்தால் அதைக் கண்டிப்பாக தென் மாவட்டங்களிலுள்ள கண்மாய், குளங்கள் மற்றும் ஏரிகள் முழுவதையும் நிரப்பியிருக்க முடியும்.

எனவே, தொடர்ந்து தமிழகத்திலிருக்கக்கூடிய நதிகளை இணைப்பதற்கான திட்டங்களை ஆளுநர் உரையில் அறிவிக்கின்றோம். நிதி ஒதுக்கீடும் செய்யப்படுகிறது. ஆனால் அந்தத் திட்டத்தை விரைந்து முடிக்காத காரணத்தால், இந்த நவீன காலத்தில் சில இடங்களில் மழை கூடுதலாகப் பெய்தால், அந்தத் தண்ணீரைப் பயன்படுத்தி வறட்சியைப் போக்கமுடியாத நிலை நீடிக்கிறது. எனவே, அந்தத் திட்டத்திற்கு இந்த ஆளுநர் உரையில் எந்தவிதமான குறிப்பும் இல்லாதது, கவலை அளிக்கிறது. எனவே நமது மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுசென்று, வரக்கூடிய நிதிநிலை அறிக்கையிலாவது இந்தத் திட்டத்தை முதன்மைத் திட்டமாக எடுத்து மாநில நதிகளை இணைத்து வறட்சியையும், வெள்ளத்தையும் ஒருசேர சமாளிக்கக்கூடிய ஒரு முன்மாதிரியான மாநிலமாக தமிழகத்தை உருவாக்கவேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. குணசேகரன் அவர்கள் பேசுகிறபோது, நமது மாநிலத்தில் ஓடுகிற நதிகளை இணைக்க வேண்டுமென்ற கருத்தினைச் சொல்லி, அதுபற்றி இந்த ஆளுநர் உரையில் எந்தக் குறிப்பும் இல்லை என்ற வருத்தத்தைத் தெரிவித்தார். வருகின்ற நிதிநிலை அறிக்கையில் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் அதற்குரிய அறிவிப்பை வெளியிடுவதற்காக முறையாக ஆய்வு செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதனை இந்த அவைக்கு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.*



2014 ஜனவரி 31]

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போல, இன்றைக்கு தமிழ்நாட்டினுடைய சமவெளிப் பகுதிகளில் இருக்கக்கூடிய வனப் பகுதி, சமூக நலக் காடுகள் பகுதிகளில் reserve forest-னுடைய சட்டதிட்டங்களை முன்வைத்து பல மாவட்டங்களில் வனத் துறையினருடைய நடவடிக்கைகள் அப்பகுதி மக்களிடையே மிகப் பெரிய அதிருப்தியையும், அச்சுறுத்தலையும் ஏற்படுத்தியிருக்கின்றன. சாதாரணமாக சொல்லவேண்டுமென்று சொன்னால், காலங்காலமாக நமது பண்பாட்டின் அடிப்படையில் கொண்டாடக்கூடிய மாசி மாத களரி அல்லது மகா சிவராத்திரி போன்ற பண்டிகைகளின்போது அந்தப் பகுதிகளில் நமது கலாசார விழாவான பாரி வேட்டைக்கு மக்கள் செல்வார்கள். அந்த மாதிரி பாரி வேட்டைக்குப் போகிறவர்கள் எந்த விலங்குகளைப் பிடிக்கப் போகிறார்கள்? முயல் பிடிக்கப் போகிறார்கள் அல்லது இரண்டு வெள்ளெலிகளைப் பிடித்துக்கொண்டு வரப்போகிறார்கள். அதற்குமேல் அப்பகுதிகளில் எந்த வன விலங்குகளும் இல்லை, அவற்றை அவர்கள் பிடிக்கப் போவதுமில்லை. ஆனால் அதைக்கூட இன்றைக்கு தடை செய்து, அவ்வாறு பாரி வேட்டைக்குச் செல்கிறவர்களிடம் கடந்த ஆண்டு ரூ.25,000/-, ரூ.30,000/- அபராதத்தை வசூலித்திருக்கிறார்கள். தென் மாவட்டங்களில் இருக்கும் சாதாரண மக்களுக்கு அது மிகப் பெரிய அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது. எனவே வனச் சட்டம் என்ற அடிப்படையில் மக்களுடைய பாரம்பரிய, பண்பாட்டு கலாச்சார நிகழ்வுகளைத் தடை செய்வது ஏற்புடையதாக இருக்காது என்பதை நமது மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-00*

குறிப்பாக, இன்றைக்கு வனப் பகுதியில் காலங்காலமாக இறை வழிபாடு செய்யப்பட்ட சாமிகள், கோயில்கள் இருக்கின்றன. அந்தக் கோயில்களில்கூட நுழையக்கூடாது என்று சொல்கிறார்கள். அந்த அளவுக்கு நிலைமை இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், 500 மீட்டர் தொலைவுவரை காலங்காலமாக நடந்து சென்றுகொண்டிருந்த பாதையில்கூட செல்லக்கூடாது என்று சொல்கிறார்கள். (குறுக்கீடு)

[திரு. சு. குணசேகரன்] [2014 ஜனவரி 31

நான் என் உரையை முடித்துவிடுகிறேன். குறிப்பாக, எங்களைப் போன்றவர்களுக்கு ஏற்படுகிற உணர்வு, வனத் துறையினுடைய நடவடிக்கையைப் பார்க்கிற நேரத்தில் வனத்தில் நடக்கக்கூடாது, அந்தப் பாதையில் செல்லக்கூடாது என்று சொன்னால், இனிமேல் போகப்போக வன நிலங்களை அல்லது வன மரங்களைப் பார்த்தால்கூட அபராதம் போடுவார்களோ என்ற அச்சத்தை ஏற்படுத்துகிற அளவில் அவர்களுடைய நடவடிக்கை மிக மோசமாக இருக்கிறது. எனவே, மாநில அரசு அதைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கையை எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வனப் பகுதியிலே இருக்கின்ற கோயில் திருவிழாக்களுக்கெல்லாம் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி ஏதாவது இதுபோன்ற கடுமையான நிகழ்வுகள் இருந்தால், எங்களிடத்திலே தெரியப்படுத்தினால், மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று, விரைவிலே அதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போல, வயல்வெளியில் புதர்களில் இருக்கக்கூடிய முயல்களால் தொல்லை, அதேபோன்று நம்மை கடிக்க வருகின்ற பாம்பை அடித்தால்கூட அபராதம் போட்டுவிடுகிறார்கள். இது என்ன நியாயம் என்று தெரியவில்லை. (குறுக்கீடு) இல்லை, இல்லை. வயல்வெளியில் நம்முடைய நிலத்தில் நாம் போகின்றபோது பாம்புகள் நம்மை கடிக்க வந்தால்கூட அதை அடிக்கக்கூடாது என்று சொன்னால், மனிதன் சாவதைத் தவிர, வேறு வழியில்லை. எனவே, அதையும் கவனத்தில்கொள்ள வேண்டும்.



2014 ஜனவரி 31]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வன விலங்கு உயிரின பாதுகாப்புச் சட்டத்தின்படி, வன விலங்குகளின் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தக்கூடிய எந்த நடவடிக்கையையும் எடுக்கக்கூடாது என்பது மத்திய அரசால் இயற்றப்பட்ட சட்டம். அதை நாம் கடைப்பிடிக்கவேண்டும். அதுதான் சொல்லப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தமிழ்நாட்டில், (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள். பிறகு பேசலாம். உங்களுக்கு வாய்ப்பு வரும்போது பேசலாம், உட்காருங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது மாநிலத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பசுமை வீடுகள் திட்டத்தை இன்றைக்கு சிறப்பாக செயல்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அதைப்போல மத்திய அரசு இந்திரா நினைவு குடியிருப்புகளுக்காக குறைந்த அளவில் நிதி கொடுத்தால்கூட, தமிழக அரசு கூடுதலான நிதியைக் கொடுத்து, 1,20,000/- ரூபாய்க்கு இந்திரா நினைவுக் குடியிருப்புகளை சிறப்பாக தமிழ்நாடு முழுவதும் கட்டிக்கொண்டிருக்கிறது.

ஏழை, எளிய மக்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு அல்லது உள்ளாட்சி அமைப்புகளின்மூலமாக சிறு, சிறு பாலங்கள் அமைப்பது போன்ற பணிகளுக்கு மணல் கிடைப்பது மிகப் பெரிய பிரச்சினையாக மாறி இருக்கிறது. எனவே, தமிழ்நாட்டில் நமது தமிழக அரசு ஆறுகளில் மாட்டு வண்டிகளில் மணல் எடுப்பதற்கு குவாரிகள் அமைக்கலாம்.* மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்குத் தேவையான பணத்தைக் கட்டலாம் என்று இதே சட்டமன்றத்தில் நீங்கள் அறிவித்திருக்கின்றீர்கள். ஆனால், தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய எந்த மாவட்டங்களிலும் மாட்டு வண்டியில் மணல் அள்ளுவதற்கான குவாரிகளை

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

[திரு. சு. குணசேகரன்] [2014 ஜனவரி 31

அமைப்பதற்கு பொதுப் பணித் துறையினர் போதுமான முன்முயற்சிகளை எடுக்க மறுக்கிறார்கள். இது கடுமையான அதிருப்திகளை உருவாக்கியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புதிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாட்டு வண்டியில் மணல் அள்ளுவதை எங்கும், எதிலும் தடை செய்யவில்லை. முறையானவர்களுக்கு குவாரிகள் அனுமதிக்கப்பட்டு, *மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தினுடைய அனுமதியைப் பெற்று குவாரிகள் அனுமதிக்கப்பட்டு, அவற்றை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். எங்களுடைய மாவட்டத்திலேயே கடந்த ஓராண்டு காலமாக இந்த முயற்சி எடுத்து, கள்ளல் என்ற ஒரேயொரு இடத்தில் மட்டும் கடந்த வாரம் குவாரி அமைக்க அனுமதித்திருக்கிறார்கள். 13 குவாரிகளுக்கு கருத்துரு அனுப்பப்பட்டும், 6,75,000/- ரூபாய் பொதுப் பணித் துறையிலிருந்து பணம் ஒதுக்காமல், கட்டாமல் அப்படியே நிலுவையில் இருக்கின்றது. அதைப்போல அனைத்து மாவட்டங்களிலும் அதற்காக சட்டத்தில் இடம் இருந்தும், நீங்கள் அனுமதித்தும், அதற்கான நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இதை நீங்கள் செயல்படுத்துவதன்மூலமாக...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புதிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முறையாக அரசிடம் மாட்டு வண்டி சங்கத்தைச் சேர்ந்தவர்கள் அனுமதி கேட்டால், அதை

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.



2014 ஜனவரி 31] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

முறையாக நாம் *மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்குத் தெரிவித்து, அவர்களுடைய அனுமதியைப் பெற்று, வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

*பிற்பகல் 1-05*

***திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் மாட்டு வண்டியிலே மணல் அள்ளுவதற்கு முறையான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக இங்கே தெரிவித்திருக்கிறார்கள். இந்தப் பிரச்சினை குறித்து ஏற்கெனவே பல முறை இந்த அவையிலே விவாதிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, இப்போது சிதம்பரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் ஏறக்குறைய 16 இடங்களிலே மணல் குவாரி அமைப்பதற்கான முன்மொழிவுகள் அனுப்பப்பட்டு, அனுமதி வராத காரணத்தினால், அங்கே மாட்டு வண்டியிலே மணல் அள்ளுவது மொத்தமாக நிறுத்தப்பட்டிருக்கிறது. இதனால், இப்போது மறியல், ஆர்ப்பாட்டம் என்று பல போராட்டங்களை அவர்கள் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, சிதம்பரத்திலே கட்டுமானப் பணிகளே இப்போது நடைபெறவில்லை. கட்டுமானப் பணிகளே மொத்தமாக நின்று போயிருக்கிறது. ஆகவே, மணல் பிரச்சினையில் சாதாரண மக்களின் கட்டுமானப் பணிகள் தடைபடுவது, கட்டுமானத் தொழிலாளிகள் பாதிக்கப்படுவது, சாதாரண அளவிலே மாட்டு வண்டியிலே மணல் அள்ளுகிறவர்களுக்கு அனுமதி வழங்குவதற்கு என்னென்ன தடைகள் இருக்கின்றனவோ அவற்றைக் களைவது போன்றவற்றுக்கு சுமுகமான நிலைமையை ஏற்படுத்துவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தடைகளையும், விதிகளையும்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2014 ஜனவரி 31

நடைமுறைப்படுத்துவது *மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம்தான். ஆகவே, அவர்கள் என்னென்ன தடைகளை, விதிகளை அவர்கள் கோருகின்றார்களோ, அவர்களுக்கு உரிய விளக்கங்களை அரசின் சார்பாக சமர்ப்பித்து, உரிய அனுமதியைப் பெற்று, மாட்டு வண்டியில் மணல் அள்ளுவதற்கு எங்கெல்லாம் குவாரிகள் தேவைப்படுகின்றனவோ அங்கெல்லாம் நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்காவது இம்மாதிரி நடைமுறைப்படுத்துவதற்கு உரிய முன்மொழிவுகள் அனுப்பப்பட்டு, அவை காலதாமதம் ஆகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவிப்பார்களென்றால், அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். விரைந்து நடவடிக்கை எடுத்து உதவும்படி கேட்டுக்கொள்கிறேன். அதன்மூலமாக ஆயிரக்கணக்கான மாட்டு வண்டித் தொழிலாளர்களுக்கு வாழ்வாதாரமும், சாதாரண மக்களுக்குக் குறைந்த விலையில் மணலும் கிடைப்பதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல, அரசுக் கல்லூரிகளிலே படிக்கக்கூடிய செவிலியர்கள் இன்றைக்குப் போராட்டங்களை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்களின் கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றித் தரவேண்டும். இன்றைக்கு, அரசினுடைய முடிவின் அடிப்படையில் தனியார் கல்லூரிகளிலே படிக்கக்கூடிய செவிலியர்களும் அரசு வேலைகளில் பங்கெடுக்கலாம் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்த நிலையில், அவர்களுடைய போராட்டம் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. அரசு அவர்களை அழைத்துப் பேசி ஒரு தீர்வை ஏற்படுத்தவேண்டும். அதோடு மட்டுமல்லாமல், அரசு மருத்துவமனை செவிலியர்கள் ஒரு நாளைக்கு 8 மணி நேரத்திற்கும் மேலாக. . .

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.



2014 ஜனவரி 31]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், இன்னும் மூன்று உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. விரைவில் உரையை நிறைவு செய்யுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** இன்னும் இரண்டே நிமிடங்களில் பேசி முடித்துவிடுகிறேன். 8 மணி நேரத்திற்கும் மேலாக அவர்கள் முழு நேரமாக வேலை பார்க்கிறார்கள். எனவே, அவர்கள் படிப்பதற்கான வாய்ப்பு இல்லையென்று சொல்கிறார்கள். மருத்துவர்களுக்கு 5 ஆண்டுகள் மருத்துவப் படிப்பு, ஓராண்டு House Surgeon என்று இருப்பதைப்போல, செவிலியர்களுக்கும் மூன்றரை ஆண்டுக்கால படிப்பில், மூன்று ஆண்டுகள் theory படிப்பதற்கு, ஆறு மாதங்கள் பணி செய்வதற்கு என்ற அடிப்படையில் ஒதுக்க வேண்டுமென்று அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அது நியாயமான கோரிக்கையாகவும் தெரிகிறது. அப்படி இருந்தால்தான், அவர்கள் தனியார் கல்லூரிகளில் படிப்பவர்களோடு போட்டி போடமுடியும். (மணியடிக்கப்பெற்றது)

அதைப்போல, மருத்துவ மாணவர்களுக்கான உதவித் தொகை ரூ.3,000/- ஆக வழங்கப்படவேண்டும். அந்தப் படிப்பிலே சேரக்கூடிய மாணவர்கள் 1,400 பேர்களில் 600 பேர்களுக்குத்தான் உதவித் தொகை வழங்குகிறார்கள். மற்றவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுவதில்லை. எனவே, அரசுக் கல்லூரிகளிலே படிக்கக்கூடிய அனைவருக்கும் உதவித் தொகை வழங்கவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

நிறைவாக ஒன்றை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆண்டு சிவகங்கை நகராட்சியின் 50-வது பொன்விழா ஆண்டு வருகிற ஏப்ரல் ஒன்றாம் தேதி தொடங்கவிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடியுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** செவிலியர் கல்லூரியில் 1,700 மாணவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். அதில் வெறும் 600 பேர்களுக்கு மட்டும்தான் உதவித் தொகை வழங்கப்படுகிறது. மற்றவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுவதில்லை. எனவே, ஒரே அரசுக் கல்லூரியில் படிக்கக்கூடிய அனைவருக்கும் உதவித் தொகை வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்திருக்கிறார்கள். அவர்கள் வைத்திருக்கிற கோரிக்கை நியாயமானது. எனவே, அவர்களை அழைத்துப் பேசி ஒரு தீர்வை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, வருகிற ஏப்ரல் ஒன்றாம் தேதியிலிருந்து சிவகங்கை நகராட்சியினுடைய 50-வது பொன்விழா ஆண்டு தொடங்குகிறது. அதற்காக அங்கிருக்கக்கூடிய நகர்மன்ற உறுப்பினர்கள் நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை சந்தித்து பல கோரிக்கைகளை முன்வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கைகளை எல்லாம் நான் எழுதி வைத்திருக்கிறேன். பேசுவதற்கு நேரம் இல்லை. அவற்றை அவைக்குறிப்பிலே பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எழுதிக் கொடுங்கள்.

பிற்பகல் 1-10

**திரு. சு. குணசேகரன்:** அந்த அடிப்படையில் அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல, கரும்பு, நெல்லுக்கான விலையைக் கூடுதலாக அறிவிக்கவேண்டும். சோலார் மின் விளக்குகளில் பல பிரச்சினைகள் இருப்பதாக அதைப் பொருத்துபவர்கள் சொல்கிறார்கள். நமது மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், அழைத்துப் பேசி அதையும் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பிரச்சினை இருக்கிறது என்று சொல்கிறார். என்ன பிரச்சினை என்று அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால் உடனடியாக அதை சரிசெய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே நிறைவாக ஒன்றை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தாலுகா, ராஜகோபாலபுரம் உட்கடை கோட்டம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த 5 மாணவிகள்





கடந்த 24-11-2013 அன்று குளத்தில் மூழ்கி பலியானார்கள். கலைச்செல்வி, மாதரசி, ரம்யா, இன்னொரு ரம்யா மற்றும் பொன்மாரி என்ற 14 வயதுக்குட்பட்ட 5 குழந்தைகள் ஒரே நேரத்தில் குளத்தில் மூழ்கி இறந்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நிவாரண நிதி இதுவரை அவர்களுக்குக் கிடைக்கப்பெறவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அதனை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். அவர்களுக்கான நிதி உதவிகளை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இன்னும் ஒன்றே ஒன்று, முடித்துவிடுகிறேன். கிராஃபைட் திட்டத்திற்கு விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தொகுதிக் கோரிக்கைகளை எழுதிக் கொடுத்துவிடுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** எழுதித் தருகிறேன். கிராஃபைட் பூங்கா திட்டத்தை விரைந்து நடத்துவதற்கு நமது மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்திய நாடு பொருளாதாரத்திலும், பல்வேறு ஊழலிலும், மக்கள் பிரச்சினையிலும் இன்றைக்கு மிக மோசமான நிலையை எட்டியிருக்கிறது. மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய ஒரு மாநில அரசு அதிலிருந்து மீண்டு, எந்த அளவிற்கு முடியுமோ, அந்த அளவிற்குத் தன்னுடைய சொந்த நிதியாதாரத்தைப் பயன்படுத்தி, இயற்கை வஞ்சித்தாலும் நான் தமிழக மக்களைப் பாதுகாப்பேன் என்று உறுதியான நடவடிக்கையோடு (மேசையைத் தட்டும் ஒலி) ஏழையெளிய மக்களுக்கு ரூபாய் 42,000 கோடி அளவிலே மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களையும், தொலைநோக்குத் திட்டங்களையும், அடிப்படை கட்டுமான வளர்ச்சிகளையும் சிறப்பாக நிறைவேற்றுகிற இந்த ஆட்சிக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்து ஆதரவை வழங்குகிறது என்பதைச் சொல்லி வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

எனது தொகுதிக் கோரிக்கைகள்: இந்திய நாட்டிற்கு வியாபாரத்திற்கு வருகை தந்த வெள்ளையர்கள் இங்குள்ள மன்னர்களின் ஒற்றுமையின்மையைப் பயன்படுத்தி ஆட்சி

[திரு. சு. குணசேகரன்] [2014 ஜனவரி 31

அதிகாரத்தைக் கைப்பற்ற முனைந்த நேரத்தில் சிறு சமஸ்தானமாக இருந்த சிவகங்கை சமஸ்தானம் அவர்களுக்கு கப்பம் கட்ட மறுத்ததால் வெள்ளையர்களுக்கு ஆதரவாக இருந்த நவாப் படைகளும், பாஞ்சோர் தலைமையில் இருந்த வெள்ளையர் படையும் காளையார்கோவிலில் தன் இரண்டாவது மனைவி கௌரி நாச்சியாருடன் சாமி கும்பிட்டுக் கொண்டிருந்த மன்னர் முத்து வடுகநாதத்துரையை சுட்டுக்கொன்றனர். அதன்மூலம் சிவகங்கை சமஸ்தானம் நவாப் மற்றும் வெள்ளையர் ஆதிக்கத்தின்கீழ் வந்தது. இதை எதிர்த்து வீரமங்கை வேலுநாச்சியாரும், மருது சகோதரர்களும், திண்டுக்கல் கோபால்நாயக்கர் மற்றும் திப்பு சுல்தான் உதவியோடு படைதிரட்டி எட்டு ஆண்டுகள் கழித்து போர்க்களத்தில் போர் புரிந்து குயிலி என்ற ஒடுக்கப்பட்ட போர்த் தளபதி ஆயுதக் கிடங்கில் குதித்து ஆயுதங்களை அழித்து வெற்றிபெற்று மீண்டும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றினர். பின்னாளில் வீரபாண்டிய கட்டபொம்மனுக்கும் அவர் தம்பி ஊமைத்துரைக்கும் உதவி புரிந்து மருது சகோதரர்கள் ஆட்சிக் காலத்தில் வெள்ளையர்களை எதிர்த்து களம் கண்டனர். இறுதியாக மருது சகோதரர்களை அடக்க முடியாத வெள்ளையர்கள் அவர் கட்டிய காளையார்கோவில் கோபுரத்தை இடித்துவிடுவதாக மிரட்டியவுடன் தன் உயிரைவிட வரலாற்று பொக்கிஷமாக விளங்கும் கோவிலுக்காக சரணடைந்து தன் உயிரை மாய்த்தார்கள்.

அத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க சிவகங்கை நகர் 1965 ஏப்ரல் 1-ம் தேதி மூன்றாம் நிலை நகராட்சியாகவும், 1984 ஆம் ஆண்டு இரண்டாம் நிலை நகராட்சியாகவும், 1998 ஆம் ஆண்டு முதல் நிலை நகராட்சியாகவும் தரம் உயர்த்தப்பட்டது.

வருகிற ஏப்ரல் 1, 2014 ஆம் நாள் நகராட்சியாக உருவாக்கப்பட்ட 50 ஆம் ஆண்டு பொன்விழா ஆண்டு. 50 ஆம் ஆண்டு பொன்விழாவை கௌரவிக்கும்விதமாக சிவகங்கை நகராட்சிக்கு சிறப்பு நிதியாக ரூ.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்திடவும், கீழ்க்கண்ட அடிப்படை வசதிகளை செய்துதரவும் மாண்புமிகு தமிழக முதல்வரைக் கேட்டுக்கொள்கிறேன்.

நகரின் மையத்தில் உள்ள சிறப்புமிக்க தெப்பக்குளத்தை சீரமைத்து ஆண்டுதோறும் பெரியாற்றுக் கால்வாயிலிருந்து தெப்பக்குளத்திற்கு தண்ணீர் கிடைக்க கால்வாய் அமைத்துத்தர கேட்டுக்கொள்கிறேன்.



2014 ஜனவரி 31] [திரு. சு. குணசேகரன்]

சிவகங்கை தலைநகர் என்ற வகையில் அங்கு நடைபெறும் அரசு மற்றும் அரசு சாரா நிகழ்வுகளுக்கு ஆயிரம் பேர் அமரக்கூடிய வகையில் அனைத்து வசதிகளுடன் கலையரங்கம் (ஆடிட்டோரியம்) அமைத்துத்தர கேட்டுக்கொள்கிறேன்.

சிவகங்கை பேருந்து நிலையத்திலிருந்து மார்க்கெட் வழியாக இளையான்குடி சாலைக்கு சாலை அமைத்துத்தர கேட்டுக்கொள்கிறேன்.

ஒருங்கிணைந்த புறநகர் பேருந்து நிலையம் அமைத்துத்தர கேட்டுக்கொள்கிறேன்.

சிவகங்கை வரலாற்று பெருமைகளைப் பறைசாற்றும் ஆவணங்கள் மற்றும் பழம் பொருட்களைப் பாதுகாக்கவும், வரலாற்றுப் பெருமைகளை புகைப்படமாக கண்காட்சி வைத்திட தொல்லியல் துறைக்கு புதிய கட்டடம் கட்டித்தர அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஒருங்கிணைந்த வணிக வளாகம், நவீன தினசரி சந்தை உருவாக்கிட கேட்டுக்கொள்கிறேன்.

காளையார்கோவில் தொண்டி சாலை, திருப்பத்தூர் சாலை, மானாமதுரை, இளையான்குடி சாலைகள், மேலூர் சாலையில் நினைவு வளைவுகள் அமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

பொறியியல் கல்லூரி மற்றும் பல்வகை தொழில்நுட்பக் கல்லூரி அமைத்திடவும், சிவகங்கை மாவட்டத்தில் சிவகங்கை வட்டம் 136 வருவாய் கிராமங்களையும், சுமார் 167 ச.கி.மீ. பரப்பளவும் கொண்ட மிகப்பெரிய வட்டம். இவ்வட்டத்தில் சிவகங்கை தலைநகர் உள்ளதாலும், காளையார்கோவில் பகுதி மக்கள் வட்டாட்சியர் அலுவலகம் வந்துசேர சுமார் 60 கி.மீட்டர் தூரம் வரவேண்டியுள்ளதாலும் இந்நிதியாண்டில் சிவகங்கை வட்டத்தைப் பிரித்து காளையார்கோவிலைத் தலைமையிடமாகக் கொண்டு தனி வட்டம் உருவாக்கிட கேட்டுக்கொள்கிறேன்.

சிவகங்கை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மாவட்ட மக்கள் நலன் கருதி இவ்வாண்டு இருதய சிறப்புப் பிரிவு, டயாலிசிஸ் வசதியோடு சிறுநீரகப் பிரிவு உள்ளிட்ட பிரிவுகளையும், MRI ஸ்கேன் வசதியையும் ஏற்படுத்தித்தர கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட கிரானைட் தொழில்பூங்கா திட்டத்தைச் செயல்படுத்திட கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள் பேசுகிறபோது ஒரு கருத்தைச் சொன்னார்கள். பள்ளிக் கல்வித் துறையில் ஆசிரியர் தேர்வுக்கான தகுதித் தேர்வில் TET எழுதுகிறபோது அவர்களுக்கு இட ஒதுக்கீடு வேண்டும். இதே உயர் கல்வித் துறையில் கல்லூரி பேராசிரியர்களுக்கான தகுதித் தேர்வில் NET தேர்வோ அல்லது SLET தேர்வோ, NET என்று சொன்னால் National Eligiblity Test. நமது இந்திய நாட்டில் இருக்கக்கூடிய அனைத்து கல்லூரிக்கான தகுதித் தேர்வு NET என்பதாகும். SLET என்பது மாநில அளவிலான ஆசிரியர் தகுதிக்கான கல்வித் தகுதியாகும். அப்படி நடத்தப்படுகிற NET-லும், SLET-லும் இடஒதுக்கீடு கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அதைப்போல TET-லும் நாம் கடைப்பிடிக்க வேண்டும் என்ற ஒரு கருத்தை வலியுறுத்திப் பேசினார்கள். அதுபோல NET-லும், SLET-லும் இடஒதுக்கீடு கடைப்பிடிக்கப்படுவதில்லை. அதிலேகூட இடஒதுக்கீட்டைக் கடைப்பிடிக்காமல் தேர்வு எழுதுகிறபோது அனைவருக்கும் ஒரே மதிப்பெண் கொடுக்கப்பட்டுதான் நாம் தேர்ச்சி செய்கிறோம். ஆகவே, வேலைவாய்ப்பு பெறுகிறபோதுதான் இடஒதுக்கீடு முறை கடைப்பிடிக்கப்படுகிறதேயொழிய ஆசிரியர் தகுதித் தேர்விற்கு அந்த இடஒதுக்கீடு கடைப்பிடிக்கப்படுவதில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சமீபத்திலேகூட, மாற்றுத் திறனாளிகள், அவர்களுக்குக்கூட இடஒதுக்கீடு வழங்கவேண்டுமென்று போராடினார்கள். அவர்களுடைய போராட்டம், அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அந்த நேரத்தில் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், மாற்றுத் திறனாளிகளுக்குச் சிறந்த முறையில், எளிய முறையில், சுலபமாக இருக்கக்கூடிய கேள்விகளை அவர்களுக்காகத் தயார் செய்து மதிப்பெண்கள் குறையாமல் அவர்களுடைய சூழ்நிலை அறிந்து, அதுபோன்ற ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தி, சுலபமான முறையில் அவர்கள் தேர்வு எழுதி தகுதி தேர்வில் தேர்ச்சி பெறலாம் என்ற உத்தரவை மாண்புமிகு அம்மா அவர்கள்





இப்போது வழங்கியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், கல்லூரி ஆசிரியர் தேர்வைப் பொறுத்தவரையில் வருடத்திற்கு ஒரு முறை என்று இருந்ததை ஆறு மாதங்களுக்கு ஒரு முறை என்று மாற்றி, அடிக்கடி அந்தத் தேர்வு எழுதுவதை மாற்றி ஆசிரியர் தகுதித் தேர்வு நடத்துவதற்கான ஒரு வாய்ப்பை மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு போட்டிருக்கக்கூடிய 181 G.O.-ஐ அமல்படுத்துங்கள் என்பதுதான் எங்களுடைய கோரிக்கை. G.O. போடப்பட்டிருக்கிறது ஆனால் அது அமல்படுத்தப்படவில்லை. ஆகவே, அதை அமல்படுத்தவேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை. அதிலேதான் இடஒதுக்கீடு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வி பெறுவதற்கும், ஆசிரியர் தகுதித் தேர்வு எழுதுவதற்கும் இடஒதுக்கீடு கடைப்பிடிக்கப்படுவதில்லை. ஆனால் அவர்கள் வேலைவாய்ப்பிற்குச் செல்கிறபோதுதான் அந்த இடஒதுக்கீடு கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். உதாரணத்திற்கு, பள்ளிக்கூடத்திற்கு நாம் மாணவர்களைச் சேர்க்கிறோம். 10 ஆம் வகுப்பு வரை மதிப்பெண்கள் அடிப்படையில் நாம் மாணவர்களைச் சேர்ப்பதில்லை. அதேவேளையில் மேல்நிலைப் பள்ளிக்கு மாணவர்களைச் சேர்க்கிறோம். அதிலும் இடஒதுக்கீட்டைக் கடைபிடிப்பதில்லை.

உயர் கல்வி பெறுகிறபோதுதான், அவர்கள் கல்வி கற்பதற்காக நாம் இடஒதுக்கீட்டைப் பயன்படுத்தி வருகிறோம். மாணவர்களுக்கு பாடங்களை சொல்லிக் கொடுப்பதற்கு என்று சில தகுதிகள் இருக்கின்றன. அந்தத் தகுதிகளை அடிப்படையாக

[திரு. பி. பழனியப்பன்] [2014 ஜனவரி 31

வைத்து நாம் பார்க்கிறபோது, தகுதியானவர்களை தேர்வு செய்வதற்கு நாம் இட ஒதுக்கீட்டை கடைப்பிடிப்பதில்லை. தேர்ச்சி பெற்ற பின்பு, அவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுப்பதற்கு மட்டும்தான் நாம் இடஒதுக்கீட்டைக் கடைப்பிடித்து வருகிறோம் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-15*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள். (குறுக்கீடு) செல்வி கே. பாலபாரதி, இதில் மேற்கொண்டு விவாதம் வேண்டாம், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல விளக்கங்களைக் கொடுத்துவிட்டார்கள். (குறுக்கீடு) இல்லை, உட்காருங்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் போதுமான விளக்கங்களைக் கொடுத்துவிட்டார்கள். (குறுக்கீடு) நேரமாகிவிட்டது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் போதுமான விளக்கத்தைக் கொடுத்துவிட்டார்கள். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், பேசுங்கள். (குறுக்கீடு)

***திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** No Clarification. (குறுக்கீடு) No Point of Clarification. Please sit down. (குறுக்கீடு)

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துகளைத் தெரிவித்து (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் போதுமான விளக்கத்தைக் கொடுத்துவிட்டார்கள். உட்காருங்கள். திரு. பிரின்ஸ், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** ஆளுநர் உரை மீது காங்கிரஸ் கட்சியின் சார்பில் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நாளைக்கு நிறைய பேசுங்கள். (குறுக்கீடு)

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.



2014 ஜனவரி 31]

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** நிறைவேறிய, நிறைவேற்றிய பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் குறித்தும், எதிர்காலத்தில் தமிழக வளர்ச்சிக்குத் தேவையான திட்டங்கள் குறித்தும் ஆளுநர் உரையிலே சிறப்பாகக் கூறப்பட்டிருக்கிறது. நண்பர்கள்கூட மத்திய அரசை குறை சொன்னாலும், எத்தகைய குறை சொன்னாலும், காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தமட்டில், மக்களுடைய நலனைக் கருதி, நல்ல திட்டங்களை வரவேற்பதில் கருத்தாக இருக்கிறது. எந்த ஒரு அரசும் நல்ல திட்டங்களை நிறைவேற்றுகின்ற வகையிலே, மக்களுக்கு நல்ல பணிகளைச் செய்கின்ற வகையிலே, திட்டங்களைக் கொடுத்தாலும் குறை சொல்பவர்கள் என்றைக்கும் குறை சொல்லிக்கொண்டே இருப்பார்கள்; சந்தர்ப்பவாதிகள் குறை சொல்வார்கள். காங்கிரஸ்காரன் குறை சொல்வதற்கு வரவில்லை; நிறை சொல்வதற்கு வருகை தந்திருக்கிறான். (குறுக்கீடு) காங்கிரஸ்காரன் இலட்சியத்தோடு மக்கள் பணி செய்ய வேண்டுமென்பதற்காக (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடு)

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** என்ன சார்? இதில் என்ன point of order கேட்கப்போகிறீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், ஒரு வினாடியில் பேசி முடித்துவிடுவார்.

***திரு. அ. சவுந்தரராசன்:** காங்கிரஸ் கட்சியினுடைய தலைமையில் இருக்கிற ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியின் நடவடிக்கைகளில் இருக்கிற தவறுகளை நாங்கள் பேசுகிறோம், வேறுபல கட்சியினர் பேசுகிறார்கள். ஆனால், ராகுல் காந்தியே குறைகள் பற்றி பேசிக் கொண்டிருக்கிறாரே, அதற்கு, மாண்புமிகு உறுப்பினரின் பதில் என்ன?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், பேசுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** இதற்கு நான் பதில் சொல்லவேண்டும். உங்களுடைய கட்சி ஜனநாயக கட்சி அல்ல. காங்கிரஸ் கட்சி ஜனநாயகத்தை மேற்கொள்கிற கட்சி. ஜனநாயகத்தில் ஒரு தலைவன் தவறு செய்கின்றபோது, மற்ற தலைவன் கேட்பதற்கு உரிமை உண்டு. ஆகவே, ராகுல் காந்தி அவர்கள், அவருடைய கோரிக்கையை வைத்தார்கள். அது நிறைவேற்றப்பட்டிருக்கிறதே தவிர, தனித்துவமாக அவர் ஒன்றும் சொல்லவில்லை. மக்களுக்காக

[திரு. ஜே.ஜி. பிரின்ஸ்] [2014 ஜனவரி 31

அவர் சொல்லியிருக்கிறார் என்பதை நான் இங்கே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே அன்பிற்குரிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி நண்பர் பேசும்போது, காங்கிரஸ் கட்சியை குறை சொன்னார். அன்பிற்குரிய சகோதரி செல்வி கே. பாலபாரதி பேசும்போதும் குறை கூறினார். நான் சொல்கிறேன். நீங்கள், இங்கே காங்கிரஸ் கட்சியை வசைபாடுகிறீர்கள்; இந்த அரசை புகழ் பாடுகிறார்கள். சந்தோஷம்தான். ஆனால், கூட்டணியில் இருப்பதால் இங்கே பேசுகிறீர்கள். கூட்டணியில் இல்லாவிட்டால் இப்படி பேசுவீர்களா? நாங்கள் அப்படி கிடையாது. காங்கிரஸ் கட்சியின் சார்பில் பிரின்ஸ் சொல்கிறேன். மேற்கு வங்காளத்தில், இதே மார்க்சிஸ்ட் கட்சி, “ராஜ்ய சபா எம்.பி.-க்கு, நாங்கள் ஆதரவு தருகிறோம், நாங்கள் ஆதரவு தருகிறோம்” என்று சொல்லி *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், என்னவோ கேட்க வேண்டும் என்கிறீர்களே, கேளுங்கள். *(குறுக்கீடு)*

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** எங்களுக்கு ஆதரவு தருகிறார்கள். இது பத்திரிகை செய்தி. இதை மறக்கக் கூடாது. இங்கொன்றும், அங்கொன்றும் பேச விரும்பவில்லை. எங்களோடு நின்று ஆதரவு தந்தவர்கள் தயவுசெய்து நாகரிமாக நடந்து கொள்ள வேண்டுமென்பதற்காக . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள் சொல்கிற கருத்தை வைத்துப் பார்த்தால், எத்தனை பேர் திட்டினாலும், என்ன குறை சொன்னாலும் நாங்கள் திருந்தவேமாட்டோம், திருந்தாத ஒரு கட்சி நாங்கள் என்று அவர் சொல்லாமல் சொல்லிக்கொண்டு இருக்கிறார். மேற்கு வங்காளத்தைப் பொறுத்தவரையில், காங்கிரஸ் கட்சி ஆதரிக்கிற வேட்பாளரை இடதுசாரிகள் ஆதரிக்கவில்லை. அங்கு ஒரு பொதுவான வேட்பாளர் சுயேட்சையாக நிற்கிறார். அவரை நாங்கள் ஆதரிக்கிறோம். மம்தா பானர்ஜி அவர்களை வெளியேற்றிவிட்டார்கள். அதனால் அவர்கள் ஓட்டுப் போடுகிறார்கள். இதற்கும், அதற்கும் முடிச்சு போடக்கூடாது. அது சம்பந்தம் இல்லை. எனவே, எந்தக் காலத்திலும் இடதுசாரி கட்சிகள் எந்தப் பகுதியிலும், எந்த நிலையிலும் காங்கிரஸ் கட்சியோடு ஒட்டும் வைக்காது, உறவும் வைக்காது. இந்தியாவில் காங்கிரஸ் கட்சியையும், பி.ஜே.பி.-யையும் தோற்கடிக்கவேண்டும் என்பதுதான் எங்களுடைய இலட்சியம், கொள்கை. அதற்கான மாற்று அரசியல் திட்டத்தில் நாங்கள் தொடர்ந்து செயலாற்றிக்கொண்டிருக்கிறோம். அந்த வழியில், தமிழகத்தில், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் காங்கிரஸ் கட்சியினுடைய பொருளாதாரக் கொள்கைகளை எதிர்த்து நின்று, தன்னந்தனியாக போராடிக்கொண்டிருக்கிறது; மிகப் பெரிய மாற்று சக்திகளின் தலைவியாக நமது முதல்வர் அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கிறார் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*



2014 ஜனவரி 31] [திரு. சு. குணசேகரன்]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், பேசுங்கள். *(குறுக்கீடு)*

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் சப்ஜெக்ட்டில் பேசுங்கள். *(குறுக்கீடு)*

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சப்ஜெக்ட்டில்தான் பேசுகிறேன். *(குறுக்கீடு)* ஒன்று அவருக்குப் பேச வாய்ப்புக் கொடுங்கள். இல்லையெனில் நான் பேச வாய்ப்புக் கொடுங்கள்.

*பிற்பகல் 1-20*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பிரின்ஸ், பேசுங்கள். *(குறுக்கீடு)*

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** சென்ற ஆட்சியிலே இடதுசாரிக் கட்சிகள் திராவிட முன்னேற்றக் கழகத்தோடு கூட்டணி வைத்தார்கள். இப்போது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தோடு கூட்டணி வைத்திருக்கிறார்கள். அன்று அவர்களை புகழ் பாடினார்கள். இன்று உங்களை புகழ் பாடுகிறார்கள். வருத்தமில்லை, ஏற்றுக்கொள்கிறேன். புறம் பேசவில்லை. காங்கிரஸ் கட்சியை பொறுத்தமட்டிலே. . .

[2014 ஜனவரி 31

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சப்ஜெட்டுக்கு சீக்கிரம் வாருங்கள், நேரம் போய்க் கொண்டிருக்கிறது.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** சில விஷயங்களை மட்டும் சொல்லிவிடுகிறேன். குற்றம் சொல்ல விரும்பவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் விவரத்திற்கு சீக்கிரம் வாருங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் பணிபுரியும் பணியாளர்களுக்கு மத்திய அரசு ரூ.148/- என்று ஊதியம் நிர்ணயித்திருக்கிறது. அந்த ஊதியம் சரியாக வழங்கப்படுவதில்லை என்ற பிரச்சினை இருக்கிறது. அதை சரிசெய்ய வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம், மத்திய அரசு திட்டமாக இருந்தாலும், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏழையெளிய மக்களுக்கு சென்றடையக்கூடிய எந்தத் திட்டங்களையும் குறைவில்லாமல் நிறைவாக நிறைவேற்றிக்கொண்டிருக்கிறார்கள். இந்தியத் துணைக் கண்டத்திலேயே இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் முதன்மை மாநிலமாக தமிழகம்தான் விளங்கிக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ளவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள், ஒரே நிமிடம். அந்தத் துறையினுடைய அமைச்சர் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்தவர். கர்நாடக மாநிலத்தில், கடந்த நிதியாண்டில் ஒட்டுமொத்தமாக இந்தத் திட்டத்திற்காக எவ்வளவு நிதியை அவர் பெற்றிருக்கிறார் என்பதை நீங்கள் பார்க்க வேண்டும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், தமிழகத்தில் 6,000 கோடி ரூபாய் அந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. திட்டத்தின் பயன் ஏழையெளிய மக்களுக்குச் சென்றடையக்கூடிய வகையிலே பணிகள்



2014 ஜனவரி 31] [திரு. கே.பி. முனுசாமி]

மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதையும் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். இந்த விவரங்கள் எல்லாம் தெரியாமல் நீங்கள் பொத்தாம் பொதுவாக பேசக்கூடாது. பல பணிகள் எடுக்கப்பட்டு, பல கோடி மனித உழைப்புகள் உருவாக்கப்பட்டு 6,000 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ், வேறு கருத்துக்கு வாருங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) வேறொன்றும் நான் கேட்கவில்லை. அவர்களுக்கு ஊதியம் ரூ.148/- கொடுக்கவில்லை. அதைச் சரியாக கொடுக்க வேண்டுமென்றுதான் கேட்கிறேன். கொடுப்பதிலே சில இடங்களில் variations இருக்கின்றன. குறை சொல்லவில்லை. (குறுக்கீடு) உங்களை மத்திய அரசு பாராட்டுகிறது என்பது தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொதுவாக சொல்லிவிட்டு குறை சொல்லவில்லை என்கிறார். ஒரு சில இடங்களில் அவர்கள் செய்த பணிகளில் ரூ.148/- அவர்களுக்குக் கிடைத்திருக்காது. அதனால்தான், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஒன்றுக்கு மேற்பட்ட பணிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். அதோடு, தனி மனிதனாக பணியாற்றுகின்றபொழுது, அந்தப் பணியினுடைய தன்மையை அறியாமல் வேலை செய்கிறார்கள். கூட்டு முயற்சியில் செய்ய வேண்டுமென்பதற்காக குழுக்களாக அமைத்து, அந்தக் குழுக்களின் வாயிலாக அவர்களுக்கு ரூ.148/- கிடைப்பதற்குரிய வாய்ப்பையும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கிக்கொடுத்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

[2014 ஜனவரி 31

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பகுதிநேர ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு 5,000 ரூபாய் சம்பளம் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களை முழு நேர ஆசிரியர்களாக நியமித்து, காலமுறை ஊதியம் வழங்க வேண்டுகின்றேன். தமிழகத்தில் உள்ள கால்நடைகளுக்கு எல்லாம் கோமாரி நோயால் மிகுந்த பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதில் எனக்கு மாற்று கருத்து இல்லை. இருந்தாலும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு வட்டியில்லாக் கடன் கிடைக்க தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு டிசம்பர் மாதமே கோமாரி நோய் முற்றிலுமாக தடுக்கப்பட்டுவிட்டது என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் ஆணையத்தை தன்னாட்சி மற்றும் அதிகாரமுள்ள அமைப்பாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இடம் பெயர்ந்த தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு நடமாடும் குழந்தைகள் காப்பகம் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விதவைகள் உதவித் தொகை மற்றும் முதியோர் உதவித் தொகை வழங்குவதில் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. மாவட்டங்களின் பல பகுதிகளிலே உதவித் தொகைகள் வழங்க மறுக்கப்பட்டிருக்கின்றன. தகுதியுள்ள அனைவருக்கும் உதவித் தொகைகளை மறுக்காமல் வழங்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். ஆதரவற்றோர் சான்றிதழ் வழங்குவதில் சில பிரச்சினைகள் இருக்கின்றன. ஏனென்றால் சிலர் சிறிய Terrace வீடு வைத்திருப்பார்கள். இந்த அரசினுடைய நிர்ணயம்



2014 ஜனவரி 31] [திரு. ஜே.ஜி. பிரின்ஸ்]

என்னவென்றால், terrace வீடு வைத்திருந்தால், அவர்களுக்கு உதவித் தொகை கிடையாது என்று உள்ளது. அவர்களுக்கு விதவைச் சான்றிதழும் மறுக்கப்படுகிறது. இதுபோன்ற நிலைமைகளை மாற்றிக்கொள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தேவையான அறிவுரைகளை வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-25*

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்திலே நான் ஒரு உறுப்பினராக இருக்கின்ற காரணத்தினால், அங்கே ஒரு நிகழ்விலே கலந்துகொண்டேன். 25 ஆண்டுகள் நிறைவுற்று, வெள்ளி விழா கொண்டாடும் நிலையிலே அது வளர்ச்சி பெற்றுள்ளது. அதற்குப் பல்வேறு அடிப்படைத் தேவைகள் இருக்கின்றன. அதன் தரத்தை உயர்த்தி, Administrative courses, வேலைவாய்ப்பு வழங்கக்கூடிய வகையில் புதிய course-ஐ ஆரம்பிப்பது மிகவும் தேவை. அதற்கான அடிப்படை வசதிகளையெல்லாம் செய்வதற்குத் தேவையான நிதியுதவியினை அரசு கண்டிப்பாக வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். பல்கலைக்கழகத்தின் தரத்தை உயர்த்திடவும், காலியாக உள்ள Registrar மற்றும் Controller பணியிடங்களை நிரப்பிடவும் அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென வேண்டிக்கொள்கிறேன்.

மினி பஸ் சென்னையிலே சிறப்பாக இயங்கிக்கொண்டிருக்கிறது. அந்த மினி பஸ், சிற்றுந்து போக்குவரத்தினை மற்ற மாவட்டங்களிலும் இயக்கினால் மிகவும் நன்றாக இருக்கும். போக்குவரத்து வசதியில்லாமல் மிகவும் கஷ்டப்படுகின்ற பகுதிகளிலே, சில கிராமங்களிலே அப்படிப்பட்ட வசதிகளை செய்து கொடுத்தால் மிகவும் நன்றாக இருக்கும். எங்களுடைய மாவட்டத்திலே இருக்கக்கூடிய ஒரு அவல நிலையைக் குறிப்பிட விரும்புகிறேன். பேருந்துகளெல்லாம் பழுதடைந்து காணப்படுகின்றன; 64 பேருந்துகள் இப்போது நீதிமன்றத்திலே இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. மேலும், பல பேருந்துகளை இயக்க முடியாத சூழ்நிலையும் உள்ளது. அங்குள்ள M.D., G.M., B.M., ஆகியோரைக் குறை சொல்ல விரும்பவில்லை. அவர்கள் தங்களது பணியைச் சிறப்பாகவே செய்துகொண்டிருக்கின்றார்கள்; முழுமையான அளவில் செய்துகொண்டிருக்கின்றார்கள். நிதிப் பற்றாக்குறை என்று சொல்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய நிதி கொடுக்க வேண்டிய பொறுப்பு இந்த அரசுக்கு உண்டு.

[திரு. ஜே.ஜி. பிரின்ஸ்] [2014 ஜனவரி 31

ஏனென்றால், கன்னியாகுமரி மாவட்டத்திலே இப்படிப்பட்ட அவல நிலை அதிகமாகவே இருந்துகொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் காலியாக இருக்கக்கூடிய பணியிடங்களில் பேராசிரியர்களை நியமிக்க வேண்டுமென்று ஒரு கோரிக்கையை உறுப்பினர் அவர்கள் இங்கே சொன்னார்கள். அங்கே பல்கலைக்கழகத்திற்கு பேராசிரியர்களை நியமிப்பது தொடர்பாக சிலர் நீதிமன்றம் சென்றிருக்கிறார்கள். நீதிமன்றத்திலிருந்து உரிய தீர்ப்பு வந்தபிறகு, பேராசிரியர்களை நியமிக்கின்ற பணி மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தினுடைய 25-வது ஆண்டு வெள்ளி விழா வரவிருக்கிறது. அதற்கான கருத்துரு பல்கலைக்கழகத்திடமிருந்து வந்திருக்கிறது. அந்தக் கருத்துருவை மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பல்வேறு முறை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், கடந்த ஆட்சியில், திருநெல்வேலி போன்ற மாவட்டங்களில் இயக்கப்பட்ட பேருந்துகளை, கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மாற்றி இயக்கினார்கள். ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கன்னியாகுமரி மாவட்டத்திற்குத் தனியாக புதிய பேருந்துகளை இயக்க வேண்டுமென்று ஆணையிட்டு, மற்ற மாவட்டங்களைப்போல, கன்னியாகுமரி மாவட்டத்திற்கும், புதிய பேருந்துகள் கூண்டு கட்டப்பட்டு இயக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 6 ஆயிரம் புதிய பேருந்துகளை



2014 ஜனவரி 31] [திரு. வி. செந்தில்பாலாஜி]

வாங்குவதற்கு நிதியினைக் கொடுத்து, அவற்றில் 3,994 பேருந்துகள், ஏறத்தாழ 4 ஆயிரம் பேருந்துகள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திருக்கரங்களால் கொடியசைத்து தொடங்கி வைக்கப்பட்டு, இன்றைக்கு மக்களுடைய பயன்பாட்டில் இருந்துவருகின்றன. எஞ்சியிருக்கக்கூடிய பேருந்துகளுக்குண்டான கூண்டு கட்டுகின்ற பணிகள் நடைபெற்று வருகின்றன.

அதேபோல, நீதிமன்றத்தில் உள்ள பேருந்துகளைப்பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக தமிழகத்தினுடைய முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் நீதிமன்றத்தில் வழக்கில் உள்ள அந்தப் பேருந்துகளை மீட்பதற்கு 107 கோடி ரூபாய் நிதியினைக் கொடுத்து, 3,154 பேருந்துகளை மீட்டு, இன்றைக்கு மக்களுடைய பயன்பாட்டிற்கு இயக்குவதற்கான வகையில், அதற்கான நிதியினையும் வழங்கி, அந்தப் பேருந்துகள் மீட்கப்பட்டு, இன்றைக்கு இயக்கப்பட்டு வருகின்றன என்பதையும் இங்கே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 23-1-2014 அன்று தடம் எண் 86, மார்த்தாண்டம்-பத்தமடை நகரப் பேருந்தில் பிரேக் இல்லாத காரணத்தினால், பேருந்தினை நிறுத்த முடியாமல் டிரைவர் கஷ்டப்பட்டு, எங்கேயோ கொண்டுபோய் மோதிவிட்டார். 7 ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த ஹஜிதா என்ற மாணவி அந்தப் பேருந்திலிருந்து தூக்கியெறியப்பட்டு இறந்துவிட்டார். அந்தக் குடும்பத்திற்கு மாண்புமிகு முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து உதவித் தொகை கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், கன்னியாகுமரி மாவட்டத்திலே அரசு மணல் குவாரி இல்லை; மணலே இல்லை. மணல், கல் இல்லாமல் கட்டுமானப் பணிகள் செய்வதற்கு எந்த வாய்ப்பும் இல்லை. மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். மாவட்ட எல்லைப் பகுதிகளிலிருந்துகூட சிறு தொழில்கள் செய்யக்கூடியவர்கள்

மணல், கல் கொண்டு செல்வதற்கு அரசு அதிகாரிகள் ஒத்துழைப்பதில்லை என்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, அரசே 'M' sand-செயற்கை மணல் தொழிற்சாலையைத் தொடங்கினால் இந்தக் குறைகளைப் போக்கி, அத்தியாவசியத் தேவைகளை நிவர்த்தி செய்ய வாய்ப்பிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 1-30*

தனியார் காடுகளில் சுமார் 25,000 ஏக்கர் நிலப்பரப்பில் ரப்பர் பயிர் செய்யக்கூடிய விவசாயிகள் தங்கள் சொத்தை வாங்கவோ, விற்கவோ முடியாமலும், புதிய பயிர்களைப் பயிர் செய்ய முடியாத நிலையில் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இந்தப் பிரச்சினை குறித்து ஏற்கெனவே சட்டமன்றத்தில் பேசப்பட்டு, அதற்காக 5 நபர்கள் அடங்கிய குழு ஒன்றை நியமித்தார்கள். ஒன்றரை ஆண்டு காலமாகியும் அந்தக் குழு தனது அறிக்கையை இன்னும் அளிக்கவில்லை. அந்த அறிக்கை விரைவில் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இதுகுறித்து மீண்டும் அரசை நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அரசு உதவிபெறும் கல்லூரிகளில் காலிப் பணியிடங்களை நிரப்ப இந்த அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ஸ்காட் கிறித்துவக் கல்லூரி மற்றும் நேசமணி கிறித்துவக் கல்லூரி போன்ற சிறுபான்மைக் கல்லூரிகளில் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படவில்லை என்பதை வருத்தத்துடன் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு உதவிபெறும் கல்லூரிகளில் காலியாக இருக்கக்கூடிய ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். அங்கே காலிப் பணியிடங்கள் என்ன காரணத்தால் ஏற்பட்டது, ஏதாவது ஆசிரியர் இறந்ததனால் காலிப் பணியிடம் ஏற்பட்டதா, வேறு பணியிடத்திற்கு மாறிச் சென்றதால் ஏற்பட்டதா அல்லது அந்த ஆசிரியரே அந்தப் பதவியை இராஜினாமா செய்ததால் காலிப் பணியிடம் ஏற்பட்டதா என்பதைக் கண்டறிவதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவும் அந்தக் கல்லூரிகளுக்குச் சென்று ஆய்வு செய்து, அதன் விவர அறிக்கை அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அரசின் அனுமதியோடு அரசு உதவிபெறும் கல்லூரிகளில் இருக்கக்கூடிய காலிப் பணியிடங்களை நிரப்பி வருகிறார்கள். அவ்வகையில், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் உத்தரவின்படி, தமிழ்நாட்டில் 3,120 பணியிடங்கள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டு, கிட்டத்தட்ட 50%-க்கும் மேலான பேராசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. மேலும், அந்தக் கல்லூரி நிருவாகமே காலிப் பணியிடங்களை நிரப்பிக்கொள்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் அனுமதி வழங்கியிருக்கிறார்கள். அந்த அனுமதியின் அடிப்படையில், கல்லூரி நிருவாகத்தினர் அந்த அறிக்கையைப் பெற்ற பிறகு நிரப்பிக்கொள்ளலாம் என்பதை பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற வாரம் கோவில்பட்டி நகராட்சியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கட்சியின் சார்பிலே கலந்துகொண்டபோதுதான் கோவில்பட்டி மக்களுடைய நிலைமையை நான் அறிய முடிந்தது. சுமார் ஒரு இலட்சத்திற்கும் மேலாக மக்கள் வாழக்கூடிய அந்தப் பகுதியில் 17 நாட்களுக்கு ஒருமுறைதான் நகராட்சியால் தண்ணீர் கொடுக்கக்கூடிய நிலைமை இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினருக்குத் தெரிவித்த பதிலில் ஒரு சிறிய திருத்தம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிறுபான்மைப் பிரிவைச் சேர்ந்த கல்லூரிகள் என்று குறிப்பிட்டார்கள். சிறுபான்மைப் பிரிவைச் சேர்ந்த உதவிபெறும் கல்லூரிகளைப் பொறுத்தவரையில் இட ஒதுக்கீடே கிடையாது. மற்ற உதவிபெறும் கல்லூரிகளில் இட ஒதுக்கீடு உண்டு. ஆனால், சிறுபான்மைப்

[திரு. பி. பழனியப்பன்] [2014 ஜனவரி 31

பிரிவைச் சேர்ந்த கல்லூரிகளில் ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப இட ஒதுக்கீட்டு முறை கடைப்பிடிக்கப்படுவதில்லை. எனவே, அந்தக் கல்லூரிகளுக்கும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்தக் கல்லூரிகளிலும் பணியிடங்களை நிரப்பிக்கொள்ளலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்பட்டியில் 17 நாட்களுக்கு ஒரு முறைதான் தண்ணீர் வழங்கப்படுகிறது. அதனால் அவர்கள் மிகவும் கஷ்டப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. இரண்டாது pipe line system-க்காக மத்திய அரசும் 80%, தமிழக அரசும், நகராட்சியும் தலா 10% என்ற அடிப்படையில் போடப்பட்ட அந்தத் திட்டம் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட அந்தத் திட்டத்தை சென்ற ஆண்டு ஆரம்பித்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை தீவிரப்படுத்தி, துரிதமாக நடவடிக்கை எடுத்து, மக்களுக்கு தண்ணீர் வழங்கக்கூடிய ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். கோவில்பட்டி நகராட்சியில் தண்ணீர் பிரச்சினை இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையில் கோவில்பட்டி சட்டமன்ற உறுப்பினர் ஒரு கேள்வியை எழுப்பினார். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 5 கோடி ரூபாயில் நகராட்சி கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும் என்று உத்தரவு வழங்கியிருக்கிறார்கள். ஏற்கெனவே, கோவில்பட்டி வறட்சி நிறைந்த பகுதி. நீர் ஆதாரம் இல்லாத பகுதி. அதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு ஏற்பாடு செய்து, அந்தப் பணி விரைவாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அந்தப் பணி முடிந்தவுடன் அந்தப் பகுதிக்கு தண்ணீர் வழங்கப்படும் என்பதைப்



2014 ஜனவரி 31] [திரு. கே.பி. முனுசாமி]

பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். தயவுசெய்து அந்தப் பணியை முடிக்கும்வரை பொறுமையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் பெரியவிளை, தட்டன்விளை போன்ற பகுதிகளில் 35 ஏக்கர் பட்டா நிலங்கள் இருக்கின்றன. அங்கு 60 குடும்பங்கள் இருக்கின்றன. 50 தொழிற்சாலைகள் இருக்கின்றன. 4 கல்லறைத் தோட்டங்களும், பல இந்து வழிபாட்டுத் தலங்களும் அந்தப் பகுதியில் உள்ளன. அந்த நிலத்தை வீட்டு வசதி வாரியம் கையகப்படுத்த முயற்சிக்கிறது. 30 ஆண்டுகளாக இந்தப் பிரச்சினை இருக்கிறது. ஏற்கெனவே மக்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஓய்வுபெற்ற மாண்புமிகு நீதிபதி பாஸ்கரன் அவர்களும் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அந்த அறிக்கையில் அந்த நிலங்களை அரசு கையகப்படுத்தக்கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த நிலத்தை கையகப்படுத்த வேண்டாம் என்றும், அந்தப் பகுதியில் உள்ள மக்கள் வாழ்வதற்குரிய ஏற்பாடுகளை இந்த அரசு செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-35

என் தொகுதிக்குட்பட்ட நெய்யூர் பேரூராட்சியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம் நீண்ட காலமாக செயல்படாமல் இருக்கின்றது. அது, செயல்படுவதற்கான நடவடிக்கைகளையும் எடுத்து, அங்கு ஒரு மருத்துவரையும் நிரந்தரமாக நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என் தொகுதிக்குட்பட்ட வில்லுகுரி கிராமத்தில் மேலப்பள்ளம் என்ற பகுதியில் ஆயிரம் ஏக்கர் கொண்ட விவசாயம் செய்யக்கூடிய நிலம் இருக்கின்றது. அந்தப் பகுதியில் தூவலாறு இருக்கின்றது. அந்த ஆற்றில் பாலம் கட்டவில்லை. அதனால் விவசாய இயந்திரங்களை எடுத்துச் செல்ல முடியாத நிலையில், விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனவே, தூவலாற்றில் ஒரு பாலம் கட்டித்தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் சாலைகள் எல்லாம் மிகவும் பழுதடைந்துள்ளன. அன்புக்குரிய அமைச்சர் அவர்கள் அதனைப் பார்த்தால் எங்களுடைய கஷ்டம் என்னவென்று தெரியும். ஏற்கெனவே மத்திய அரசால் போடப்பட்ட நான்கு வழிச்சாலைப் பணிகளும் முடக்கப்பட்டிருக்கின்றன. சாலைகளைப் பொறுத்தவரையில், வேறு எந்த மாவட்டத்திலும் இல்லாத அளவுக்கு எங்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மக்கள் கஷ்டத்தை அனுபவிக்கின்றார்கள்.

என்னுடைய தொகுதிக்குட்பட்ட குளச்சல், பத்தரை பகுதியில், பாம்பூரி வாய்க்கால் பாலம் இருக்கிறது. அது உடைந்து, பழுதடைந்த நிலையில் உள்ளது. அதனைச் சரி செய்து, அங்கு ஒரு பாலம் கட்ட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதிக்குட்பட்ட குருந்தகோடு பகுதியில் ஒரு சுகாதார நிலையம் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. அந்த சுகாதார நிலையம் 2½ ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. எனவே, அந்தப் பகுதியில் முழுமையான ஒரு மருத்துவமனையைக் கட்டித் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் சிவராத்திரி திருவிழா மிகச் சிறப்பாக நடைபெறும். அந்தத் திருவிழாவில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொள்வார்கள். அந்த நேரத்தில் போக்குவரத்து இடையூறு ஏற்படும். ஆகவே, சிவராத்திரி விழாவினை எல்லா மக்களும் சிறப்பான முறையில் கொண்டாடும் வகையில், சிவராத்திரி திருவிழா அன்று, விடுமுறை தினமாக அரசு அறிவிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டம், வள்ள விளை கடற்கரைப் பகுதியில் 2½ கிலோ மீட்டர் பகுதி அளவில் சாலைகளே இல்லை. அந்தப் பகுதியில் சாலை போட வேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் நீண்டநாட்களாக கோரிக்கை வைத்திருக்கிறார்கள். எனவே, அந்தப் பகுதியில் சாலை போடுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

சமீபத்தில் எங்களுடைய மாவட்டத்தில் கருங்கல் காவல் நிலைய சரகப் பகுதிக்குட்பட்ட இடத்தில் ஏழு குடும்பங்கள் வாழ்ந்து வந்தார்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், சீக்கிரம் உங்கள் உரையை முடியுங்கள்.





**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** சீக்கிரம் பேசி முடித்து விடுகிறேன். புறம்போக்கு பகுதியைச் சேராத, தங்கள் சொந்த பட்டா நிலத்தில் வாழ்ந்து வந்தார்கள். அந்த நிலத்தின் அருகில் ஒரு government village office கட்டி வந்தார்கள். Village office கட்டிய காரணத்தினால், அந்தப் பகுதியில் இருந்த வீடுகளை இடிக்கவேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் முன்வந்தார். நீதிமன்றத்திற்கு போன ஒரே காரணத்தினால், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், அந்தப் பகுதி மக்களுக்கு எந்த அறிவிப்பும் கொடுக்காமல் இடித்துவிட்டார்கள். ஏன் அவ்வாறு செய்தீர்கள் என்று கேட்டதற்கு, அந்தப் பொதுமக்கள்மீது 307 என்ற பிரிவின்கீழ் வழக்கைப் பதிவு செய்திருக்கிறார்கள். எனவே, நமது அரசு ஏழை மக்களை எல்லாம் வாட்டக்கூடாது. அப்பாவி மக்கள் எல்லாம் பாதிக்காத வகையில், அவர்கள்மீது போடப்பட்ட வழக்கை இரத்து செய்ய வேண்டுமெனக் கேட்டு, வாய்ப்பு தந்தமைக்கு நன்றி சொல்லி அமருகின்றேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ் அவர்கள் பேசியபோது, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின்கீழ் பணி செய்தவர்களுக்குச் சம்பளம் வழங்குவதிலே நெருக்கடி இருப்பதுபோன்று இங்கே ஒரு கருத்தைச் சொன்னார்கள். நான் அவரைக் கேட்டுக்கொள்ள விரும்புவது, சம்பளம் வழங்குவதில் நெருக்கடி இருப்பதற்கு என்ன காரணம் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய அரசு, அதிகாரிகள்மூலம் வேலை வாங்கிய பிறகு, தற்போது இருக்கிற விதிப்படி வங்கிகள்மூலமாக சம்பளத்தை வழங்குவதற்கு பணத்தை வங்கிகளுக்கு அனுப்பிவிடுகிறார்கள். ஆனால், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் அனைத்தும் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. அந்த வங்கிகளிலே இருக்கிற அதிகாரிகள், ஊழியர்கள் இல்லை, அல்லது வேறு பல காரணங்களைக் காட்டி, வேலை செய்தவர்களுக்கு அன்றைக்கு மாலையே கூலி கொடுப்பதற்குப் பதிலாக இரண்டு மாதங்கள் வரை தாமதம் ஏற்படுத்தியதற்கு வங்கிகளும், அதற்குப் பொறுப்பாக இருக்கின்ற மத்திய அரசும்தான் காரணம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு அமருகிறேன்.

[2014 ஜனவரி 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ், தன்னுடைய கருத்தை பதிய வைக்க வேண்டுமென்பதற்காக சொல்லியிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் 148 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று கேட்டார். எப்படிக் கொடுக்கிறீர்கள் என்று கேட்கவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

பிற்பகல் *1-40*

**திரு. உ. தனியரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்புக்கு வந்த நாளில் இருந்து அன்னைத் தமிழகத்தில் வாழ்கின்ற ஏழு கோடிக்கும் மேற்பட்ட தமிழ் சமூகத்தினுடைய நலன்களுக்காக அனுதினமும் உலகில் எந்த அரசும் செயல்படுத்தாத மக்கள் நலத் திட்டங்களைத் தந்து இன்று உலகமே வியந்து பார்க்கிற ஓர் அரசாட்சியை நடத்தி வருகின்றார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இரண்டரை ஆண்டுகால சாதனையை, (மேசையைத் தட்டும் ஒலி) திட்டங்களை, அந்தத் திட்டங்களின் செயல்பாடுகளை ஆற்றல்மிகு அரசு நிருவாகத்தைப் பாராட்டுகின்ற நிகழ்வாகத்தான் நம்முடைய ஆளுநர் அவர்கள் நேற்று ஆற்றிய உரை இந்த மாமன்றத்திலே ஒரு வரலாற்று உரையாக பதிவாகி இருக்கிறது. அதற்காக ஆளுநர் அவர்களுக்கும், ஆளுநர் பாராட்ட நல்லாட்சி நடத்திய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என் பணிவான நன்றியை, வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்திய அரசியல் வரலாற்றில் அல்லது உலக அரசியல் வரலாற்றில் நிகழ்கால அரசியல் என்பது ஒரு அமைதியான சூழலில் இருக்கும்போது உலகத்தில் பண்பட்ட நாடுகளில்



2014 ஜனவரி 31] [திரு. உ. தனியரசு]

அரசியல் பதட்டம் இருக்கிறது. இனக் குழுக்களிடையே மோதல் இருக்கிறது. மதக் குழுக்களிடையே வர்க்க பேதங்களினால் மக்களின் ஓர் அமைதியான வாழ்வியல் சூழல் பல வளர்ந்த நாடுகளிலேகூட தடைபட்டு இருக்கிறது. ஆனால், சாதியால், இனத்தால், மதத்தால், மொழியால் பல்வேறு கூறுகளாக பிரிவுபட்டுக் கிடக்கின்ற இந்த இந்தியச் சமூகத்தில், நம்முடைய தமிழ் நிலத்தில் ஒரு அமைதியான நல்வாழ்வு ஓர் மகிழ்ச்சியான நல்வாழ்வு, வகைவகையாகப் பாகுபடுத்தப்பட்ட அனைத்து மக்களும் உரிமை பெற்று மகிழ்வோடு, நம்பிக்கையோடு வாழ்வதற்கான உறுதியை, உத்தரவாதத்தைத் தந்த ஒப்பற்ற நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதற்கான சான்றுகள் (மேசையைத் தட்டும் ஒலி) இன்று உலக பத்திரிகையாளர்களால், அரசியலாளர்களால் விமர்சனம் செய்ய முடியாத, குறை சொல்ல முடியாத அரசாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இருக்கிறது. அதற்கு உதாரணமாக, வரலாற்று அளவிலே வறட்சியால் பாதிக்கப்பட்ட இலட்சக்கணக்கான விவசாயிகளுக்கு அவர்கள் போராடினால், கோரிக்கை வைத்தால் அவர்கள் எந்தக் கட்சியையும் சார்ந்திருக்கலாம், கட்சியைச் சாராமலும் இருக்கலாம். சங்கம் வைத்திருக்கலாம். சங்கம் வைக்காமலேயே கோரிக்கைகளை அவர்கள் அரசிடம் மனு தந்தால் அல்லது கோரிக்கை வைத்தால் அவர்களுடைய துயரத்தை எடுத்துச் சொன்னால், அவர்கள் கோரிக்கையை வைத்து, வீடு சேருவதற்கு முன்பாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் கோரிக்கையிலே இருக்கின்ற நியாயத்தை உணர்ந்துகொண்டு அவர்களுடைய துன்பத்தைக் களைந்து, கண்ணீரைத் துடைக்கின்ற ஆட்சியாளர் யார் என்றால், உலகத்தில் நம்முடைய முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைத் தவிர வேறு யார் இருக்கிறார்? (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி ஒரு ஒப்பற்ற ஆட்சியாளர், ஒரே ஒரு தனி மனிதனாவது, இந்த அரசால், இந்த அரசின் திட்டத்தால், இந்த நிருவாக நிலைகளிலே, இந்த அதிகாரியால் நான் பாதிக்கப்பட்டிருக்கிறேன் என்று தமிழகத்தில் எவரொருவராவது ஒரு புகாரையாவது இதுவரை பதிவு செய்திருக்கிறார்களா? அப்படி ஒரு மனிதன்கூட கவலைப்படாத, ஒரு மனிதன்கூட வருத்தப்படாத ஓர் அரசை நடத்துகின்ற முதல்வர் நம்முடைய முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதனால் நம்முடைய தமிழ்நாட்டினுடைய

[திரு. உ. தனியரசு] [2014 ஜனவரி 31

சட்டமன்ற, அரசியல் வரலாற்றிலேயே எதிர்க்கட்சிகளே இல்லாத சட்டமன்றம் இப்போது நடக்கிறது என்றால் என்ன காரணம்? எதிர்க்கட்சிகள் மக்களுக்கு விரோதிகளாக மக்களுக்குத் தாங்கள் ஆற்ற வேண்டிய கடமைகளிலிருந்து விலகிவிட்டார்கள். அவர்கள் மக்களுடைய உணர்வுகளுக்கு மதிப்பளித்து, அவர்களுடைய உணர்வுகளை பிரதிபலிக்கிற ஒரு ஜனநாயக மாண்பும், அரசியல் மக்களாட்சி, குடியாட்சித் தத்துவம் ஆகியவற்றை ஏற்றுக்கொண்டு, அமைதியாக இந்த நல்லாட்சியை பார்த்துப் பாராட்டுவதற்கு தயங்கி, அரசியல் உள் நோக்கத்துடன் எதிர்க்கட்சிகள் ஏதாவது பொய்யைச் சொல்லிவிட்டு எழுந்து வெளியில் போகிறார்கள். எதிர்க்கட்சிகள் நமக்கு வெளியிலும் இல்லை. உள்ளேயும் இல்லை.

பிற்பகல் 1-45

எந்தக் கட்சி வேண்டுமானாலும் எத்தனை பேர் வேண்டுமானாலும் கூட்டணி அமைக்கலாம். குறிப்பாக 7 கோடிக்கு மேலாக ஒட்டுமொத்த தமிழ் சமூகமும், ஒட்டுமொத்த தமிழ் வாக்காளர்களும் நம்முடைய அணியில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அணியிலே உறுதியாக இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மோடியாக இருந்தால் வடநாட்டிலே உள்ள மக்கள் ஏமாறலாம் அல்லது கருணாநிதியைப் போன்ற வஞ்சகம், சூழ்ச்சி, போன்ற சந்தர்ப்பவாத அரசியல் கூட்டணியை அவர் உருவாக்கினாலும் தமிழ்நாட்டு மக்கள் விழிப்போடு இருக்கிறார்கள்.

காரணம், அரசை நேர்மையாக, வஞ்சகமில்லாமல், சூழ்ச்சியில்லாமல் மக்களுக்காக மக்களோடு இருந்து அனுதினமும் மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கின்ற ஒரு நேர்மையான, கண்ணியமான மக்கள் ஆட்சியை நடத்திவருகின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்கள்மீது (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் வைத்திருக்கிற நம்பிக்கை, அந்தப் பற்று ஓர் அளப்பரிய பற்று. இப்படிப்பட்ட ஒரு அரசியல் சூழல், ஒரு நிருவாகச் சூழல், இந்தியாவிற்கு முன்மாதிரியாக தமிழ்நாட்டினுடைய அரசியலை இந்தியாவும் பெற்று, இந்தியாவிலிருக்கிற 140 கோடிக்கு மேற்பட்டிருக்கிற ஒட்டுமொத்த இந்திய தேசத்து மக்களும் அப்படியொரு அரசியல் சூழலை, அப்படி ஒரு நிருவாக வாய்ப்பை, வசதியை பெற்று இந்திய நாடு ஓர் அரசியல் நிருவாக விடுதலையைப் பெற்று, இந்திய தேசமே வியந்து பாராட்டுகிற ஓர் ஆட்சித் தலைவராய், ஓர் அரசியல் தலைவராய் மாண்புமிகு



2014 ஜனவரி 31] [திரு. உ. தனியரசு]

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தியாவில் முடிசூடுகிற நாளை, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டு மக்கள் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குத் தருவார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1,600 கோடி ரூபாயை விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணமாகத் தந்துதவி, தந்து வரலாற்றுச் சாதனையை முதன்முதலாகப் பதிவு செய்தார்கள். தமிழகத்திலே மீனவர்கள் கொத்துக்கொத்தாய் நடுக்கடலிலே, படுகொலை செய்யப்பட்டபொழுது, இந்தியாவினுடைய ஆட்சியாளர்களும் கேட்கவில்லை. தமிழகத்தினுடைய ஆட்சியாளர்களும் கேட்கவில்லை. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தபிறகு, இன்றுவரை ஒரு மீனவனைக்கூட இலங்கைக் கடற்படையினர் எவனொருவனாவது தீண்டிவிட முடியுமா? அப்படி இந்திய தமிழக மீனவனுடைய உயிரை, உடைமையைப் பாதுகாத்த மீனவர்களுடைய காவல் அரணாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவன் உயிரைப் பறிப்பது மட்டுமல்ல; அவன் உடைமையைப் பறித்துவிட முடியாது, அவனை சிறைப்பிடித்துவிட முடியாது. சிறைப்படுத்தினால் ஒரு வாரம், பத்து நாட்களில் அவனை சிறையிலிருந்து மீட்டெடுப்பதற்கு ஒரு தாய் தன் சொந்தப் பிள்ளையை இழந்து தவித்து அவனை மீட்டேடுத்துத் தன் மடியிலே வைத்து மகிழ்ந்து அவன் மகிழ்விலே தானும் மகிழ்வதைப்போல், ஓர் ஆட்சியை நடத்துகிற புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தன் நாட்டு மக்களை தான் பெற்ற குழந்தையைப் போல் யோசிக்கிற பாங்கு வேறு எந்த நாட்டிலிருக்கிறது? இந்தியாவிலே வேறு எந்த முதலமைச்சர் அப்படி இருக்கிறார்? ஈரான் நாட்டிலே மீனவன் கைது செய்யப்பட்டு அவன் சிறைக் கொட்டடியிலே, மாற்றுவதற்கு உடைகூட இல்லாமல் 7, 8 மாத காலங்கள் ஒரே உடையிலே சிறைக் கொட்டடியிலே அடைப்பட்டுக் கிடந்தார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு இந்தப் பிரச்சினை வந்தது. உடனே அவர்கள் சிறையிலிருந்து மீட்கப்பட்டு, அவர்களுக்கு புதியதாக உடை தந்து, உணவு தந்து, விமானம் தந்து, பேருந்து தந்து, அவர்கள் வாழ்க்கைக்குத் தேவையான படகையும் தந்து, மானியமாக 30 இலட்சம் ரூபாய், மானியமில்லாமல் கடனாக 30 இலட்சம் ரூபாய், அவன் வருவதற்கு முன்பாகவே குடும்பத்திற்கு ஆதரவாக ஒரு இலட்சம் ரூபாய். அவன் வந்த பிறகு ஒரு இலட்சம் ரூபாய், இப்படி இலட்சக்கணக்கான ரூபாயைத் தந்து (மேசையைத் தட்டும் ஒலி) அந்த மீனவக் குடும்பத்தின் கண்ணீரைத் துடைத்த

[திரு. உ. தனியரசு] [2014 ஜனவரி 31

முதல்வரைப் போல், உலகில் வேறு யார் இருக்கிறார்கள்? வளர்ந்துவரும் அமெரிக்கா, ஐரோப்பா போன்ற நாடுகளில்கூட மீனவர்களுக்கு இப்படியொரு பாதுகாப்பு இருக்கிறதா? இப்படி உதவி செய்ய அரசு இருக்கிறதா? இல்லை என்றே சொல்லலாம். அப்படி கடலிலே தத்தளிக்கிற மீனவனைப் பாதுகாத்தார். விவசாயிகளைப் பாதுகாத்தார்; மீனவர்களைப் பாதுகாத்தார், அரை நூற்றாண்டு காலம் இலங்கை மண்ணிலே, ஈழத்திலே நம்முடைய தொப்புள்கொடி உறவுகள் இலட்சக்கணக்கானவர்கள் கொத்துக்கொத்தாய் பெண்களும், குழந்தைகளும் படுகொலை செய்யப்பட்டபோது உலகமே வாய்மூடி மௌனியாக இருந்தது. அன்னை தமிழகத்தை ஆண்ட தமிழினத்திற்கு விரோதமாக இருந்த கருணாநிதி முதலமைச்சராக அப்போது இருந்தார். மன்மோகன்சிங் தலைமையில் சோனியாவினுடைய அரசு மத்தியில் இருந்தது. கொத்துக் கொத்தாய் தொப்புள்கொடி உறவுகள், அப்பாவி தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டபோது உலகத்தில் வேறு யாராவது அதைத் தட்டிக் கேட்டார்களா? போரை நிறுத்தும்படி எந்த அரசாவது வலியுறுத்தியதா? ஆனால் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தவுடன், அந்தப் போர்க்குற்றம் நிகழ்த்திய ராஜபக்ஷே போர்க்குற்றவாளியாக அறிவிக்கவேண்டுமெனத் தீர்மானம் கொண்டு வந்தார். (மேசையைத் தட்டும் ஒலி) இலங்கையின்மீது பொருளாதாரத் தடை விதித்திட வேண்டுமென்று சொன்னார். ஈழத்தமிழர்கள் அரசியல் சுய நிர்ணய விடுதலை பெறுவதற்கு அல்லது தனிநாடே பெறுவதற்கு அவர்கள் சர்வதேச மேற்பார்வையில் பொது வாக்கெடுப்பை நடத்திட வேண்டுமென்று சொன்னார். இலங்கையில் நடைபெற்ற காமன்வெல்த் உறுப்பு நாடுகளினுடைய தலைவர்கள் மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது, (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு கொலைகாரனுடைய நாட்டிலே இரத்தக்கறை படிந்த ராஜபக்ஷேவினுடைய மாநாட்டிலே அமைதியை, சுதந்திரத்தை, ஜனநாயகத்தை நேசிக்கிற காமன்வெல்த் நாடுகளினுடைய கூட்டம் இலங்கை மண்ணிலே இரத்தம் செறிந்த மண்ணிலே அதுவும் என் தாய் உறவுகள் கொத்துக்கொத்தாய் செத்த மண்ணிலே அந்த மாநாடு நடைபெறுவது ஜனநாயகத்திற்கு இழுக்கு என்று இதே சட்டமன்றத்திலே தீர்மானத்தை யார் கொண்டு வந்தார்? புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டுவந்தார்கள். அப்படிப்பட்ட தீர்மானத்தைக் கொண்டுவந்ததன் விளைவாக இன்று உலகத்திலே எல்லோரும் விழித்துக்கொண்டுவிட்டார்கள். ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை கமிஷனிலே அமெரிக்கா தீர்மானம் கொண்டுவந்தது. ஐக்கிய நாடுகள் சபைக்கு இது எப்படி தெரிந்தது? நம்முடைய தமிழ்நாட்டில் இயற்றப்பட்ட தீர்மானத்தினுடைய வலிமை. மாண்புமிகு உறுப்பினர்கள், ராஜபக்ஷேவினுடைய உறவுகளைப் பாருங்கள் அதிலே. அம்மா அவர்கள் கொண்டுவந்த அந்தத் தீர்மானத்தில் உள்ள ஒவ்வொரு வரியும் உலகத்தின் எந்த நீதிமன்றத்திற்குப் போனாலும், உலகத்தில் எந்த ஒரு தனி மனிதராலும் நிராகரிக்கப்பட முடியாத அத்தனை வார்த்தைச் செறிவுள்ள, மானுட குலத்திற்கு அவசியமான கருத்துகளைக் கொண்டுவந்து இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை தமிழ்நாடு சட்டமன்றத்திலே நிறைவேற்றிய ஒப்பற்ற முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அல்லவா? (மேசையைத் தட்டும் ஒலி) கச்சத் தீவை மீட்டிட புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் தீர்மானம் கொண்டு வந்தார்கள். இப்படி அடுக்கடுக்கான அரசியல் தீர்மானங்களை உலக அளவில் அரசியல் ஆளுமை கொண்ட முதல்வராக தமிழ் சமுதாயத்தினுடைய, அரசியல் துறை வரலாற்றில், நிருவாகத் துறை வரலாற்றில் அறிவுச் செழிப்போடு நிறைவேற்றிய வரலாற்றுச் சிறப்புமிக்க முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இவை அனைத்தும் நம்முடைய ஆளுநர் உரையிலே பிரதிபலிக்கப்பட்டிருக்கின்றன.



2014 ஜனவரி 31] [திரு. உ. தனியரசு]

*பிற்பகல் 1-50*

மக்கள் நலத் திட்டங்கள், இலங்கைத் தமிழர்களுக்கான ஆதரவு, தமிழ் மீனவர்களைப் பாதுகாப்பதற்கான ஆதரவு, அதுபோல பால் கொள்முதல் விலை உயர வேண்டும் என்று விவசாயிகளின் சங்கத் தலைவர் கோரிக்கை வைத்தார். கேட்டு மூன்று நாட்கள்கூட ஆகவில்லை. அந்த தேதிக்கு முன்பு, ஒரு லிட்டர் பாலுக்கு 3 ரூபாய் விலை உயர்வு என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவிக்கிறார்கள். எங்கேயாவது இதுபோன்று வரலாறு உண்டா? தமிழ்நாட்டிலே ஏதாவது பொதுமக்கள், அல்லது ஏதாவது குழுக்கள், அமைப்புகள், சங்கங்கள், யாராவது போராடுகிறார்களா? இல்லை. போராடுகிற அளவிற்கு அவர்களுக்கு அரசு எந்தத் தொந்தரவும் செய்யாது. அந்த அவசியம் ஏற்படுத்துவது இல்லை. அப்படி அவர்கள் கேட்டால், கேட்க வேண்டும் என்று நினைத்தால், வீடு தேடி கொண்டுவந்து கொடுக்கிற அரசு புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய அரசு இருக்கிறதல்லவா? (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி பால் விலை, கரும்புக்கு

[திரு. உ. தனியரசு] [2014 ஜனவரி 31

விலை உடனடியாக அறிவித்தார்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். கெயில் நிறுவனம் விவசாயிகளின் நிலத்தைப் பறிக்கிறது. மீத்தேன் எரிவாயுவினால் தஞ்சை டெல்டா விவசாயம் பாதிக்கிறது என்று அந்தப் பகுதி மக்கள் குரல் கொடுத்தால், பதறினால், அரசு மக்களுக்கு ஆதரவாக இருந்தது. கூடங்குளம் அணுமின் நிலையமா? அதுபோல் நெய்வேலி பழுப்பு நிலக்கரித் தொழிற்சாலையினுடைய தொழிலாளர் பெருமக்களுடைய அச்சத்தைப் போக்குவதற்கு மாநில அரசு, மத்திய அரசினுடைய பங்கை மாநில அரசாங்கம் வாங்கிய வரலாற்றை யார் செய்தார்? புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் செய்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசின் சொத்தை, மாநில அரசு வாங்குகிறது. உலகத்திலே வேறு எங்கேயாவது நடக்குமா? அப்படியெல்லாம் தமிழ்ச் சமூகத்திற்கு, உலக அரசியல் சமூகத்திற்கு, இந்திய அரசியல் சமூகத்திற்கு தன்னாலான அனைத்தையும் தனது அறிவாற்றலால், நிருவாகத் திறனால், அடுக்கடுக்கான திட்டங்களால் தந்ததர்கள். அவர்களுடைய 10 திட்டங்கள், சிறப்புப் பொது விநியோகத் திட்டம், எவ்வளவு நிறைவாக நடக்கிறது என்று நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினுடைய சகோதரியார் சட்டமன்றத்தினுடைய மாமன்ற உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அம்மா அவர்கள் சொன்னார்கள். இந்தியாவிலேயே பொது விநியோகத் திட்டம், ஒட்டுமொத்த மக்களும் வரிசையாக நின்று தரமான பொருட்களை வாங்கி மகிழ்வோடு இருக்கிறார்கள். அப்படி ஒரு துறை மிகச் சிறப்பாகச் செயல்படுவது ஒட்டுமொத்த மக்களினுடைய பாராட்டைப் பெற்றிருக்கிறது. எப்பொழுது பெற்றிருக்கிறது? நம்முடைய ஆட்சியில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் அது நடந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) சென்ற அரசில் 20 விழுக்காடு பொது மக்கள் வாங்குவார்கள், 80 விழுக்காடு ரேஷன் அரிசி கள்ளச் சந்தையிலே, இரயிலிலே, தொடர் வண்டியிலே தூத்துக்குடியிலிருந்து கடத்தப்பட்டது. கற்பனை செய்து பார்க்கமுடியுமா? இப்பொழுதெல்லாம் இரயிலிலே 4 கிலோ கொண்டு வந்தாலே நாம் போய் உண்மையிலேயே அவர் வீட்டுக்குத்தான் கொண்டுபோகிறாரா என்று செக் செய்கிறோம். அவ்வளவு விழிப்பான நிருவாகம் பொது விநியோகத் துறையிலே நடக்கிறது. நிருவாகத்தை அவ்வளவு திறமையாக, விழிப்போடு நம்முடைய அம்மா அவர்களுடைய அரசு நடத்துகிறது.



2014 ஜனவரி 31] [திரு. உ. தனியரசு]

அதுபோன்று அம்மாவினுடைய பசுமை வீடு திட்டம். அம்மா குடிநீர். இரயில் நீர் என்று சொல்கிறோம். இந்தியாவிலேயே பெரிய நிறுவனம், உலகத்திலேயே பெரிய நிறுவனம் நம்முடைய இந்தியாவினுடைய இரயில்வே நிறுவனம். அந்த இரயிலில்கூட தண்ணீரை ரூ.15-க்கு விற்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொடுக்கிற பாட்டில், அதைவிட அழகாக இருக்கின்றது. அந்த பாட்டிலைப் பார்த்தாலே அழகாக இருக்கின்றது. அதில் உள்ள தண்ணீர்கூட மிகவும் பளிச் என்று இருக்கின்றது. நமது தமிழ்நாடு அரசாங்கத்தின் தண்ணீர்கூட அவ்வளவு வெளிச்சமாக, பளிச் என்று அவ்வளவு அழகாக இருக்கின்றது. இரயில் நீர் ரூ.15-க்குக் கொடுக்கிறார்கள். ஒரு இரயிலில் அதனைக் கூவிக் கூவி அதனை 10 நிமிடத்தில் விற்றுவிட முடியும். அதைக்கூட மத்திய அரசு ரூ.15-க்கு விற்கின்றது. ரூ.20-க்கும் விற்கிறார்கள். ஆனால், ரூ.10-க்கு அவ்வளவு அழகான குடிநீரைக் கொடுத்தது யார்? நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் பன்னாட்டு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் என்று எவ்வளவு பெரிய பணக்காரர்கள். அவர்கள் நினைத்தால் எவ்வளவு வேண்டுமானாலும் பார்த்துவிட்டு போகலாம். ஆனால் நாம் அப்படியெல்லாம் எதிர்பார்த்தோமா? மக்களுக்காக, ஏழையெளிய மக்கள், சாமானிய மக்கள் சுத்தமான, சுகாதாரமான தண்ணீரைப் பருகவேண்டும் என்றுதான் மாண்புமிகு அம்மா அவர்கள் கொடுத்தார்கள். அது ஓர் உதாரணம்.

பிற்பகல் 1-55

அதுமாதிரி, அம்மா உணவகம். ஒரு ரூபாய்க்கு இட்லி. அதுபோல் அம்மா அவர்களின் வருவாய்த் திட்டம். நமது அமைச்சர் பெருமக்கள் அறிமுகப்படுத்திய திட்டம். ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமைகளில் வருவாய் அதிகாரிகள் நேரே கிராமத்திற்குச் சென்று மக்களுடைய வருவாய் சான்றாவனங்களில் தனக்குச் சேர வேண்டிய சான்றுகளை, பெற வேண்டிய ஆவணங்களை அவர்கள் அங்கேயே உடனுக்குடன் பெற வேண்டிய திட்டத்தினைத் தந்து, இந்தியாவில், உலகத்தில் ஒரு முதன்மையான முன்மாதிரித் திட்டத்தை வருவாய்த் துறையில் ஒரு புரட்சியை ஏற்படுத்திய அரசு, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அல்லவா? (மேசையைத் தட்டும் ஒலி)

40. Under the cherished vision and charismatic leadership of the Hon'ble Chief Minister, Tamil Nadu has emerged as a model State in India in providing comprehensive health care services. The primary and secondary health care services have been expanded significantly. The National Rural Health Mission and the Tamil Nadu Health Systems Project have contributed immensely in achieving higher standards of public health care in the State. Under the Chief Minister's Comprehensive Health Insurance Scheme, health cover is being provided to 1.29 crore families. This scheme has so far benefited 5,84,554 persons to an extent of Rs.1,255.85 crore. The Government of India has also appreciated the efforts of the State Government in health care, particularly its achievement in reducing the Maternal Mortality Rate and Infant Mortality Rate. During 2013-2014, the State also received Rs.149.51 crore as the performance linked incentive grant recommended by the Thirteenth Finance Commission.

41. This Government is implementing several programmes for the benefit of socially and economically disadvantaged groups. It is heartening to note that 10,61,561 students belonging to the Backward Classes, Most Backward Classes, Denotified Communities and Minorities are getting the benefit of Scholarships at a cost of Rs.274.47 crore. The landmark decision to extend the benefit of post-matric scholarship to reimburse tuition fees to Adi-Dravidar and Tribal students studying even in private colleges has created a revolution in education and brought them into the mainstream of higher education. In order to cater to the increased number of students availing of such benefits, this Government has stepped up the Postmatric





scholarship provision for the benefit of students belonging to the Adi-Dravidar and Tribal communities to Rs.936.46 crore in the current fiscal year from the Budget Estimates of Rs.396.88 crore for 2013-2014. I applaud this decision of the Government which has opened up a new window of opportunities to lakhs of poor students belonging to the socially deprived sections of the Society. It is also gratifying to see that substantial investments are being made for improving the hostel facilities for such students, thereby creating a more congenial and enabling environment for their studies.

42. Tamil Nadu is a model welfare State, the envy of other States, with many unique welfare programmes. Our State is always a pioneer in rolling out such programmes which become a precursor for replication at the National level. Various Social Security Pension schemes are being implemented in the State, providing financial security to over 37 lakh persons, with an assistance of Rs.1,000 per month. Over the years, the allocation towards these schemes has been enhanced to over Rs.4,000 crore per annum by this Government. Marriage assistance programmes, programmes for the welfare of differently abled persons, women and children are some of the laudable initiatives of this Government, which have made the State an outstanding performer in providing welfare support to socially and economically marginalised people.

43. I have broadly outlined the initiatives and policies of this Government. I am fully confident that under the sagacious and visionary leadership of the Hon'ble Chief Minister, the State will march forward. I am sure that in the forthcoming session this House will debate and discuss issues of importance to the State and come out with more initiatives for the upliftment of the people. I conclude my address with my warm New Year greetings once again.

Nanri

Vanakkam

Jai Hind

[2014 ஜனவரி 31

மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்களே,

வணக்கம்.

இந்த மாமன்றத்தில் 2014 ஆம் ஆண்டின் முதல் கூட்டத் தொடரின் தொடக்க நிகழ்வான இத்தருணத்தில் உரை ஆற்றுவதில் நான் பெருமை கொள்கிறேன். இந்த மகிழ்ச்சிகரமான தருணத்தில் உங்கள் அனைவருக்கும் எனது புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மாமன்றத்தில் தொடர்ந்து மூன்றாவது முறையாகத் துவக்க உரையாற்றும் வாய்ப்பை அளித்தமைக்காக தமிழக மக்களுக்கு நான் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன். உங்கள் மீது நம்பிக்கை வைத்துள்ள மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் புனிதமான பணியை ஆற்ற வேண்டிய கடமை இம்மாமன்றத்திற்கு உள்ளது. இந்த நோக்குடன், தமிழ்நாட்டில் வளர்ச்சியையும், செழுமையையும் ஏற்படுத்திடவும், மக்களின் நலனை மேம்படுத்தவும் உறுதிபூண்டு இந்தப் புத்தாண்டைத் தொடங்குவோம்.

2. இந்த அரசு, விரைவில் வெற்றிகரமான மூன்று ஆண்டுகளை நிறைவு செய்யவுள்ளது. இந்தக் காலகட்டம் முக்கிய மாற்றங்களையும், சிறந்த சாதனைகளையும் கண்டுள்ளது. அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்ற கனவு நனவாகியுள்ளது. சரிநிகர் வளர்ச்சிக்கு முதன்மை இடம் அளித்து, சாதாரண மக்களும் தமிழகத்தின் சமூகப் பொருளாதார வளர்ச்சியால் அதிக அளவில் பயன்பெறும் வகையில், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சித் திட்டங்களுக்கான வழிவகைகளை தொலைநோக்குப் பார்வை கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் செயலாக்கியதன் காரணமாகவே இது சாத்தியமானது. இந்த நோக்கத்தை எட்டும் விதமாக, குறிப்பிட்ட துறைகளையும், பின்தங்கிய பகுதிகளையும் இலக்காகக் கொண்டு, சிறப்பான வளர்ச்சித் திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன. வறுமை, வேலைவாய்ப்பின்மை போன்ற பிரச்சினைகளுக்கு தீர்க்கமான முறையில் தீர்வு காணப்பட்டு வருகின்றது. நீண்டகாலப் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டும் பல்வேறு கட்டமைப்புத் திட்டங்கள் திட்டமிடப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவை அனைத்திற்கும் மேலாக, வளர்ச்சியையும், முன்னேற்றத்தையும் நிலைநிறுத்தும் அடித்தளமாக விளங்கக்கூடிய சட்டம் ஒழுங்கு எந்தவிதக் குறைபாடுமின்றி பராமரிக்கப்பட்டு, நிருவாகத்தின் மீதான நம்பிக்கை நிலைநிறுத்தப்பட்டுள்ளது.



2014 ஜனவரி 31]

3. இத்தகைய வளர்ச்சிப் பணிகளுக்கு பொதுமக்கள் முழுமனதுடன் ஆதரவளித்துள்ளனர். நடந்து முடிந்த ஏற்காடு சட்டமன்ற இடைத் தேர்தலில் பெற்ற சிறப்பான வெற்றி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திறனும், ஆற்றலும் மிக்க தலைமையின் மீதான மக்களின் நம்பிக்கைக்கு மேலும் ஒரு சான்றாகும். இத்தகைய நம்பிக்கை, எதிர்காலத்திலும் தொடர்ந்திட இந்த அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும்.

4. அதே நேரத்தில், இந்த அரசு பல சவால்களை எதிர்கொள்ள நேரிட்ட போதிலும், அவற்றை உறுதியான நடவடிக்கைகளின் மூலமாக திறம்பட கையாண்டுள்ளது. தமிழ்நாடு, குறைவான நீர்வளம் உடைய மாநிலமாக உள்ளதுடன், பருவகால மாற்றங்களின் சீற்றத்திற்கு ஆளாகும் மாநிலமாகவும் உள்ளது. 2012-2013 ஆம் ஆண்டில், கடுமையான வறட்சியை சந்திக்க நேரிட்டதால், விவசாய உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டு, அதனால் பொருளாதார வளர்ச்சியும் பாதிக்கப்பட்டது. உரிய நேரத்தில் 1,614 கோடி ரூபாய்க்கான இழப்பீட்டு நிவாரணத்தை வழங்கி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணை உள்ளத்தோடு எடுத்த, அறிவார்ந்த நடவடிக்கையினால் மட்டுமே, இத்தகைய பரவலான பயிர் இழப்பினால் ஏற்பட்ட பெரும் பாதிப்பைச் சமாளிக்க முடிந்தது. இது தவிர, சர்வதேசப் பொருளாதாரச் சரிவினால் இந்திய அளவில் ஏற்பட்ட பொருளாதார பாதிப்பு, மத்திய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கைகளினால் மேலும் அதிகமாகி, தமிழகத்தின் வளர்ச்சியையும் பெரிதும் பாதித்துள்ளது. இந்தப் பொருளாதாரச் சரிவை சீர்செய்ய இந்த அரசு அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது. இதுபோன்ற சோதனைகள் இருந்தபோதிலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அயராத, திறன்மிக்க தலைமையின்கீழ் அவற்றை சமாளித்து, நமது மாநிலம் இப்பிரச்சினைகளில் இருந்து வெற்றிகரமாக மீண்டெழும் என நான் உறுதியாக நம்புகிறேன்.

5. பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்து பொது அமைதியை நிலைநிறுத்துவது, சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கான அடிப்படைத் தேவையாகும். இந்த அரசு பொறுப்பேற்றது முதல், சட்டம்—ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது. இந்த அரசால் உரிய நேரத்தில் எடுக்கப்பட்ட உறுதியான நடவடிக்கைகளின்

[2014 ஜனவரி 31

காரணமாக, மாநிலத்தில் பொது அமைதி நிலைநிறுத்தப்பட்டுள்ளது. சட்டத்தை நிலைநாட்டும் நிருவாக அமைப்புகள் எடுத்த சிறப்பான நடவடிக்கைகளின் காரணமாக, பதற்றம் ஏற்பட வாய்ப்புள்ள திருவிழாக்களும், தலைவர்களின் நினைவு தின நிகழ்ச்சிகளும் அமைதியாக நடந்தேறியுள்ளன. தமிழ்நாடு, கேரளம் மற்றும் கர்நாடகம் ஆகிய மாநிலங்கள் இணையும் பகுதிகளில் மாவோயிஸ்டுகள் தளம் அமைப்பதற்காக எடுத்த முயற்சிகளும் தொடர் கண்காணிப்பு மூலம் முறியடிக்கப்பட்டுள்ளன. மாநிலத்தில் சமூக ஒற்றுமைக்குப் பங்கம் விளைவிக்க முயற்சி செய்த சமூக விரோத சக்திகள் ஒடுக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உறுதியான, தீர்க்கமான முடிவுகளின் காரணமாகவே, மாநிலத்தில் எந்தவிதமான பெரிய அளவிலான சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைகளும் ஏற்படாமல் தடுக்கப்பட்டுள்ளது என்பதை பெருமையோடு தெரிவிக்க விரும்புகிறேன்.

6. கடந்த மூன்று ஆண்டுகளில் காவல் துறைக்குத் தேவையான கூடுதல் பணியிடங்கள், நவீன ஆயுதங்கள், உபகரணங்கள் மற்றும் பிற கட்டமைப்பு வசதிகளை இந்த அரசு ஏற்படுத்தித் தந்துள்ளது. தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் பாதுகாப்புப் படைக்கான 10,500 பணியிடங்கள் உள்பட, 24,503 கூடுதல் பணியிடங்கள் காவல் துறையில் உருவாக்கப்பட்டுள்ளன. காவல் துறையை மேலும் வலுப்படுத்திடத் தேவையான வாகனங்கள், ஆயுதங்கள் மற்றும் கருவிகளுக்காக, இதுவரை 178.65 கோடி ரூபாய் இந்த அரசால் ஒதுக்கப்பட்டுள்ளது. கட்டடங்கள் மற்றும் இதர அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி, காவல் துறை சிறப்பாகச் செயல்பட, வரலாறு காணாத அளவிற்கு 1,448.74 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

7. நிருவாகத் திறனும், தொலைநோக்குப் பார்வையும் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், காவல் துறையை சுதந்திரமாகவும், திறம்படவும் செயல்பட அனுமதித்ததன்மூலம், அத்துறை மிகுந்த புத்துணர்வு பெற்றுள்ளது. இந்த அரசு அளித்த ஆதரவின் காரணமாக ஊக்கம் பெற்று, தேடப்பட்டு வந்த இரண்டு முக்கிய தீவிரவாதிகள், ஆந்திர பிரதேசத்தில் உள்ள புத்தூரில் பதுங்கியிருந்த இடத்தைச் சுற்றி வளைத்து, அவர்களைக் கைது செய்த நிகழ்வு உள்பட, பல தீரம் மிக்க சிறந்த சாதனைகளை தமிழ்நாடு காவல் துறை செய்துள்ளது. இந்தச் சாதனைகளைப்



2014 ஜனவரி 31]

பாராட்டி, அதில் ஈடுபட்ட அனைத்து 260 காவல் துறை பணியாளர்களுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நேரில் தன் வாழ்த்துக்களைத் தெரிவித்து, உரியவாறு பரிசுகளை வழங்கியது, காவல் துறையினரிடையே ஒரு பெரும் மன ஊக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

8. இலங்கையில் இனவெறிப் போருக்குப் பிறகு இலங்கைத் தமிழர்கள் அவர்கள் பிறந்த மண்ணிலேயே மனிதாபிமானமற்ற முறையில் இரண்டாம்தரக் குடிமக்களாக நடத்தப்படுவதும், இலங்கைப் போரின் இறுதிக் கட்டத்தில் இனப்படுகொலைகளுக்கு இலங்கை அரசைப் பொறுப்பேற்கச் செய்யத் தவறியதும், இம்மாநிலத்தில் உணர்ச்சிகரமான பிரச்சினைகளாக உள்ளன. சிறுபான்மைத் தமிழர்கள்மீது நிகழ்த்தப்பட்ட மனிதாபிமானமற்ற கொடுமைகளுக்கு இலங்கை அரசைப் பொறுப்பேற்கச் செய்யவும், இலங்கைத் தமிழர்களுக்கு சுய நிர்ணய உரிமையையும், அடிப்படை உரிமைகளையும் பெற்றுத்தரவும், நான்கு முறை இம்மாமன்றம் தீர்மானங்களை நிறைவேற்றி உள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு இப்பிரச்சினை குறித்து வலியுறுத்தி பலமுறை கடிதம் எழுதியுள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ் மக்களின் கொந்தளிப்பான உணர்வு நிலையை மத்திய அரசுக்குத் தெரியப்படுத்திய பின்னரும், மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர், இலங்கையில் நடைபெற்ற காமன்வெல்த் அமைப்பின் உறுப்பு நாடுகளுக்கான தலைவர்களின் மாநாட்டில் கலந்துகொண்டுள்ளார். இலங்கையில் உள்ள சிறுபான்மைத் தமிழர்களுக்கு உரிமைகளைப் பெற்றுத்தருவதற்கு, இந்த அரசு உறுதியான ஆதரவைத் தொடர்ந்து அளிக்கும்.

9. தமிழ்நாட்டிலிருந்து மீன்பிடிக்கச் செல்லும் இந்திய மீனவர்கள் அவர்கள் பாரம்பரியமாக மீன்பிடிக்கும் பாக் நீரிணைப் பகுதியில், எந்தக் காரணமுமின்றி இலங்கைக் கடற்படையால் கொலைவெறித் தாக்குதல்களுக்கு தொடர்ந்து உட்படுத்தப்படுவது தமிழ்நாட்டில் உள்ள ஒட்டுமொத்த மீனவர் சமுதாயத்தினரிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. கடந்த இரண்டரை ஆண்டுகளில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்குப் பலமுறை கடிதம் எழுதி, உணர்ச்சிகரமான இந்தப் பிரச்சினைகளுக்கு தூதரக அளவில் முயற்சி மேற்கொண்டு ஒரு உறுதியான முடிவினை எட்டி இந்திய மீனவர்களை மத்திய அரசு

[2014 ஜனவரி 31

காக்கவேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளார்கள். நிலவியல் அடிப்படையிலும், வரலாற்று ரீதியாகவும், கலாச்சாரத் தொடர்பின் அடிப்படையிலும் இந்தியாவின் ஒரு பகுதியாகவே இருந்து வந்த கச்சத் தீவை மீட்டு எடுக்க வேண்டும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதியோடு அயராது போராடி வருகிறார்கள். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் மனப்பான்மையோடு, தமிழகம் மற்றும் இலங்கை மீனவர்களுக்கிடையே நேரடிப் பேச்சுவார்த்தை நடத்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி அளித்தார்கள். இந்த மதிநுட்பமிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நடவடிக்கையால், நீண்டகாலமாக இலங்கையால் கைது செய்யப்பட்டிருந்த 295 மீனவர்களும் அவர்களது 45 படகுகளுடன் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

10. நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் பங்கினைத் தனியாருக்கு மத்திய அரசு விற்க முற்பட்டதையடுத்து, மாநில அரசு நிறுவனங்கள் அவற்றை வாங்கியது இந்த அரசின் ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சரியான நேரத்தில் எடுத்த இந்த புதுமையான நடவடிக்கையின் காரணமாக, மாநிலத்தின் தொழில் துறை அமைதியையும், மின்சார விநியோகத்தையும் பாதிக்கக்கூடிய இந்த சிக்கலான பிரச்சினைக்கு ஒரு தீர்வு ஏற்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இந்த அறிவார்ந்த தீர்வால் தொழிலாளர்கள் மனதில் நிலவிவந்த சந்தேகமும், பயமும் போக்கப்பட்டதுடன், இப்பிரச்சினையால் வெடிக்க இருந்த ஒரு பெரிய போராட்டமும் தவிர்க்கப்பட்டது.

11. அண்மையில், பதினான்காவது நிதிக் குழு நமது மாநிலத்திற்கு வருகை தந்தது. நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தின் கருத்துக்களை ஆணித்தரமாக எடுத்துரைத்தார்கள். நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில், மத்திய வருவாயில் கூடுதலான பங்கினை மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிப்பதன் மூலமாக, நிதி திரட்டும் அதிகாரங்களையும், சேவைகளை அளிப்பதற்கான பொறுப்புகளையும் மாநில மற்றும் மத்திய அரசுகள் பகிர்ந்து கொள்வதில், நமது அரசியல் அமைப்புச் சட்டத்தில் உள்ள அடிப்படை ஏற்றத்தாழ்வுகளைச் சரிசெய்ய வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்கள். மாநிலங்களுக்குக் கூடுதலான நிதி பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் எனவும், முன்னேறிய



2014 ஜனவரி 31]

மாநிலங்களைப் பாதிக்காமல், வெளிப்படையான முறையில் மாநிலங்களுக்கு இடையே நிதிப் பங்கீடு செய்யப்பட வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது. தற்போதைய நிதிக் குழு நியாயமான முறையில் செயல்பட்டு, முந்தைய நிதிக் குழுக்களின் பரிந்துரைகளால் நியாயமற்ற முறையில் பாதிக்கப்பட்டுள்ள சிறப்பாகச் செயல்படும் மாநிலமான தமிழ்நாட்டிற்கு, உரிய நீதி வழங்கும் என நான் நம்புகிறேன்.

12. நமது நாடு பொருளாதார நெருக்கடி மிக்க கால கட்டத்தில் உள்ளது. நாட்டின் மொத்தப் பொருளாதார வளர்ச்சிக் கணிப்புகள் தொடர்ந்து குறைக்கப்பட்டு வருகின்றன. உயர்ந்து வரும் பண வீக்கம், குறைந்து வரும் பொருளாதார வளர்ச்சி மற்றும் அந்நியச் செலாவணிச் சந்தையில் காணப்படும் நிலையற்ற தன்மை ஆகியவற்றால் ஒரு சிக்கலான சூழலை நாடு சந்தித்து வருகிறது. உற்பத்தியையும், ஏற்றுமதியையும் அடிப்படையாகக் கொண்ட தமிழ்நாட்டை, இச்சூழல் அதிக அளவில் பாதித்துள்ளது. இந்தப் போக்கினை எதிர்கொண்டு, பொருளாதாரச் சூழலை மேம்படுத்திடவும், பொருளாதாரத்திற்குப் புத்துயிரூட்டவும் இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. 2012-2013 ஆம் ஆண்டில், 4.14 சதவீத அளவில் மட்டுமே வளர்ச்சி இருந்தபோதிலும், 2013-2014 ஆம் ஆண்டில் வளர்ச்சி விகிதம் மேம்பட்டு, 5 சதவீதத்தை விஞ்சும் என எதிர்பார்க்கப்படுகிறது. தொழில் துறையிலும், வேளாண் உற்பத்தியிலும் ஏற்பட்டுள்ள மறுமலர்ச்சியால் சேவைத் துறை வளர்ச்சியும் மீண்டு எழும் வாய்ப்பு உள்ளது. மேலும், பொருளாதாரத்திற்கு ஊக்கம் அளிப்பதற்காக, 2013-2014 ஆம் ஆண்டிற்கான திட்டச் செலவின இலக்கை 37,128 கோடி ரூபாய் அளவிற்கு இந்த அரசு உயர்த்தியுள்ளது. 2014-2015 ஆம் ஆண்டில், திட்ட அளவு 42,185 கோடி ரூபாய் அளவிற்கு மேலும் உயர்த்தப்படும்.

13. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து முயன்று வரும் சூழ்நிலையிலும், காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையை முழுமையாகச் செயல்படுத்துவதற்கான காவேரி மேலாண்மை வாரியத்தையும், காவேரி நீர் முறைப்படுத்தும் குழுவினையும் மத்திய அரசு இன்னும் அமைக்கவில்லை. இந்தச் சூழ்நிலையில், அற்காவதி நதியைப் புனரமைப்பதற்கும், ஹேமாவதி நதிநீர்க் கால்வாய்களை நவீனப்படுத்தவும் கர்நாடக அரசு மேற்கொண்டுவரும் முயற்சிகள், காவேரி நடுவர் மன்ற இறுதி

[2014 ஜனவரி 31

ஆணைக்கு முரணானது. இவ்வரசு, 11-11-2013 அன்று உச்ச நீதிமன்றத்தை அணுகி, காவேரி மேலாண்மை வாரியத்தையும், காவேரி நீர் முறைப்படுத்தும் குழுவினையும் உடனடியாக அமைத்திட, மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளது.

14. தமிழ்நாட்டு மக்கள் எங்கு, எப்போது துயரங்களைச் சந்தித்தாலும் அவர்களை மீட்பதற்காக இந்த அரசு என்றும் துணை நிற்கும். உத்தராகண்ட் மாநிலத்தில் ஏற்பட்ட திடீர் வெள்ளம் மற்றும் பெரும் நிலச்சரிவுகளால் பாதிக்கப்பட்டு தத்தளித்த தமிழக பக்தர்களை மீட்டுவர, இந்த அரசு எடுத்த நடவடிக்கைகள் பாராட்டுக்குரியன. இதுபோன்றே, ஈரான் நாட்டுச் சிறைகளில் எட்டு மாதங்களுக்கும் மேலாக அல்லலுற்ற, நாகப்பட்டினம், இராமநாதபுரம், கன்னியாகுமரி மாவட்டங்களைச் சேர்ந்த 16 மீனவர்களை மீட்க அயராது தொடர் முயற்சிகளை எடுத்து இந்த அரசு அவர்களை மீட்டது. இது தவிர, ஒடிசா மாநிலக் கடற்கரைப் பகுதியைத் தாக்கிய ‘ஃபைலின்’ புயலால் மூழ்கிய படகுகளில் இருந்த கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த 18 மீனவர்களும், உரிய காலத்தில் இந்த அரசு எடுத்த நடவடிக்கைகளால் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர். அந்தமான் தீவுகளில் அண்மையில் நடந்த படகு விபத்தில் பாதிக்கப்பட்ட தமிழர்களை மீட்க இந்த அரசு எடுத்த உடனடி நடவடிக்கையையும் நான் பாராட்டுகிறேன்.

15. மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்வதற்காக, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எண்ணிலடங்கா அறிவிப்புகளைச் செய்துள்ளார்கள். நிதிநிலை அறிக்கையிலும், சட்டமன்றத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களாலும் அறிவிக்கப்பட்ட இந்தத் திட்டங்கள் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சாலைகள், பாலங்கள், குடிநீர் வழங்கல், அடிப்படைக் கட்டமைப்பு மற்றும் பொதுச் சேவைகளை அளிப்பதற்காக, அண்மையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகள் மாநாட்டில் முன்வைக்கப்பட்ட 312 கருத்துருக்களுக்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள நிலையில், இம்மாநாடு சிறப்பு முக்கியத்துவம் பெற்றுள்ளது. நிருவாகத்தின் முக்கியச் செயல் நிலைகளில் இருக்கும் அதிகாரிகள் எடுத்துரைக்கக்கூடிய பொதுமக்களின் தேவைகள் உடனுக்குடன் நிறைவு செய்யப்பட்டுள்ளது. இந்த அரசின் பொறுப்பான நிருவாகத்திற்கு மேலும் ஒரு எடுத்துக்காட்டாகும்.



2014 ஜனவரி 31]

16. பொதுமக்களுக்குப் பல்வேறு சேவைகளை விரைவாக அளித்திடவும், அவற்றை பொதுமக்கள் எளிதாக அணுகிப் பெறவும், தேவையான முனைப்பான நடவடிக்கைகள் பலவற்றை இந்த அரசு எடுத்துள்ளது. நாள்தோறும் பல முக்கியப் பணிகளை மக்களுக்காக வருவாய்த் துறை நிறைவேற்றி வருகிறது. இந்த வகையில், 2012-2013 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட 9 வருவாய் வட்டங்களோடு, கூடுதலாக மேலும் 25 புதிய வருவாய் வட்டங்களை 2013-2014 ஆம் ஆண்டில் இந்த அரசு ஏற்படுத்தியுள்ளது. இத்தகைய அலுவலகங்களுக்கு வருகைதரும் பொதுமக்களின் வசதிக்காக, தேவைக்கேற்ப, புதிய மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்கள், வருவாய்க் கோட்ட அலுவலகங்கள் மற்றும் வருவாய் வட்ட அலுவலகங்களுக்கான கட்டட வசதிகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

17. கிராமங்களில் உள்ள ஏழை மக்களுக்கு உறுதியளிக்கப்பட்ட அதிகபட்ச சேவைகளை வழங்குவதைக் குறிக்கோளாகக் கொண்ட புதுமையான ‘அம்மா’ திட்டத்தை இந்த அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. வெள்ளிக்கிழமைதோறும் அரசு அலுவலர்கள் கிராமங்களுக்குச் சென்று, பொதுமக்களின் குறைகளைக் குறுகிய காலத்தில் நிவர்த்தி செய்வதன் மூலமாக, இத்திட்டம் அரசு இயந்திரத்தை மக்களின் வீடுதேடிச் சென்றடையச் செய்துள்ளது. முதல் கட்டத்தில், அம்மா திட்டம் மாநிலத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும் செயல்படுத்தப்பட்டு, பல்வேறு சான்றிதழ்கள், சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியங்கள், பட்டா மாறுதல் மற்றும் பிற கோரிக்கைகள் உள்ளிட்ட 33.13 இலட்சம் மனுக்கள் பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போது, இரண்டாம் கட்டத்தில் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டம் மக்களின் ஏகோபித்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

18. நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையின்கீழ், தமிழ்மொழி, கலைகள் மற்றும் பண்பாடு ஆகியவற்றை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள் எப்போதும் உயர் முக்கியத்துவம் பெற்று வருகின்றன. இந்த வகையில், தமிழ்மொழியின் சிறப்பினை உலகெங்கும் பரப்பிட, மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்திற்கெனத் தனியாக இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது. தரமணியிலுள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு நிருவாகக் கட்டடம் அமைக்கும் பணிக்கு 4.17

[2014 ஜனவரி 31

கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, கடந்த 2013 டிசம்பர் திங்கள் 23-ஆம் நாள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. மதுரை மாநகரில் சங்கத் தமிழ்க் காட்சிக்கூடம் அமைப்பதற்கான பணிகளும் நடைபெற்று வருகின்றன. கடந்த ஆண்டு செப்டம்பர் மாதத்தில் இந்திய சினிமாவின் 100 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில், மூன்று நாள் பெருவிழாவை சிறப்பாக நடத்தியதில் இந்த அரசு முக்கியப் பங்காற்றியது. நமது மாநிலத்தின் வரலாற்றிலேயே முதன்முறையாக, இசை மற்றும் கவின்கலைத் துறைகளுக்காக தனிப் பல்கலைக்கழகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. சென்னை அரசு அருங்காட்சியகத்தில் உள்ள தொன்மையான பாரம்பரியமிக்க தேசியக் கலைக் கட்டடத்தினை 11 கோடி ரூபாய் செலவில் புதுப்பித்தல், இரண்டு கோடி ரூபாய் செலவில் அரியலூரில் கல் புதையுயிரிப் படிவ அருங்காட்சியகம் அமைத்தல் போன்றன, நமது பழம் பெருமையை போற்றிப் பாதுகாக்கும் பணிகளுக்கு புத்துயிரூட்டும் இந்த அரசின் முயற்சிகளுக்கு சில எடுத்துக்காட்டுகளாகும்.

19. 2013 ஆம் ஆண்டுக்கான புகழ்பெற்ற ஃபிடே உலகச் சதுரங்க வாகையர் போட்டியை முதன்முறையாக இந்தியாவில் நடத்துவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்ட சீரிய முயற்சிகளை நான் பாராட்டுகிறேன். தமிழக அரசு வழங்கிய 29.15 கோடி ரூபாய் நிதியுதவியோடு, சென்னையில் இந்தச் சிறப்பான நிகழ்ச்சி வெற்றிகரமாக நடத்தப்பட்டது. ஒலிம்பிக் மற்றும் சர்வதேசப் போட்டிகளில் பங்கேற்கும் வகையில் 5 சிறந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளைத் தயார்படுத்த, அவர்களுக்கு தலா 25 இலட்சம் ரூபாய் சிறப்பு உதவித் தொகை வழங்கும் திட்டம் உள்பட, இளைஞர்களிடையே விளையாட்டை ஊக்குவிப்பதற்கான பல்வேறு முயற்சிகள் தொடங்கப்பட்டுள்ளன. மாநிலத்தில் உள்ள விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான நிதி அளவும் முன் எப்போதும் இல்லாத அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது. மாநிலத்தில் விளையாட்டுப் பண்பு நலன்களை மேலும் வளர்த்து, அவற்றால் ஏற்படக்கூடிய சமுதாய நன்மைகளை அடைய இந்த நடவடிக்கைகள் உதவும் என நான் நம்புகிறேன்.

20. முதன்மைத் துறையில் (Primary Sector) ஈடுபட்டுள்ள மக்களின் வருவாயைக் கணிசமாக உயர்த்தாமல், அனைவருக்கும்



2014 ஜனவரி 31]

பலன் அளிக்கக்கூடிய வளர்ச்சியை அடைவது சாத்தியமில்லை. இந்த வகையில், உயர் தொழில்நுட்பங்களைப் பரவலாக்குதல், நுண்ணீர்ப் பாசனம் மற்றும் பண்ணை இயந்திரப் பயன்பாட்டைப் பிரபலப்படுத்துதல் போன்ற உத்திகளைப் பின்பற்றி, வேளாண் பயிர்களின் உற்பத்தித் திறனையும் மொத்த உற்பத்தியையும் உயர்த்துவதற்கு, இந்த அரசு சிறப்பு முக்கியத்துவம் அளித்து வருகிறது. அறுவடைக்குப் பிந்தைய மற்றும் சந்தைக் கட்டமைப்பு வசதிகளை உருவாக்கிட, கணிசமான முதலீடுகள் செய்யப்பட்டு வருகின்றன. பழங்கள், காய்கறிகள் போன்ற அதிக வருவாய் தரக்கூடிய பயிர்களின் சாகுபடியை ஊக்குவிப்பதற்காக பல புதுமையான முறைகள் கடைபிடிக்கப்பட்டு வருகின்றன. 2011-2012 ஆம் ஆண்டில் அதிக உணவு தானிய உற்பத்தியை எட்டியதற்காக, மத்திய அரசின் கிருஷி கர்மான் விருது நமது மாநிலத்திற்கு 2013 ஆம் ஆண்டு கிடைத்துள்ளது மன நிறைவளிக்கிறது. மாநிலத்தில், வடகிழக்குப் பருவமழை அளவு 33 சதவீதம் குறைவாகப் பெய்துள்ள சூழ்நிலையிலும், 2013-2014 ஆம் ஆண்டில் மாநிலத்தின் உணவு தானிய உற்பத்தி 100 இலட்சம் மெட்ரிக் டன் அளவை விஞ்சும் என எதிர்பார்க்கப்படுகிறது.

21. விவசாயிகளின் விளைபொருளுக்கு நியாயமான விலை கிடைப்பதை உறுதி செய்ய, 2013-2014 ஆம் ஆண்டு காரீப் பருவத்தில், சாதாரண மற்றும் சன்ன ரக நெல்லுக்கு, மத்திய அரசு அறிவித்த குவிண்டால் ஒன்றுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையான முறையே 1,310 ரூபாய் மற்றும் 1,345 ரூபாய் ஆகியவற்றை விட அதிகமாக, அதாவது சாதாரண ரகத்திற்கு 1,360 ரூபாய் எனவும், சன்ன ரகத்திற்கு 1,415 ரூபாய் எனவும், இந்த அரசு உயர்த்தி வழங்கி வருகிறது. இதுபோன்றே, கரும்புக்கு டன் ஒன்றுக்கு 2,100 ரூபாய் என்ற அளவில் மட்டுமே மத்திய அரசு நியாயமான மற்றும் ஆதாயமுள்ள விலையை நிர்ணயித்துள்ள போதிலும், டன் ஒன்றிற்கு 100 ரூபாய் போக்குவரத்துச் செலவு உள்ளிட்ட மாநில அரசின் பரிந்துரை விலையை நடப்பு நிதியாண்டிற்கு டன் ஒன்றிற்கு 2,650 ரூபாய் என இந்த அரசு உயர்த்தி வழங்கியுள்ளது.

22. வேளாண்மை மற்றும் வேளாண் சார்ந்த துறைகளின் வளர்ச்சியின் அடிப்படையிலேயே கிராமப்புறப் பொருளாதாரம் அமையும். நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முதன்மைத் திட்டமான ஏழைகளுக்குக் கறவை மாடுகளை வழங்கும் திட்டம் மூலமாக, கடந்த இரண்டரை ஆண்டுகளில் சுமார் 32,000 ஏழை,

[2014 ஜனவரி 31

எளியோர் பொருளாதார மதிப்புமிக்க சொத்துக்களைப் பெற்றுள்ளனர். இதுபோன்றே, கிராமப்புற ஏழை, எளியோருக்கு விலையில்லா செம்மறி ஆடுகள் மற்றும் வெள்ளாடுகள் வழங்கும் திட்டம் மூலமாக, 3.72 இலட்சம் நிலமற்ற ஏழைப் பெண்கள் பலன் பெற்றுள்ளனர். கால்நடைத் துறை வளர்ச்சியை நிலைநிறுத்த, கால்நடை மருத்துவக் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கும் இந்த அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்து வருகிறது.

23. அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், அனைத்துப் பொதுமக்களுக்கும் பலன் அளிக்கும் பொது விநியோகத் திட்டத்தை நமது நாட்டில் செயல்படுத்திவரும் ஒரே மாநிலம் தமிழகம் மட்டுமே. விலையில்லா அரிசி, மானிய விலையில் பருப்புகள், சமையல் எண்ணெய், கோதுமை, சர்க்கரை மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன. இதனால் 1.86 கோடிக்கும் மேலான குடும்பங்கள் பயன்பெற்று வருகின்றன. 2013-2014 ஆம் ஆண்டில் உணவு மானியமாக 4,900 கோடி ரூபாயை இந்த அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. மத்திய அரசால் நிறைவேற்றப்பட்டுள்ள தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்யும் நோக்கத்தை முழுமையாக எட்டாது என இந்த அரசு கருதுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்த தொடர் முயற்சிகளின் விளைவாக, தற்போதுள்ள பொது விநியோகத் திட்ட உணவு தானிய ஒதுக்கீடு மற்றும் எடுப்பு அளவுகளை உறுதி செய்யும் வகையில், சட்ட வரைவை மத்திய அரசு திருத்தி அமைத்துள்ள போதிலும், இச்சட்டத்தில் இன்னும் பல குறைபாடுகள் உள்ளன. எதிர்காலங்களில் உணவு தானிய விலையை நிர்ணயிப்பதில் எந்த உறுதிமொழியும் இல்லாமை, நகர்ப்புற மக்கள் தொகையில் குறைந்த அளவிற்கே பலன் அளித்தல் மற்றும் தகுதியுள்ள குடும்பங்களைக் கண்டறிவதற்குத் தெளிவான வழிமுறைகள் இல்லாமை ஆகியன இச்சட்டத்தின் நோக்கத்தை எய்தத் தடைகளாக அமைய வாய்ப்புள்ளது. தமிழகத்தில் தற்போது செயல்படுத்தப்பட்டுவரும், அனைவருக்கும் பலன் அளிக்கக்கூடிய பொது விநியோகத் திட்ட முறையைத் தொடர்ந்து அனுமதிக்கும் வகையில், தேவையான நெகிழ்வுத் தன்மையுடன் இச்சட்டத்தின் புதிய நடைமுறை இருந்திட வேண்டும் என்ற இந்த அரசின் நிலைப்பாட்டை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்.



2014 ஜனவரி 31]

24. அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்விலிருந்து ஏழை, எளிய மக்களைப் பாதுகாக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு எடுத்து வருகிறது. அத்தியாவசியப் பொருட்கள் மானிய விலையில் வழங்கப்பட்டு வருவதுடன், அத்தகைய பொருள்களை வாங்கி அடக்க விலைக்கே விற்பனை செய்து, சந்தை விலையைக் கட்டுப்படுத்துவதற்காக 100 கோடி ரூபாய் அளவிலான விலைக் கட்டுப்படுத்துதல் நிதி பயன்படுத்தப்பட்டு வருகிறது. சென்னையில் தொடங்கப்பட்டுள்ள பண்ணைப் பசுமைக் காய்கறிக் கடைகள், விவசாயிகளையும், நுகர்வோரையும் நேரடியாக இணைத்து, இருசாராருக்கும் பயன் அளித்து, அனைவரின் பாராட்டையும் பெற்றுள்ளது. அம்மா குடிநீர்த் திட்டம் மற்றும் அம்மா உணவகத் திட்டம் ஆகியன, ஏழை, எளியோருக்கு பலன் அளிக்க இந்த அரசு மேற்கொண்டுள்ள முன்னோடி முயற்சிகளாகும். சென்னை மற்றும் பிற நகரங்களில் தொடங்கப்பட்டுள்ள 290 அம்மா உணவகங்கள் ஏழைகளுக்குக் கிடைத்துள்ள வரப்பிரசாதமாகும். இவ்வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிந்தனையில் உருவான இந்தச் சீரிய திட்டத்தை ஏனைய மாநிலங்கள் பின்பற்ற முனைந்திருப்பதில் வியப்பேதும் இல்லை.

25. நமது மாநிலம் திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியை எட்டுவதில், குறிப்பாக, பொருளாதாரக் கட்டமைப்பை ஏற்படுத்துவதில் ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்கும் நோக்குடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023 வெளியிடப்பட்டது. இதன்கீழ், 217 முன்னுரிமைக் கட்டமைப்புத் திட்டங்கள் செயல்படுத்துவதற்காக கண்டறியப்பட்டுள்ளன. தமிழ்நாடு கட்டமைப்பு மேம்பாட்டுச் சட்டம் மற்றும் விதிகள் மூலமாக இதற்கான கொள்கை வரைமுறை மற்றும் ஊக்குவிப்பு அமைப்பு முறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப் புள்ளிகள் (பொதுத் துறை-தனியார் துறை பங்களிப்புக் கொள்முதல்) விதிகள் மூலமாக, பொதுத் துறை-தனியார் துறை பங்களிப்புத் திட்டங்களைக் கையாளுவதற்கான சட்ட வரைமுறையும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்தகைய சட்ட வரைமுறையை வகுத்துள்ள முதல் மாநிலம் தமிழகமே என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

[2014 ஜனவரி 31

26. ஜப்பான் சர்வதேச கூட்டுறவு நிறுவனத்தின் 770 கோடி ரூபாய் உதவியுடன், தமிழ்நாடு முதலீட்டு ஊக்குவிப்புத் திட்டம் என்ற புதுமையாக வடிவமைக்கப்பட்ட திட்டத்தை இந்த அரசு தொடங்கியுள்ளது. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கட்டமைப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி, தொழில் வளர்ச்சிக்கு உள்ள தடைகளைக் களைவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மின்சாரம், குடிநீர் வழங்கல், நகர்ப்புற வசதிகள் மற்றும் சாலைகள் போன்ற பல்வேறு துறைகளில், 834 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 12 திட்டங்களுக்கு இதன் மூலம் ஏற்கெனவே ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. தேவைக்கேற்ப நிதி வழங்குவதை மாற்றி அமைக்கத்தக்க வகையில், வெளிநாட்டு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் இந்த புதிய முயற்சி மாநிலத்தின் தொழில் முதலீட்டுச் சூழலை மேம்படுத்த உதவும்.

27. இந்த அரசு சந்தித்த பெரும் சவால்கள் மின் துறையைச் சார்ந்ததே. பெருமளவிலான மின் தட்டுப்பாடு, பலவீனமான மின் கடவு மற்றும் விநியோகக் கட்டமைப்பு, கடனில் மூழ்கிய மின் நிறுவனங்கள் போன்ற சவால்களை இந்த அரசு பொறுப்பேற்றபோது எதிர்கொள்ள நேரிட்டது. எனினும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நுண்ணறிவும், விசாலமான பார்வையும் மின்சாரத் துறையில் பெரும் திருப்பு முனையை ஏற்படுத்தியுள்ளன. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான நிறுவனமும், தேசிய அனல் மின் உற்பத்தி நிறுவனமும் இணைந்து செயல்படுத்திவரும் வல்லூர் மின் உற்பத்தித் திட்டத்தின் முதல் மற்றும் இரண்டாம் அலகுகள், மேட்டூர் அனல் மின் உற்பத்தித் திட்டத்தின் மூன்றாவது அலகு, வடசென்னை இரண்டாவது கட்ட அனல் மின் உற்பத்தித் திட்டத்தின் முதல் மற்றும் இரண்டாவது அலகுகள் போன்ற மின் உற்பத்தித் திட்டங்களை விரைவுபடுத்தி செயலாக்கத்திற்குக் கொண்டுவந்து, கணிசமான அளவிற்கு கூடுதல் உற்பத்தித் திறன் சேர்க்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகள் மாநில மக்களுக்குப் பெரும் நிம்மதியைத் தந்துள்ளன.

28. காற்றாலை மின்சாரத்தைக் கொண்டு செல்வது உள்ளிட்ட, மின் கடவு மற்றும் விநியோகக் கட்டமைப்பை வலுப்படுத்தவும் பெரும் முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன. இவற்றோடு, எதிர்காலத்தில் மின் வழங்கலை உறுதி செய்வதற்காக நீண்டகால மின்சாரக் கொள்முதல் ஒப்பந்தங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தேசிய மின் கடவு அமைப்போடு தற்போது இணைக்கப்பட்டுள்ள



2014 ஜனவரி 31]

தென் பகுதி மின் கடவு அமைப்பு நிலைபெறும்போது, நிலையான மின் விநியோகத்தை உறுதி செய்ய இம்முயற்சிகள் வழிவகுக்கும். மேலும், பல புதிய அனல் மின் மற்றும் நீர் மின் உற்பத்தித் திட்டங்களையும் இந்த அரசு செயல்படுத்த முனைந்துள்ளது. முதலீட்டாளர்களுக்கு உகந்த புதிய சூரிய மின்சக்திக் கொள்கை மூலமாக சூரிய மின்சக்தியை முழுமையாகப் பயன்படுத்துவதற்கும் கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. இம்முயற்சிகள் அனைத்தும் மாநிலத்தில் போதிய மின்சாரம் கிடைப்பதை உறுதி செய்து எதிர்காலத்தில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும்.

29. மின்சார நிறுவனங்கள் சந்தித்து வந்த மோசமான நிதிநிலையைச் சரிசெய்வதற்காக, நிதிநிலை மறு சீரமைப்புத் திட்டத்தை செயல்படுத்திய முதல் மாநிலம் தமிழ்நாடு ஆகும். இத்திட்டத்தின்படி, 6,353 கோடி ரூபாய் கடன் தொகையை மாநில அரசே ஏற்றுக்கொண்டு, ஐந்தாண்டு காலத்தில் திரும்பச் செலுத்த உள்ளது. இத்தகைய முயற்சிகள், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான நிறுவனத்தின் நிதிநிலையை உறுதியாக மேம்படுத்தும் என நான் நம்புகிறேன்.

30. பொருளாதார வளர்ச்சியில் சாலைப் போக்குவரத்து முக்கியப் பங்கு வகிக்கிறது. இந்த வகையில், நகர்ப்புறப் பகுதிகளில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக வட்டச் சாலைகள் மற்றும் புறவழிச் சாலைகள் அமைப்பதற்கு இந்த அரசு சிறப்பு முக்கியத்துவம் அளித்து வருகிறது. இத்தகைய பல திட்டங்கள் மாநிலமெங்கும் பல்வேறு நிலைகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், தற்போதுள்ள சாலைகளும் தொடர்ந்து தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. 1,697 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்தவும், 3,529 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளை மேம்படுத்தவும், 229 பாலங்கள் மற்றும் சிறு பாலங்களை அமைப்பதற்கும், 2013-2014 ஆம் ஆண்டில் 2,500 கோடி ரூபாயை இந்த அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

31. தொழில் துறை முதலீட்டிற்கு குறிப்பாக, உற்பத்தித் துறையில் முதலீடு செய்வதற்கு உகந்த இடமாக தமிழகம் தொடர்ந்து விளங்கி வருகிறது. மேம்பட்ட கட்டமைப்பு, சிறப்பான சட்டம்-ஒழுங்கு பராமரிப்பு மற்றும் திறன்மிக்க மனித ஆற்றல் போன்ற காரணங்களால் முதலீட்டாளர்கள் தொடர்ந்து தமிழ்நாட்டை நாடி வருகின்றனர். மாநிலமெங்கும், குறிப்பாகத்

[2014 ஜனவரி 31

தென்மாவட்டங்களில், சமச்சீரான தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதே இந்த அரசின் நோக்கமாகும். இதற்காக, சிறப்பு ஊக்கத் தொகுப்பும் அறிவிக்கப்பட்டுள்ளது. பின்தங்கிய பகுதிகளில் கூடுதல் தொழில் முதலீடுகள் மூலமாகத் தொழில்களை ஊக்குவிப்பதற்காக, வழித்தட அடிப்படையிலான முதலீட்டு முறை பின்பற்றப்பட்டு வருகிறது. மதுரை-தூத்துக்குடி தொழில் வளர்ச்சி வழித்தடத்தை செயல்படுத்துவதற்கான பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. வேலைவாய்ப்பிற்கும், ஏற்றுமதிக்கும் பெரும் சாத்தியக்கூறுடைய உற்பத்தி மையங்கள், அறிவுசார் மையங்கள் மற்றும் வேளாண் உற்பத்தி மண்டலங்கள் இப்பகுதியில் அமைக்கப்பட இது உதவும்.

32. மக்கள் தொகை விகிதாச்சாரத்தில், உழைக்கும் வயதுடையவர்கள் அதிக அளவில் உள்ள சாதகமான சூழலை நமது மாநிலம் தற்போது பெற்றுள்ளது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அண்மையில் சுட்டிக்காட்டியுள்ளார்கள். இச்சாதகமான சூழல் வெகுகாலம் நிலைத்திருக்காது. எனவே, இச்சூழல் மாறுவதற்கு முன்பே, இதனை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளத் தேவையான, சமூக மற்றும் பொருளாதாரக் கட்டமைப்பு முதலீடுகளை உயர்த்த இந்த அரசு முனைந்துள்ளது. மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகளை வழங்குவது இதற்கான முன்னோடித் திட்டங்களில் ஒன்றாகும். நமது இளைஞர்களை வேலைவாய்ப்பு பெறத் தகுதியுடைவர்களாக்குவதில் உள்ள சவால்களை எதிர்கொண்டு, அவர்களது திறன் அளவை மேம்படுத்த தமிழ்நாடு திறன் மேம்பாட்டு இயக்கம் என்ற தனிச் சிறப்புடைய முன்முயற்சி அமைப்பு தொடங்கப்பட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக, வேலை தேடுபவர்களையும், வேலைவாய்ப்பு அளிப்பவர்களையும் இணைக்கும் தளமாக, மாநில வேலைவாய்ப்பு இணைய தளம் ஒன்று தொடங்கப்படும். வேலைவாய்ப்பு ஆலோசனைகள், பயிற்சிகள் மற்றும் பணியமர்வு உதவிகள் குறித்த தகவல்களை ஒரே இடத்தில் இது வழங்கும். மேலும், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு இயக்கத்திற்காக, சர்வதேச நிதி நிறுவனங்களிடமிருந்து நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை நமது மாநிலம் பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

33. மக்களின் நலனுக்காக, குறிப்பாக, கண்ணியமாக வாழத் தேவையான உணவு, உடை, இருப்பிடம் ஆகியவற்றை கிராமப்



2014 ஜனவரி 31]

பகுதிகளில் வாழும் ஏழை மக்களுக்கு வழங்குவதற்காக, பல்வேறு திட்டங்களை இந்த அரசு தொடங்கியுள்ளது. இவற்றுள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சூரிய மின்சக்தி கொண்ட பசுமை வீடுகள் திட்டம் தனிச் சிறப்புடையதாகும். கடந்த மூன்று ஆண்டுகளில் 1.80 இலட்சம் வீடுகள் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. ஒரு வீட்டிற்கான ஒதுக்கீடும் 1.80 இலட்சம் ரூபாயிலிருந்து 2.10 இலட்சம் ரூபாயாக இந்த ஆண்டு உயர்த்தப்பட்டுள்ளது. வரும் இரண்டு ஆண்டுகளில் இத்திட்டத்தின்கீழ் மேலும் 1.2 இலட்சம் ஏழைக் குடும்பங்கள் பயன்பெறும். ஒவ்வொரு குடியிருப்புப் பகுதியிலும் கவனம் செலுத்தும் புதுமையான கிராமப்புறக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டமாகிய ‘தாய்’ திட்டம், கிராமங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தி பெரும் பயன் அளித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ், குடிநீர் வழங்கல், சுகாதாரம் மற்றும் சாலை மேம்பாட்டிற்கு தொடர்ந்து உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது.

34. மாநிலத்தின் நகர்ப்புறப் பகுதிகளில் 48 சதவீத மக்கள் வாழக்கூடிய சூழ்நிலையில், இப்பகுதிகளில் போதிய அடிப்படை வசதிகளை அளிப்பது பெரும் சவாலாக அமைந்துள்ளது. இந்தச் சவாலை எதிர்கொள்வதற்காக, ஆண்டுக்கு 500 கோடி ரூபாய் ஒதுக்கீட்டுடன்கூடிய சென்னை மாநகர வளர்ச்சித் திட்டம் மற்றும் 750 கோடி ரூபாய் ஆண்டு ஒதுக்கீட்டுடன்கூடிய ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் ஆகிய சிறப்பான திட்டங்களைத் தொடங்கிச் செயல்படுத்திட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவாற்றலும், தொலைநோக்குப் பார்வையுமே காரணமாகும். கட்டமைப்புத் திட்டங்களில் முதலீடு செய்வதற்கும், அடிப்படை வசதிகளை வழங்குவதற்கும் உள்ளாட்சி அமைப்புகளின் தற்போதைய நிதி ஆதாரங்களை இத்திட்டங்கள் பெருமளவு உயர்த்தியுள்ளன. நகர்ப்புறக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், திட்டங்களைச் செயல்படுத்தும் திறனை உயர்த்தவும், தமிழ்நாடு நிலைக்கத்தக்க நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-IV-ஐ செயல்படுத்துவதற்காக, உலக வங்கியிலிருந்து இந்த அரசு உதவி கோரியுள்ளது.

35. தொடர்ந்து வளர்ந்துவரும் சென்னை நகருக்குப் போதிய குடிநீர் வழங்குவது மிகப்பெரும் சவாலாக அமைந்துள்ளது. புதிய நீர்த் தேக்கத் திறனை உருவாக்குதல், தற்போதுள்ள நீர்த் தேக்கத் திறனை மேம்படுத்துதல் மற்றும் கடல்நீரைக் குடிநீராக்குதல்

[2014 ஜனவரி 31

உள்ளிட்ட மரபுசாரா வழிமுறைகளைப் பயன்படுத்துதல் போன்றவையே இச்சவாலை எதிர்கொள்ள இந்த அரசு பின்பற்றி வரும் நீண்டகால உத்தியாகும். இந்த வகையில், தேர்வாய்க்கண்டிகை கிராமத்தில் புதிய நீர்த் தேக்கம் அமைக்கவும், திருக்கண்டலத்தில் கொசஸ்தலை ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கவும், சென்னையைச் சுற்றியுள்ள ஏரிகள் மற்றும் வீராணம் ஏரி ஆகியவற்றின் கொள்ளளவை உயர்த்தவும் இந்த அரசு மேற்கொண்டுவரும் முயற்சிகள் நீண்டகாலப் பலனைத் தரும். மீஞ்சூர் மற்றும் நெம்மேலியில் உள்ள கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டங்கள் முழுத் திறனோடு இயங்கி, நாளொன்றுக்கு 200 மில்லியன் லிட்டர் குடிநீரை அளித்து வருவது மன நிறைவளிக்கிறது. இது சென்னை நகருக்கு கிடைத்த பெரும் நிவாரணமாகும். மேலும், தொலைநோக்கோடு இந்த அரசு எடுத்த முடிவால், நெம்மேலியில் நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட ஒரு திட்டத்தையும் தென்சென்னையில் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட ஒரு திட்டத்தையும், செயல்படுத்துவதற்கான திட்ட வடிவமைப்புப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டங்கள் எதிர்காலத்தில் குடிநீர்ப் பிரச்சினையைப் பெருமளவு குறைக்க வழிவகை செய்யும்.

36. நகர்ப்புறக் குழுமப் பகுதிகள் ஒழுங்கற்ற முறையில் வளர்ச்சி அடைவது குடிசைப் பகுதிகளை அதிகரிக்கிறது. ஏழை மற்றும் நடுத்தரப் பிரிவினர் வாங்கிப் பயன்பெறும் வகையில் வீட்டு வசதியை அளித்தல், தற்போதுள்ள குடிசைப் பகுதிகளில் வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் அதே இடத்திலோ அல்லது வேறு சிறந்த சூழலிலோ குடும்பங்களை மறு குடியமர்த்துதல் ஆகியவற்றின் மூலமாக இப்பிரச்சினையை சரிசெய்வதே இந்த அரசின் உத்தியாகும். கடந்த இரண்டரை ஆண்டுகளில் இந்த அரசு 21,750 குடியிருப்புகளை அமைத்து, 7,253 குடும்பங்களை மறு குடியமர்த்தியுள்ளது.

37. சென்னை மெட்ரோ இரயில் திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருவதை இங்கு நான் மகிழ்வோடு குறிப்பிட விரும்புகிறேன். நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த 2013 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 6 ஆம் நாள் மெட்ரோ இரயிலின் சோதனை ஓட்டத்தை தொடங்கி வைத்துள்ளார்கள். இதுவரை, மாநில அரசிலிருந்து மூலதன உதவி மற்றும் கடனாக



2014 ஜனவரி 31]

3,060.74 கோடி ரூபாயும், ஜப்பான் சர்வதேச கூட்டுறவு நிறுவனத்தின் மூலம் கடன் உதவியாக 3,864.83 கோடி ரூபாயும் வழங்கப்பட்டுள்ளன. வண்ணாரப்பேட்டையிலிருந்து திருவொற்றியூர் செல்லும் வழித்தடத்திற்கு மத்திய அரசிடமிருந்து விரைவில் ஒப்புதல் பெறவும், இத்திட்டத்தின் இரண்டாவது கட்டத்திற்கான புதிய வழித்தடங்களுக்கு விரிவான திட்ட அறிக்கையைத் தயார் செய்யவும் இந்த அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

38. 2011 ஆம் ஆண்டிலிருந்து குழந்தைகளின் இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தை இந்த அரசு வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகிறது. பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், புத்தகப் பைகள், வடிவியல் பெட்டிகள், கலர் பென்சில்கள், கிரையான்கள், காலணிகள், நான்கு சீருடைத் தொகுப்புகள், மிதிவண்டிகள், இலவசப் பேருந்துப் பயண அட்டைகள், மதிய உணவு, இடைநிலைக் கல்வியில் உள்ள இடைநிற்றலை குறைப்பதற்கான சிறப்பு ஊக்கத் தொகை மற்றும் விலையில்லா மடிக்கணினிகள் போன்ற பல்வேறு பயன்களை மாணவர்களுக்கு வழங்கியதன் விளைவாக, அண்மை ஆண்டுகளில் அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை கணிசமாக உயர்ந்துள்ளது. பள்ளியில் பயிலாதவர்கள் என கண்டறியப்பட்ட 51,447 குழந்தைகளில் இந்த ஆண்டு 43,838 குழந்தைகள் முறையான பள்ளிக் கல்விமுறைத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். துணையாளர் சேவைகளை அளித்தல், வெகு தூரத்தில் உள்ள மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளிலிருந்து குழந்தைகளைக் கொண்டுவர சிறப்புப் பயண வசதிகள் வழங்குதல் மற்றும் இடம் பெயர்ந்த தொழிலாளர்களின் குழந்தைகளை அருகில் உள்ள அரசுப் பள்ளிகளில் சேர்ப்பது போன்ற புதுமையான முயற்சிகள் மூலமாகவே இதனை எய்த முடிந்தது.

39. மாநிலத்தின் உயர் கல்வித் தரத்தை உயர்த்த எண்ணிலடங்கா முன்முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. ஸ்ரீரங்கம் தொகுதியில் இந்தியத் தகவல் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் தேசியச் சட்டப் பள்ளி ஆகியவற்றை அமைத்தல், பல புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் மற்றும் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளை பின்தங்கிய பகுதிகளில் தொடங்கியது போன்றவை சில குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளாகும். தவறான நிருவாகத்தால் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சரிவடைய இருந்த நேரத்தில், நிருவாக

[2014 ஜனவரி 31

அலுவலரை நியமித்து இந்த அரசு நிருவாகப் பொறுப்பை ஏற்றது. 2013 ஆம் ஆண்டு இந்த அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவை, இம்மாமன்றம் நிறைவேற்றியுள்ளதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அறிவர். மேதகு குடியரசுத் தலைவர் அவர்களால் இந்தச் சட்டமுன்வடிவுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, இது சட்டமாக நடைமுறைக்கு வந்துள்ளது என்பதை நான் மகிழ்ச்சியோடு குறிப்பிட விரும்புகின்றேன். இதன்மூலம், மாநிலத்தில் பெரும் எண்ணிக்கையிலான இளைஞர்கள் பயன்பெற்று வந்த 84 ஆண்டு கால நிறுவனத்தின் பெருமை முழுமையாக மீட்டெடுக்கப்பட்டுள்ளது.

40. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மக்களை கவர்ந்திழுக்கும் கருணைமிக்க தலைமையின்கீழ், முழுமையான மருத்துவ சேவைகளை அளிப்பதில் இந்தியாவிலேயே முன்மாதிரி மாநிலமாகத் தமிழகம் உருவெடுத்துள்ளது. முதல் நிலை மற்றும் இரண்டாவது நிலை மருத்துவ வசதிகள் கணிசமாக விரிவுபடுத்தப்பட்டுள்ளன. மாநிலத்தில் பொது சுகாதாரச் சேவை உயர்ந்த தரத்தை எட்டிட, தேசிய கிராமப்புற சுகாதார இயக்கமும், தமிழ்நாடு சுகாதார அமைப்புகள் திட்டமும் பெருமளவு உதவி புரிந்துள்ளன. முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், 1 கோடியே 29 இலட்சம் குடும்பங்களுக்கு மருத்துவக் காப்பீடு வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 5,84,554 பேருக்கு 1,255.85 கோடி ரூபாய் அளவிற்கு இத்திட்டம் பயனளித்துள்ளது. நமது மாநில அரசின் முன்முயற்சிகளை, குறிப்பாக பேறுகாலத் தாய்மார்கள் மற்றும் பச்சிளம் குழந்தைகள் இறப்பு விகிதத்தைக் குறைப்பதில் எய்தப்பட்டுள்ள சாதனைகளை, மத்திய அரசும் பாராட்டியுள்ளது. பதின்மூன்றாம் நிதிக் குழுவின் பரிந்துரையின்படி, செயல்பாட்டின் அடிப்படையில் வழங்கப்படும் ஊக்க நிதியிலிருந்து 2013-2014 ஆம் ஆண்டிற்கான ஊக்கத் தொகையாக 149.51 கோடி ரூபாயையும் மாநிலம் பெற்றுள்ளது.

41. சமூகப் பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள பிரிவினரின் நலனுக்காக பல திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. இந்த வகையில், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் இனங்களைச் சார்ந்த 10,61,561 மாணவ, மாணவியர் 274.47 கோடி ரூபாய் கல்வி உதவித் தொகையாகப் பெற்று வருகின்றனர் என்பது மன நிறைவளிக்கிறது. உயர் கல்வி



2014 ஜனவரி 31]

உதவித் தொகைத் திட்டத்தின் பலனை, தனியார் கல்லூரிகளில் பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியர்களுக்கும் விரிவுபடுத்திய இந்த அரசின் முக்கிய முடிவு ஒரு கல்விப் புரட்சியை ஏற்படுத்தி இம்மாணவர்களை உயர் கல்வியின் மைய நீரோட்டத்திற்குள் கொண்டுவந்துள்ளது. இதற்காக மட்டும், 2013-2014 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான உயர் கல்வி உதவித் தொகைத் திட்டத்தின்கீழ் ஒதுக்கிய 396.88 கோடி ரூபாய் நிதியை 936.46 கோடி ரூபாயாக இந்த நிதியாண்டில் இந்த அரசு உயர்த்தியுள்ளது. சமுதாயத்தில் மிகவும் பின்தங்கியுள்ள பிரிவுகளைச் சேர்ந்த இலட்சக்கணக்கான ஏழை மாணவர்களுக்கு புதியதொரு வாய்ப்பினை வழங்கியிருக்கும் இந்த அரசின் முடிவை நான் வரவேற்கிறேன். இது தவிர, இந்த மாணவர்களுக்கான தங்குமிட வசதிகளை மேம்படுத்தி, அவர்கள் கல்வி பயில்வதற்கு ஏதுவான நல்ல சூழலை ஏற்படுத்திட கணிசமான முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதும் மன நிறைவளிக்கிறது.

42. மற்ற மாநிலங்கள் கண்டு வியக்கும் வண்ணம் பல தனிச் சிறப்பு வாய்ந்த நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, முன்மாதிரியான மக்கள் நலம் பேணும் மாநிலமாகத் தமிழகம் திகழ்கிறது. தேசிய அளவில் பின்னர் செயல்படுத்தக்கூடிய திட்டங்களை முன்னரே செயல்படுத்தி, தேசியத் திட்டங்களுக்கு முன்னோடியாக நமது மாநிலம் விளங்குகிறது. பல்வேறு சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்கள் மூலமாக மாதந்தோறும் 1,000 ரூபாய் உதவித் தொகை அளித்து, 37 இலட்சம் பயனாளிகளுக்கு வாழ்வாதாரத்தை உறுதிசெய்யும் வகையில் மாநிலத்தில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஆண்டுதோறும் இத்திட்டங்களுக்கான ஒதுக்கீட்டை உயர்த்தி, தற்போது 4,000 கோடி ரூபாய்க்கும் மேலாக இத்திட்டங்களுக்கு இந்த அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. திருமண உதவித் திட்டங்கள், மாற்றுத் திறனாளிகள், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான நலத் திட்டங்கள் ஆகியவற்றை செயல்படுத்தும் இந்த அரசின் போற்றத்தக்க முன்முயற்சிகள், சமூகப் பொருளாதார நிலையில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு வாழ்வாதார உதவியை உறுதிசெய்யும் முன்னோடி மாநிலமாக நமது மாநிலத்தை முன்னிறுத்தியுள்ளன.

43. இந்த அரசின் கொள்கைகள் மற்றும் முன்னோடி முயற்சிகளை நான் விரிவாக எடுத்துரைத்துள்ளேன்.

தொலைநோக்குப் பார்வையும், மதிநுட்பமும் கொண்ட நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையின்கீழ், மாநிலம் மேலும் முன்னேற்றம் காணும் என நான் முழுமையாக நம்புகிறேன். வரவிருக்கும் கூட்டத் தொடரில் மாநிலத்தின் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் குறித்து விவாதம் செய்யப்பட்டு, மக்களின் வாழ்வினை மேம்படுத்தத் தேவையான மேலும் பல முன்முயற்சிகள் தொடங்கப்படும் என நான் நம்புகிறேன். மீண்டும் ஒருமுறை எனது கனிவான புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்து எனது உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி

வணக்கம்

ஜெய்ஹிந்த்